Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

மே 14 - 20, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1118



## மாற்றம் ஒன்றுக்கான மாற்றம்



## கூட்டமைப்பின் திருவிழா ?



## நேபாளத்தில் இந்திய ஊடக தர்மம்



## மது ஒழிப்புக்கான மக்கள் போராட்டம்



# ஏழு சிரஞ்சீவிகள் வழிபாடு

புராணங்களில் ஏழு சிரஞ்சீவிகள் உண்டு அவர்கள் அஸ்வத்தாமன், பரசுராமன், மார்க்கண்டேயன், ஹனுமான், விபீஷணன், மாபலி சக்ரவர்த்தி, வியாசர் - இந்த ஏழு பேருமே புராணங்களில் சிரஞ்சீவிகளாக கூறப்படுபவர்கள்.

இவர்கள் ஏழு பேருமே சிவாலயங்களையும் சிவனையும், அங்கிருக்கும் மற்ற தெய்வங்களையும் பாதுகாப்பவர்கள். நாம் எப்போதும் சிவாலய தரிசனம் முடித்ததும், ஐந்து நிமிடமோ அல்லது பத்து நிமிடமோ கோயிலில் அமர்ந்துவிட்டு கிளம்புவோம்.

அப்போது அந்த ஏழு சிரஞ்சீவிகளான அஸ்வத்தாமன், பரசுராமன், மார்க்கண்டேயன், ஹனுமான், விபீஷணன், மாபலிசக்ரவர்த்தி, வியாசர் ஆகியோர் நம்முடன் பாதுகாப்பாக வீடுவரை வருவதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

அதனால் கோயிலுக்குச் சென்றுவிட்டு வேறு எங்கும் செல்லாமல் நேரே நம் வீட்டிற்கு வந்து விளக்கேற்றி ஏழு சிரஞ்சீவிகளான அஸ்வத்தாமன், பரசுராமன், மார்க்கண்டேயன், ஹனுமான், விபீஷணன், மாபலி சக்கரவர்த்தி, வியாசர் இவர்களை வரவேற்க வேண்டும் என்பது ஐதீகம்.

அதனால் வீட்டிற்கு வந்தவுடன் இவர்களை நினைத்து பூஜை செய்து விளக்கேற்றி வழிபடுவது வீட்டுக்கு சகல ஐஸ்வர்யங்களையும் தரும் என்பது நம்பிக்கை.

ஆன்மீகம்

# அமைதி தரும் யேசு

இன்றைய நற்செய்தியில் இயேசு நம் அனைவருக்கும் அமைதியைத்தருகிறார். அமைதி என்கிற வார்த்தை, விவிலியத்தில் 'ஷலோம" என்கிற வார்த்தை அமைதியைக்குறிக்கிறது. இங்கே பயன்படுத்தப்படும் இந்த வார்த்தை சாதாரண மௌனத்தைக்குறிக்கக்கூடிய சொல் அல்ல. பிரச்சனை இல்லாத தன்மையைக்குறிப்பதும் அல்ல. 'ஷலோம்' என்கிற வார்த்தையின் உண்மையான பொருள் ஒரே வார்த்தையில் நாம் விளக்கமுடியாது. அது நெருக்கடியிலும் மனஉறுதியோடு இருக்கும் நிலை. எதைப்பார்த்தும் பயப்படாத, துணிவுள்ள, நம்பிக்கையுள்ள தன்மை. வாழ்வின் எந்த நிகழ்வுகளிலும் சோர்ந்து போகாத நிலை. அதுதான் இங்கே அமைதி என்கிற ஆசீராக இயேசுவால் கொடுக்கப்படுகிறது.

புனிதர்களின் வாழ்வும், திருத்தூதர்களின் வாழ்வும் நமக்கு மிகப்பெரிய சவாலாக பல வேளைகளில் அமைகிறது. எப்படி அவர்களால் இவ்வளவு துன்பத்திலும் மகிழ்ச்சியாக வாழமுடிந்தது? என்ற கேள்வி நமக்குள் அடிக்கடி எழக்கூடிய ஒன்றாகும். அந்த துயரமான நேரத்திலும் எப்படி அவர்களுக்கு மனஉறுதி இருந்தது என்று நம் மனது அடிக்கடி நிச்சயம் நமக்குள்ளாக இருந்து கேட்கும்? இயேசுவின் அமைதி என்கிற கொடைதான் இந்தக் கேள்விகள் அனைத்திற்குமான விடை.

நாமும் ஆண்டவரிடம் இந்த அமைதி என்கிற கொடையைப் பரிசாகக் கேட்போம். நமது வாழ்வில் சிறு துன்பம் வந்தாலும் நாம் தவித்துப் போகிறோம்.

# வட்டியைத் தவிர்ப்போம்

விசுவாசங் கொண்டோரே அசலுக்கதிகமாகவும், வட்டிக்கு வட்டியாகவும் இரட்டிப்பாக்கப்பட்டு பன்மடங்காக்கப் பட்ட நிலையில் வட்டியை உண்ணாதீர்கள். இன்னும் அல்லாஹ்வுக்கு பயந்துகொள்ளுங்கள். இதனைத் தவிர்த்துக்கொண்டால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.

அல்குர்ஆன் 3:130

இவ்வாறு அல்லாஹ் அவனது அல்குர்ஆனில் கூறுவதை எமது பகுத்தறிவுமூலம் நாம் சிந்தித்துப் பார்த்தால் இது உண்மைதான்.

வியாபாரம் உடல் உழைப்பின்மூலம் எமக்கு வருமானத்தைத் தருகின்றது. ஆனால் வட்டியோ உடல் உழைப்பின்றி வருமானத்தைக் கொடுக்கிறது. அதனால்தான் அல்லாஹ் நமக்கு வியாபாரத்தை ஆகுமாக்கினான். வட்டியை ஹராமாக்கினான்.

ஆகவே வியாரபாரத்துக்கும் வட்டிக்குமான இடையிலான வேறுபாட்டை விளங்கிக்கொண்டு வட்டியை தவிர்ப்போம்.

**எம்.சி.கலீல், கல்முனை - 05**

## கவிதைப்போட்டி 1115



### பாராட்டுக்குரியது

நேர் கொண்ட பார்வை
நெஞ்சினில்
எதையும் தாங்கும் உரம்
சைக்கிள் சுமையைவிட
இதயத்தில் இழப்பின்
கனம் அதிகம்.
ஆனாலும்
வலிகள் பல கடந்தும்
உளமுடைந்து போகாமல்
ஊருக்கு உதாரணமாய்
உழைப்பால் உயர்ந்து;
புதுயுகம் படைக்க
புறப்பட்டுவிட்டாயே.

**விஜியகண்ணன்,**
**யாழ்ப்பாணம்.**

# கவிதைப் போட்டி இல 1118



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25. 05. 2015

**கவிதைப் போட்டி இல. 1118 தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**
**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## தலைவி

தலைவன் இல்லாத தலைவி
தலைமைத் தாங்குகிறாள்
குடும்பச்சுமை
தனித்து வாழும் தைரியமோ
தன்னகத்தே இருக்கும்போது
தரணியிலே தான் வாழ்வதற்கு
தயக்கம் எதற்கு என
தலை தாங்கும் பண்டங்களை
தனியாகச் சுமக்கின்றாள்
சைக்கிளிலே.

இளம்பிறை.
புத்தளம்.

## விதவை

விதைத்தவனின் விளையாட்டிலே
விதவை - ஆனாலும் தனக்கு
வீரம் உண்டு உள்ளத்திலே - என
வீட்டுச் சுமைகள் தாங்கியே - அவள்
விரைகின்றாளோ சைக்கிளிலே
வாழ்வின் விடியலை நோக்கி.

அநுராதபுர வீதி.

## நம்பிக்கை

இனந்தெரியாதோரால்
கடத்தப்படும் முன்னர்
என் மூத்த மகன்
சந்தைக்குச் சென்று வந்தான்.
காடையர்களால் தன் கற்பு
சூறையாடப்படும் முன்னர்
என் இளைய மகள்
சந்தைக்குச் சென்றுவந்தாள்.
இப்பொழுதெல்லாம் நான்
சந்தைக்குச் சென்றுவருகிறேன்
நல்லாட்சியில் இப்படியெல்லாம்
நடவாதென்ற நம்பிக்கையால்.

ஆ.சந்தியாகோ.
கண்டி.

## வீதி விபத்துக்கள்

சந்தைக்குச் சென்று
சாலையில் வரும் பெண்ணே!
பாதையில் உனக்கு
பார்வை அவசியம் - வீதி விபத்துக்கள்
விதி அல்ல தெரு விதிமுறைகள்
தெரியாக் காரணமே.

எம்.சி. கலீல்.
கல்முனை - 05.

# உங்கள் பக்கம்

## முதலைகள் அச்சத்தில் மக்கள்

அம்பாறை, ஒலுவில் களியோடை ஆற்றிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதால் மக்கள் அச்சத்துடன் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

களியோடை ஆறு இங்குள்ள நெற்செய்கைக் காணிகளுக்கு நீர் வழங்கும் மார்க்கமாகவும் நீர் வெளியேற்றும் மார்க்கமாகவும் காணப்படுகின்றது.

முதலைகள் ஆற்றைவிட்டு வெளியேறி ஆற்றின் மருங்குகளிலும் வயல் வரம்புகளிலும் திரிகின்றன. இதனால் வயல்களுக்குள் இறங்கி வேலைசெய்ய முடியாதுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் அண்மைக்காலமாக முதலைக் கடிக்கு பலர் ஆளாகியுள்ளமையால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர். இவ் உழைப்பையே நம்பியிருக்கும் விவசாயிகளாகிய நாங்கள் இறங்கும்போதே மரண பயத்துடன் வயல்களுக்குள் கால் வைக்கவேண்டிய நிலை காணப்படுவதாக கவலைகொள்கின்றனர்.

எனவே, முதலைகள் அதிகமாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்ற எச்சரிக்கை பதாதைகள், சமிஞ்ஞைகளை மக்களின் பார்வைக்காக வைக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்குரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றனர்.

**ப.சீலன், அம்பாறை.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax):. 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


## அமைதியின் சொற்கள்

"உங்களுடைய அன்பில் எளிமையை சேருங்கள். அந்த அன்பு தூய்மையாகி விடும். அது சிக்கலானது இல்லை. நீ அதைச் செய். நான் இதைச் செய்கிறேன் என்பது போல் இல்லை. அன்பு. எளிமை. பிறகு திடீரென்று. நீங்கள் ஏதோ ஒன்றை உணரமுடியும். அந்த ஒன்றை உணர்ந்து இன்புற முடியும். அந்த ஒன்று உங்கள் இதயத்தைத் தொடுவதை உணரமுடியும்."

**இணையத்தளம்: www.wopg.org**
**- பிரேம் ராவத்**




## தமிழரின் உயிரான தினமுரசு

தமிழரது நெஞ்சங்களில்
உயிராய் நீ வாழ்ந்து!
சோதனைகள் பலவந்தும்
வீறுநடைபோட்டு!
சாதனைகள் பல புரிந்து
தரணியெல்லாம் நீ வாழ!
தமிழரது உயிர்மூச்சாய்
முரசே நீ வாழ!
ஆயிரமாம் இதழில் தடம்பதித்த நீ
பல்லாயிரம் இதழ் காணவேண்டும்
வாசகர் கைகளில்
தினம் தினம் நீ தவழ!
பல்லாண்டு காலம் நீ
வாழ வாழ்த்துகிறோம்!!!

த.விதுஷிகா, வவுனியா

# வாசகர்சாலை

## சிறப்பு!

தனக்கென சிறப்பான இடத்தைப் பிடித்திருக்கும் தித்திக்கும் தினமுரசே! உலக மாறுதலுக்கு ஏற்ப மாற்றங்கள் நிச்சயம் தேவையான ஒன்று தான். அந்தவகையில் முரசில் நிறையவே மாற்றங்கள் ஏற்படவேண்டும். கட்டுரைகளின் பங்குதான் வீதத்தில் அதிகமாக இருக்கிறது. சுவாரசியங்கள் குறைவு, சுவையும் இல்லை. சூடும் அதிகமாக இல்லை.

சு.காவியன், வத்தளை

## பக்கபலம்

வெளிநாட்டுக் கட்டுரைகளை வாராவாரம் அம்சமாகவும், அழகாகவும், சிறப்புறத் தரும் வேணு கிருஷ்ணாவுக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுக்கள். இக்கட்டுரைகளை வாசிப்பதில் எனக்கு அலாதிப்பிரியம். அதுவும் வெளிநாட்டு நடப்புக்களை அறிந்துகொள்ள நிறையவே ஆர்வம். வேணுவின் கட்டுரைகள் எனது அறிவுக்கு பக்கபலமாக இருக்கிறது.

**எம்.இஸ்மாயில், நிந்தவூர்.**

## வாழ்த்துக்கள்

தினமுரசு வாரமலர் அள்ளிவரும் அனைத்து அம்சங்களுமே சிந்தையை தொடுகின்றது. உன்னில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களுமே தெரியாத பல விடயங்களை விரிவாக அறியமுடிகின்றது. சமுதாயத்திற்கு ஏற்ற செய்திகளை தாங்கிவருவதில் தினமுரசுக்கு நிகர் தினமுரசே. உன்னில் பேனா நண்பர் பகுதி ஆரம்பதித்தால் மேலும் சிறப்புறுமல்லவா.

**யோ.சிவசங்கர், அம்பாறை.**

# அரசியல் முக்கியஸ்தர் கொலை செய்யப்படலாம்

## சர்வதேச புலனாய்வுத் தகவல் எச்சரிக்கை

**இலங்கையில் உயர்மட்ட வரிசையில் உள்ள நபர் ஒருவரை கொலை செய்வதற்கு தீவிரமான சூழ்ச்சிகள் மேற்கொண்டிருப்பதாக சர்வதேச புலனாய்வு சேவை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்து உள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சர்வதேச புலனாய்வு பிரிவின் தகவல்களுக்கு அமைய கடந்த அரசாங்கத்தில் பல மோசடிகளுடன் தொடர்புபட்ட நபர்கள் இச்சூழ்ச்சியின் பின்னணியில் இருப்பதாக சிங்கள ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.**

ஊழல் மோசடியில் தொடர்புபட்ட பாதுகாப்பு பிரிவு மற்றும் நபர்களின் நல்லாட்சி அரசாங்கத்தின் வருகையால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் இந்த சூழ்ச்சித் திட்டத்தினை மேற்கொண்டிருப்பதாக சர்வதேச புலனாய்வு தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இப்புலனாய்வு பிரிவின் ஆய்வுக்கு அமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு 100விகித பாதுகாப்பு பிரச்சினை உள்ளதுடன் அதற்கு அடுத்தபடியாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு 85விகித பாதுகாப்பு பிரச்சினை உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ராஜபக்ச ஆட்சியின்கீழ் பல வரப்பிரசாதங்கள், வெளிநாட்டு சுற்றுலா மற்றும் தரகு பணம் பெற்றுக் கொண்ட முப்படை அதிகாரிகள் சில நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக பழிவாங்கும் திட்டத்தில் ஈடுபடுவதனை ஆதாரத்துடன் நிருபிக்கக்கூடிய சாட்சிகள் காணப்படுவதாக சர்வதேச புலனாய்வு சேவை இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளிடம் அறிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக் கப்படும் அனைத்து திட்டங்களும் ஒரு மணித் தியாலத்திற்குள் முன்னாள் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவிற்கும் தகவல் வழங்கும் அளவிற்கு அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களுக்கு விசுவாசமாக உள்ளதாக தெரிய வந்துள்ளது.

சர்வதேச புலனாய்வு சேவையின் இந்த கருத்தை ஒரு கற்பனை என நினைத்து இலங்கை பிரபுக்கள் பாதுகாப்பு சேவை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்காலத்தில் அவர்கள் மோசமான விளைவுகளை எதிர்கொள்ளநேரிடும் என்பது நிச்சயம் என சர்வதேச புலனாய்வு சேவை எச்சரித்துள்ளது. இப்படி ஒரு செய்தியை உண்மை யாக்குவதற்கு எதிர்காலத்தில் முக்கியமான புள்ளி ஒருவரை சூழ்ச்சியாளர்களே கொலை செய்யக் கூடுமென்ற எச்சரிக்கையையும் குறித்த சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## சிறுமிகளை நிர்வாணப்படுத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகள்



ஈராக் மற்றும் சிரியாவின் பகுதிகளை கைப்பற்றிய ஐ.எஸ். தீவிர வாதிகள், பெண்கள் மற்றும் சிறுமி களை கடத்திச் சென்று பாலியல் அடிமைகளாக வைத்துள்ளனர்.

கடத்தப்பட்ட சிறுமிகளை தோகுக் மற்றும் மொசூல் நகருக்கு, மிருகங்களைக் கொண்டு செல்வதைப்போல கப்பல்களில் அடைத்துக்கொண்டு சென்று, பின்னர் அவர்களை நிர்வாணப்படுத்தி நிற்கவைத்து, விலைபேசி விற்றுவருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இவ்வாறு விலைக்கு வாங்கப்படும் சிறுமிகள், ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் அந்த இயக்க தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

ஒரு பெண்ணை சுமார் 20 பேருக்கு கட்டாயப்படுத்தி திருமணம் செய்துவைப்பதாகவும், ஒவ்வொரு முறையும் அந்த பெண்ணின் கற்புநிலையை சரிசெய்வதற்காக சத்திரசிகிச்சை நடத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

'பாலியல்' அடிமைகளாக இருந்து, பின்னர் மீண்டுவந்த சிறுமிகளே இக்கொடூரச் சம்பவங்கள் குறித்து தெரிவித்துள்ளனர்.

## ஓசாமாவைக் காட்டிக்கொடுத்த பாகிஸ்தான் அதிகாரிகள்

### 2.5 கோடி டொலருக்கு



அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் மறைவிடம் குறித்த தகவலை 2.5 கோடி டொலர் பெற்று, அமெரிக்க புலனாய்வு துறையிடம், பாகிஸ்தான் அதிகாரிகள் பகிர்ந்துகொண்டனர் என்று இஸ்லாமாபாத் திலிருந்து வெளிவரும் டான் நாளிதழில் செய்தி வெளியாகி உள்ளது. டான் நாளிதழில் அமெரிக்க புலனாய்வு பத்திரிகையாளரும் மற்றும் ஆசிரிய ருமான சேய்மோர் எம்.ஹெரிஸ் இது குறித்து ஆய்வு செய்து கட்டுரை எழுதியுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: முன்கூட்டியே தெரியும்: பாகிஸ்தானின் இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் குறித்து ஹெரிஸ் கூறுகையில், பாகிஸ்தான் இராணுவத்தின் மூத்த அதிகாரிகளான ஜெனரல் ஆஷிப் பர்வேஷ் கியானி, மற்றும் ஜெனரல் அஹமது சுஜா பஷா ஆகியோர் தங்களுக்கு அமெரிக்காவின் நடவடிக்கை குறித்து முன்கூட்டியே ஏதும் தெரியாது என்று தெரிவித்துள்ளனர். இது முற்றிலும் பொய்.

ஒசாமாவின் இருப்பிடத்தை செயற்கைக்கோள் மூலம் கண் காணித்தது, அவன் இருப்பிடத்தின்மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட அறிக்கை அனைத்தையும் பாகிஸ்தானிடம் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். அதற்கு ஒசாமா பின்லேடன் கொல்லப்படவேண்டும், ஆனால், ஒருவாரத்திற்கு பின்பே, வெளி உலகத்திற்கு ஒசாமாவின் இறப்பு தெவிக்கப்படவேண்டும் என்று ஐ.எஸ்.ஐ. அமெரிக்காவிடம் தெரிவித்திருந்தது.

ஒசாமா பின்லேடன் அபோட்டா பாத்தில் பதுங்கியிருந்தது, சவூதி அரேபியா அரசுக்கு நன்கு தெரியும். ஒசாமா கொல்லக்கூடாது, அவரை கைதியாகவே வைத்திருக்க ஐ.எஸ்.ஐ. அமைப்பை சவூதி அரேபியா அரசு கேட்டுக்கொண்டது.

அதேபோல, ஒசாமாவையும் சிறைக் கைதியாகவே ஐ.எஸ்.ஐ. நடத்தி, அவனை வெளியேவிடாமல் பார்த்துக் கொண்டது. அதுமட்டுமல்லாமல், ஒசாமா, பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தான் மலைப்பகுதியில் பதுங்கியிருந்தானா என்பது வெளியுலகத்திற்கு தெரியாமல் இருக்க எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல், அனைவரையும் கொல்ல வேண்டும் என்று ஐ.எஸ்.ஐ. அமெரிக்கா விடம் கேட்டுக் கொண்டது.

ஆனால், ஒசாமா கொல்லப்பட்ட விஷ யத்தை அமெரிக்க அதிபர் ஒபாமா, பாகிஸ்தானின் அதி காரிகளை ஆலோசிக் காமல் தெரிவித்து விட்டார். இதனால், பாகிஸ்தானின் ராணுவ மரியாதை வெளியுல கில கெட்டுவிட்டது. அமெரிக்க சி.ஐ.ஏ. வுக்கு ஒசாமா மறை விடம் குறித்து தகவல் அளித்த டாக்டர் சாகில் அப்ரிதி தற் போது பெஷாவர் சிறையில் உள்ளார். உண்மை வெளிவந்து விடக்கூடாது என்ப தற்காக, இவரை கேடயமாகப் அமெ ரிக்காவும், பாகிஸ் தானும், பயன்படுத்திக் கொண்டுவருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஓசாமாவையும் சிறைக் கைதியாகவே ஐ.எஸ்.ஐ. நடத்தி, அவனை வெளியே விடாமல் பார்த்துக்கொண்டது. அதுமட்டு மல்லாமல், ஓசாமா, பாகிஸ் தான் அல்லது ஆப்கானிஸ் தான் மலைப்பகுதியில் பதுங்கியிருந்தானா என்பது வெளியுலகத்திற்கு தெரியாமல் இருக்க எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல் அனைவரையும் கொல்ல வேண்டும் என்று ஐ.எஸ்.ஐ. அமெரிக்காவிடம் கேட்டுக்கொண்டது.**

### 2.5 கோடி டொலர் பரிசு

அமெரிக்க இராணுவம் இந்த நடவடிக்கையை வெற்றிகரமாகச் செயற்படுத்த, பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பின் முக்கிய அதிகாரி களே காரணம். ஐ.எஸ்.ஐ. அமைப்பின் முக்கிய இரு அதிகாரிகள் ஒசாமா பின்லேடன் மறைவிடம் குறித்து அமெரிக்க இராணுவத்திடம் தகவல்களை பகிர்ந்துகொண்டனர். கடந்த 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், இஸ்லாமா பாத்தில் இருந்த அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ அதிகாரி ஜோனா தன் பேங்கை, பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. அமைப்பின் முக்கிய இரு அதிகாரிகள் தொடர்புகொண்டனர்.

அந்த இருவரும், பாகிஸ்தானில் ஒசாமா பதுங்கியிருந்த இடம் குறித்த தகவல்களை பகிர்ந்துகொண்டு, அதற்கு பலனாக, 2.5 கோடி டொலர்கள் பரிசுத் தொகையும் பெற்றுச்சென்றனர். இந்த இருவரும் தற்போது வாஷிங்டனில், அமெரிக்க சி.ஐ.ஏ. அமைப்புக்காக பணி செய்துவருகின்றனர். அவர்கள் யாரென்று இதற்குமேல் கூறமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

### ஒப்பரேஷன் நெப்டியூன் ஸ்பியர்

வாஷிங்டனில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தலைமையிடம் பென்டகன், நியூயோர்க்கில் உள்ள இரட்டை கோபுரம் ஆகிய தாக்குதல்களை கடந்த 2001ஆம் ஆண்டு, செப்டம்பர் 11ஆம் திகதி அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்தினர். இதில் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இதற்கு மூளையாக இருந்து செயற்படுத்தியவர் அந்த இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன்.

இவரைப் பிடிக்க அமெரிக்கா தீவிரம் காட்டி, ஒப்பரேஷன் நெப்டியூன் ஸ்பியர என்றபெயரில் நடவடிக்கை எடுத்தது. இந்த நடவடிக்கை யின் பலனாக, கடந்த 2011, மே, 2ஆம் திகதி பாகிஸ்தானின் அபோட்டாபாத் பகுதியில் பதுங்கியிருந்தபோது ஒசாமாவை அமெரிக்க இராணுவம் சுட்டுக்கொன்றது.

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## துயரம் பகிர பொதுத்தினம் அவசியம்

மே மாதம். பத்தொன்பதாம் திகதியை மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் போர் வெற்றி நாளாகக் கொண்டாடிவந்துள்ளது. ஆனால் தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பாலவின் அரசாங்கம் அதை போரினால் இறந்துபோன அனைவரினதும் நினைவு நாளாக அனுஷ்டிக்கும். அப்படியொரு அறிவிப்பை விரைவில் வெளியிடும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறிவருகின்றது.

2009ஆம் ஆண்டு பதினெட்டாம் திகதி நந்திக் கடலோரம் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியது. அத்துடன் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்குமிடையே நடைபெற்றுவந்த அழிவு யுத்தம் முடிவுக்கு வந்தது.

இதை இலங்கை அரசு, சிங்கள மக்களின் பக்கமிருந்து பார்த்தார். அந்த யுத்த வெற்றி மகத்தானது. நினைவு கூரக்கூடியதுதான். ஆனால் மறுபக்கமாக தமிழ் மக்களின் பக்கமாக இருந்து பார்த்தால் யுத்தம் முடிவுக்கு வந்ததை வர வேற்றாலும் அந்த யுத்தத்தில் இறுதிவரை தமிழ் மக்கள் பல்லாயிரம் உயிர்களை பலி கொடுத்திருக்கின்றார்கள் என்றவகையில் யுத்தம் முடிவுக்குவந்த நாளை துக்க நாளாகவே நினைவுபடுத்திக் கொள்வார்கள்.

ஆனால் யுத்தத்தினால் பலியாகிய பல்லாயிரம்பேர்களை நினைவுகூரவோ. கூட்டு சம்பிரதாயக் கடமைகளை செய்யவோ தமிழ் மக்களுக்கு முடியாத சூழலே கடந்த ஐந்து ஆண்டுகளாக இருந்துவந்தது.

தற்போது நாட்டில் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் யுத்தத்தால் பலியாகிப்போன அத்தனைபேரினதும் நினைவாக பொதுவான நாளொன்றை தீர்மானித்து உறவுகளைப் பிரிந்த உறவுகள் நினைவுநாள் அனுஷ்டிக்கவும். காரியங் களைச் செய்யவும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்னர் மகிந்த ராஜபக்சவிடமும். தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும். ஈ.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து கோரிக்கை விடுத்துவருகின்றார். தற்போதைய அரசின் பங்காளியாக தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கத்துவம் வகிக் கும் கூட்டமைப்பினர். தமிழ் மக்களுக்கு பொதுவான துக்க தினம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் கோரிக்கைக்கு மேலும் வலிமை சேர்த்து முயற்சிசெய்தால் அது தற்போதைய சூழலில் சாத்தியமாகும்.

அதைச் செய்யாமல். அரசை நம்புகின் றோம். அரசை நம்பச் சொல்லி சர்வதேசம் எமக்குச் சொல்கின்றது என்று சிலரும். மே பதினெட்டை தமிழ் மக்கள் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென சிவாஜிலிங்கம் போன்ற சிலரும் கூட்டமைப்புக்குள் முரண்பட்ட கருத்துக் கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

அதைவிடுத்து தேசிய நிறைவேற்றுச் சபையில் இருந்துகொண்டும் ஒன்றையும் செய்யமுடியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துகொண்டும் ஒன்றையும் செய்யமுடியவில்லை. ஒரு வருடமாகியும் மாகாண சபையை வைத்துக்கொண்டும் ஒன்றையும் செய்யமுடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒற்றுமையோடு பதிவுசெய்து கொள்ளமுடியவில்லை என்றெல்லாம் கூட்டமைப்பினர் ஒரே மேடைகளிலேயே முரண்பட்டு நிற்கும் நிலையை மாற்றி. தமிழ் மக்களின் நலனுக்காக சிந்திக்கவும். செயற்படவும் வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை கூட்டமைப்பினர் தொடர்ந்தும் புறக்கணித்து ஒருவரை ஒருவர் காலை வாரிவிடும் சுய இலாப அரசியலையே தொடர்வார்களாக இருந்தால் இனிவரும் தேர்தல்களில் மக்கள் தவறுகளை திருத்தி எழுதுவார்கள் என்பது நிச்சயம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.





# மாற்றம் ஒன்றுக்கான மாற்றம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இன்னால் ஜனாதிபதி மைத்திரிபாலவும் இரு துருவங்களாகவே இருப்பார்கள் என்றே பலரும் சிந்தித்திருப்பார்கள். அவர்கள் ஒரு-வரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவே வாய்ப்பு ஏற்படாது என்றும் நினைத் திருப்பார்கள். இந்த நினைப்புகளை இருவருக்குமிடையிலான சந்திப்பு தவிடு பொடியாக்கியுள்ளது.

இருவரையும் சந்திக்கச் செய்வ தற்கான முயற்சியை சுதந்திரக் கட்சியிலுள்ள மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முன்னெடுத்திருக்கின்றார்கள். இந்த சந்திப்புக்கான இணக்கத்தைப் பெற்றுக்கொண்டே 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு அவர்கள் ஆதரவையும் வழங்கியுள்ளார்கள்.

இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்து தேர்தல் வேட்பு மனுக்களை தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்க வந்திருந்தபோது சந்தித்துக் கொண் டார்கள். அதன்பின்னர் நூற்றிப் பதினைந்து நாட்களுக்குப்பின்னர் காலத்தின் கட்டாயத்தினால் சந்தித்திருக்கின்றார்கள்.

இந்தச் சந்திப்புக் குறித்து பல்வேறுவிதமான செய்திகளும், விமர்சனங்களும் கடந்த ஒருவாரமாக பேசப்பட்டது. அதில் முக்கியமான விடயம் என்னவென்றால் நாடாளு மன்றத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சுதந்திரக் கட்சிக்கா?, ஐக்கிய தேசியக் கட்சிக்கா? ஆதரவளித்து ஆட்சிப்பீடம் ஏற்றப் போகின்றார் என்பதுதான்.

மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக சுதந்திரக் கட்சி அறிவித்து தேர்தலை சந்திக்கு மானால் சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யினரும் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது உறுதியென்பதை எதிர்க்கட்சிகளே ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆனால் மகிந்தவுடன் சேர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால தேர்தலை சந்திப்பாராக இருந்தால் அது நல்லாட்சிக்கும், மாற்றமொன்றுக் காகவும் வாக்களித்த மக்களை ஏமாற்றுவதாகவும், மகிந்தவை எதிர்த்துக்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபாலவோடு அணிதிரண்டவர் களை காட்டிக் கொடுப்பதாகவுமே அமையுமென்றும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மறுபக்கத்தில் முன்னாள் ஜனாதிபதியை இன்னால் ஜனாதிபதி சந்தித்ததே மகா தவறு என்றும், ஐக்கிய தேசியக் கட்சியை புறக் கணிக்கும் செயற்பாடு என்றும் அந்தக் கட்சி ஜனாதிபதியை விமர் சிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவோ எதிர் காலத்திலும் ஜனாதிபதியோடு இணைந்து ஆட்சியை முன்னெடுத்துச் செல்வோம் என்று கூறிவருகின்றார்.

சுதந்திரக் கட்சியினரோ நாடாளு மன்றத்தில் பலமில்லாத ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கமுடியாது. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தவறான திட்டமிடலால் பொருளா தாரத்தை சரிவுக்கு இட்டுச் சென்று உள்ளார். அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளப்போவதாக தெரிவித்துவருகின்றனர்.

மறுபக்கத்தில் நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது பிரதமர் ரணில் விக்ரம சிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுள்ளதாகவும், நாடாளுமன்றத் தில் 48 உறுப்பினர்களை மட்டும் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி யினர் தொடர்ந்தும் அதிகாரத்தை கொண்டிருக்கமுடியாது என்றும் அடுத்த தேர்தலில் இவர்களை வீட்டுக்கு அனுப்புவோம் என்றும் விமல் வீரவன்ச சூளுரைத்துள்ளார்.

இறுதியாக குருணாகலையில் நடைபெற்ற மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான கூட்டம் நடைபெற்றபோது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் பங்காளிக் கட்சிகள் மட்டுமல்லாது சுதந்திரக் கட்சியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் கட்டுப்பாட்டையும் மீறி அதில் கலந்துகொண்டிருந்தனர்.

மொத்தமாக, 56 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மேடையில் மக்கள்முன் தோன்றியிருந்தார்கள். அதைப் பார்க்கும்போது, மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவதற்கான இறுதி முடிவை பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்தபின்னரே இரண்டு ஜனாதிபதிகளுக்குமிடையிலான சந்திப்பு நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்பார்க்கப்படும் இடம் ஒதுக்கப்படா விட்டால் அவர் வேறு ஒரு கட்சியின் சார்பில் பிரதமர் வேட்பாளராக களம் இறக் கப்படுவதை தடுக்கமுடியாமல் இருக்கும். தவிரவும், அப்படி ஒரு முடிவானது சுதந்திரக் கட்சியின் வெற்றிவாய்ப்பை தாரைவார்த்து ஐக்கிய தேசியக் கட்சியிடம் வழங்கியதாக அமையும். அப்படியொரு துரோகத்தை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்துகொண்டு ஜனாதிபதி மைத்திரிபால செய்வாரா? என்பதே தற்போதுள்ள கேள்வியாகும்.

இதுநாள்வரை ஜனாதிபதி மைத்திரி பாலவுடன் தேனிலவு கொண்டாடிய ஜே.வி.பி.யினரோ தற்போது நூறு நாட்கள் கடந்துள்ள நிலையில் நாடாளுமன்றத்தை கலைத்துவிடவேண்டும் என்றும், நூறு நாட்களுக்குப் பின்னரும் தேசிய நிறை வேற்றுச் சபை கலைக்கப்படாமல் இருப்பது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு எதிரானது என்றும் கூறிவருகின்றார்கள்.

எதிர்க்கட்சியினர் இன்னொரு குற்றச் சாட்டையும் வலுவாக முன்வைக்கத் தொடங்கியுள்ளார்கள். அதாவது எதிர்க் கட்சியினரை சிறைகளில் அடைத்துவிட்டு அரசியல் பழிவாங்கிக்கொண்டு இவர்கள் ஆட்சிசெய்வதற்கு தேசிய அரசாங்கம் என்றபெயரில் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இதுவா நல்லாட்சி என்றும் கேட்கத் தொடங்கியுள்ளார்கள். இதுநாள்வரை தேர்தலை தள்ளிப்போடுவதற் காக முயற்சி செய்துகொண்டிருந்த எதிர்க் கட்சிகள் தற்போது நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தலை நடத்துங்கள் என்று துணிச்சலோடு கேட்கின்றார்கள்.

மாற்றம் ஒன்றுக்கான நூறு நாட்கள் நிகழ்ச்சி நிரல் நிறைவுபெற்றுள்ள நிலையில், தேசிய அரசாங்கம் என்பதே கேலிக்கூத்தாகி உள்ளது. அரசாங்கப் பங்காளிகளாக இருப் பவர்களே பாம்பும் கீரியுமாக மாறியுள்ளார்கள். இப்போது மக்களின் ஆணையோடு அதிகாரத்தை யார் தக்கவைத்துக் கொள்வது என்ற போட்டி தலைதூக்கியுள்ளது.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபாலவோ, அதிகாரத்திற்காக நாட்டைப் பிளவுபடுத்து வதா? அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதா? என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணத்தில் நாம் இருக்கின்றோம் என்று எல்லோருக்கும் பொதுவாக கூறியிருக்கின்றார்கள்.

தற்போதைய குழப்பமான அரசியல் சூழலில் நாட்டு மக்களை குழப்பும் முரண்பாடான பல கருத்துக்களை பலரும் கூறிவருகின்றார்கள். ஆனாலும் அவற்றையெல்லாம் கடந்து அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இன, மத, மொழி ரீதியில் அனைத்துத் தரப்பினையும் ஒன்றிணைத்து இன்று தமக்கு முன்னாலுள்ள முக்கிய பணியாகும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தானது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சுதந்திரக் கட்சி பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவது என்ற முடிவை எடுத்தாலும் அதை எதிர்க்காமல் ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டியிருப்பதை மனதில் கொண்டே கூறியிருப்பார் என்றும் கருத இடமுண்டு.

அன்று மகிந்தவையும், மைத்திரியையும் பிரித்துவைத்த மாற்றமென்ற மந்திரம் இன்று அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்கவும் ஜீரணிக்கவைக்கும் மந்திரமாக மாறிவருகின்றது. நிறைவேற்று அதிகாரத்துடன் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச இப்போது மாற்றம் ஒன்றுக்கு வருகை தந்துள்ளார். தனக்கு மேலே தன்னை எதிர்த்தவர் ஜனாதிபதியாக இருக்கும் போதே பிரதமராக இருப்பதற்கான பக்குவத்தைப் பெற்றுள்ளார். இது முக்கியமான மாற்றம்.

மகிந்தவின் கரங்கள் கறைபடிந்தவை என்று சம்பிரதாயத்துக்காகக்கூட கைலாகு கொடுக்க மறுத்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால தற்போது அதே மகிந்தவை சந்திப்பதற்கும், நாளை கட்சி முடிவுசெய்து பிரதமராக்கினால் அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருப்பதற்கு முடிவு செய்கின்ற அளவுக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த ராஜ பக்சவுக்கு இடமில்லாமல் செய்யவும், அரசியலில் மகிந்த ராஜபக்சவை ஒதுக் கவும் முழுமையான திட்டமிடுபவராக கூறப்படுகின்ற சந்திரிக்கா அம்மையாரால் கூட மைத்திரி, மகிந்த சந்திப்பை தடுக்க முடியாமல் போயிருக்கின்றது.

தவிரவும் சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த ராஜபக்சவிற்கு வெளிப்படையாகவே ஆதரவாளர்களாக செயற்படுவோரை, கட்டுப்படுத்த முடியவில்லை. மகிந்தவை ஓரங்கட்டுவதாக எண்ணிக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியோடு ஜனாதிபதி மைத்திரி பாலவை தொடர்ந்தும் ஒரே வண்டியில் கட்டிவிட்டு அதை இயக்குகின்ற வல்லமையுடையவராக தொடர்ந்தும் இருக்கமுடியுமா?

இந்தக் கேள்விகளுக்கு நாடாளுமன்றத் தேர்தலே தெளிவான முடிவைக் காணப்போகின்றது.





# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

தொடர் 165

எந்த நேரமும் விழுந்துவிடுவேன் போல இருந்தது.

“கெதியாய் சுகமானால் விசாரணையை முடிக்கலாம். அம்மானுக்கு நான் ஃபைல் அனுப்பவேணும். இரண்டு மூண்டு தரம் கேட்டுப் போட்டார்” என்று சொல்லிவிட்டு அவன் வேகமாகத் திரும்பி நடந்தான். அவன்போன பின்னர் கைதிகள் சிலர் நான் திரும்பிச் சென்று எனது இடத்தில் படுத்துக் கொள்வதற்கு உதவிபுரிந்தனர்.

தயாபரனுடைய கதையிலிருந்து புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மான் எனது விசாரணைக் கோவையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

இந்த சித்திரபுத்திரன் எனது தலை விதி குறித்து என்ன தீர்ப்பை எழுதப் போகிறானோ?

**துப்புத் துலக்குபவர்களின் கேள்வியே துப்பைத் துலக்கும் சந்தர்ப்பங்கள்!**

புலிகளின் வதை முகாம்களுக்குப் பொறுப்பான காந்தி என்னைத் தாக்கியபோது கேட்ட கேள்வி என்னைப் பெரிதும் சிந்திக்க வைத்தது.

கலாநிதி கே.சிறிதரனை நான் 1990ஆம் ஆண்டில் தங்கியிருந்த மீசாலை வீட்டில் மறைத்து வைத் திருந்ததாகவும், அதன்பின்னர் அவரை இரகசியமாக கொழும்புக்கு அனுப்பி வைத்ததாகவும் அவன் என்னிடம் குற்றஞ்சாட்டியிருந்தான்.

அவன் கேட்ட விடயங்களில் பாதி உண்மையும், பாதி தவறும் இருந்தது. சிறீதரன் ஒருநாள் எனது வீட்டில் தங்கியிருந்தது உண்மை என்ற போதிலும், அவரை நான்தான் கொழும்புக்கு அனுப்பிவைத்தேன் என்ற அவனது கூற்று தவறானது.

ஆனால் எப்படியோ சிறீதரன் எனது மீசாலை வீட்டில் தங்கியது புலிகளுக் குத் தெரிந்துவிட்டது. புலிகளுக்குத் தெரிந்திருக்காது என நினைத்துத்தான் நான் புலிகளுக்குப் பொய் சொல்லி யிருந்தேன். அது தவறாகிவிட்டது.

ஆனால் இப்பொழுது கேள்வி என்னவென்றால், சிறீதரன் எனது மீசாலை வீட்டில் தங்கியது எப்படி புலிகளுக்குத் தெரியவந்தது என்பது தான். ஏனெனில் அவர் புலிகளிடம் பிடிபடவில்லையாததால், அவரிடமிருந்து புலிகளுக்கு தகவல் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. அவரை எனது வீட்டிற்கு அழைத்துவந்த நண்பர் மனோரஞ்சனிடமிருந்தும் புலிகளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அவரையும் புலிகள் கைதுசெய்ய முடியவில்லை என்பதுடன், அவரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி இருந்தார்.

நான் கடைசியாக கொழும்பு சென்றிருந்தபோது சிறீதரன் தம்பதியினரைச் சந்தித்தபோதும், மனோரஞ்சனைச் சந்திக்க முடிய வில்லை. நான் கொழும்பு சென்றிருந்த போது மனோரஞ்சன் கண்டிக்குச் சென்றிருந்தார். ஆனால் அவரது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (பி.எல்.எப்.ரி) என்ற தோழர் வி.விசு வானந்ததேவன் ஆரம்பித்த அமைப்பைச் சேர்ந்த ரஞ்சித் என்பவர்மூலமாக ஒரு தகவலை எனக்கு அனுப்பி இருந்தார். அதில் புலிகள் யாழ்ப்பாணத்தில் பலரையும் கடத்த தொடங்கி இருப்ப தாகவும், அதனால் நான் யாழ்ப்பாணம் செல்வது பாதுகாப்பானதல்ல எனவும் ஆலோசனை தெரிவித்திருந்தார்.

இவ்வாறான ஆலோசனைகளை கொழும்பில் கண்ணாடிக் கடை வைத்திருந்த எனது நீண்டகால நண்பரான ராமு அவர்களும், நான் அங்கு சில நாட்கள் தங்குவதற்கு இடமளித்த எனது கல்லூரிக்கால நண்பரான தோழர் சிறினிவாசனும்கூட கூறியிருந்தனர். இவர்கள் மட்டுமல்ல, எனக்கு சேர்ட் தைத்துத் தந்த கொழும்பு புறக்கோட்டையில் தையல்கடை நடாத்திவந்த எனக்கு முன்பின் தெரியாத மன்னாரைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் தையல்காரர் ஒருவரும் ஒருவரும் அதே ஆலோசனையைத் தெரிவித்திருந்தார். அவ்வளது தூரம் அந்த நேரத்தில் புலிகள் வடக்கில் மேற்கொண்ட கடத்தல் நடவடிக்கை கள் குறித்து பலரும் கலக்கமடைந்து இருந்தனர்.

இது ஒருபுறமிருக்க, எனது மீசாலை வீட்டைவிட்டு சிறீதரன் வெளியேறிச் சென்றபின்னர் அவரை கிளிநொச்சி கொண்டு சேர்த்து, பின்னர் பாதுகாப் பாகக் கொழும்பு அனுப்பிவைத்த தோழர்கள் இராசரத்தினம், இராசமூர்த்தி, வேல்முருகு போன்றவர்களைப் புலிகள் கடத்தி என்னை வைத்திருந்த முகாமுக்குக் கொண்டுவந்து விசாரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இவர் கள் மூலமாக சிறீதரன் எனது வீட்டில் தங்கிய விடயம் தெரிந்திருக்குமோ என நான் எண்ணவில்லை. ஏனெனில் மிகவும் ஒரு இக்கட்டான ஒரு சூழலில் சிறீதரன் எப்படி யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினார் என்ற விடயத்தை நிச்சயமாக சிறீதரனோ அல்லது மனோரஞ்சனோ அவர்களுக்குச் சொல்லியிருக்கமாட்டார்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். (பின்னர் நான் கைதுசெய்யப்பட்ட அந்தத் தோழர்களிடம் விசாரித்தபோது, அவர் களுக்கு அந்த விடயம் துப்பரவாகத் தெரிந்திருக்கவே இல்லை)

சிறீதரன் மீசாலை வீட்டில் தங்கியது, அந்த வீட்டுக்காரரான எனது மரு மகனுக்கோ, அவரது மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூடத் தெரியாது. ஏனெனில் அவர்களுக்கு சிறீதரன் யார் என்பதை நான் தெரிவித் திருக்கவில்லை. எனது மனைவிக்கு அவர் வந்தது தெரியும் என்றபோதிலும், மனைவி குழந்தை பிரசவித்திருந்த படியால், அவர் சிறிதரனைக் காண வில்லை. எனவே அவர்களில் யார் மூலமாகவும்கூட புலிகள் சிறீதரன் அங்கு வந்ததை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே யார்மூலமாக சிறீதரன் எனது மீசாலை வீட்டிற்கு வந்த தகவலை புலிகள் அறிந்துகொண்டனர் என்பது எனது மூளையைக் குடைய ஆரம்பித்தது. காந்தியின் கடுமையான தாக்குதலால் நான் உடல்ரீதியாகவும், உள ரீதி யாகவும் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருந்ததால், ஒன்றையும் தெளிவாகச் சிந்திக்கவும் இயலாமல் இருந்தது. யோசிக்க யோசிக்க குழப்பங்கள்தான் எஞ்சியது.

இந்த நிலைமையில் விசாரணை இல்லாமலே நான்கைந்து நாட்கள் கடந்துவிட்டன.

**(தொடரும்...)**

தன்னிடமிருந்த இரு சாவிகளையும் ரயில்வே அலுவலகத்துக்குள் பத்திரப் படுத்தி வைக்கப்போக அங்கிருந்து கிளம்பிய ரெயில்வே டிஸ்பாச்சர் சாம், ரயில்வே நிர்வாகம் புதிதாக நியமித்திருந்த காவலாளி, கறுப்பு உடை அணிந்த அழகிய பெண்ணுக்கு அருகே நிற் பதையும், அவர்களுக்கு அருகே விசித்திரமான ஒரு சவப்பெட்டி இருப் பதையும் பார்த்தார்.

அவர்களை நெருங்கினார்.

"இன்று தங்கம் அனுப்பப்படும் நாள். மிகவும் கவனமாக இருக்கவேண்டும். தெரிகிறதா?

"ஆம். வழக்கத்தைவிட கவனமாக இருக்கிறேன்."

"கார்ட் வேகனில் ஏற்றப்படும் ஒவ்வொரு பெரிய பெட்டியையும் திறந்து சோதிக்கவேண்டும். பெரிய பெட்டிக்குள் யாராவது இருக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது. இதில் விதிவிலக்கே இல்லாமல் எல்லாப் பெட்டிகளையும் சோதனை செய்யவேண்டும். புரிந்ததா?"

"நிச்சயமாக சோதனை செய்கிறேன்."

"இந்த சவப்பெட்டியும் இன்றைய காலை ட்ரெயினில் போவதற்கு புக் செய்யப்பட்டிருக்கிறதா?"

"ஆம், இன்னும் சிறிதுநேரத்தில் ஏற்றிவிடுவோம்."

"சவப்பெட்டியைத் திறந்து பார்த்தீர்களா?"

ஸ்கொட் தயங்கினார்.

"என்ன, திறந்து பார்க்கவில்லையா?"

"இல்லை. அப்படித் திறப்பது இறந்து போனவர்களுக்குச் செய்யப்படும் மரியாதை இல்லையே. தவிர இந்தப் பெண்ணும் அவரது சகோதரரை நினைத்து அழுதுகொண்டு இருக்கிறார்."

சாம், மிஸ் மரியத்தை ஏற இறங்கப் பார்த்தார். "யார் இவருடைய சகோதரர்?"

"அவரது உடல்தான் சவப்



பெட்டிக்குள் இருக்கிறது."

"ஒரு ஆள் மறைந்துகொள்ளக் கூடிய அளவிலுள்ள எந்தவொரு பெட்டியையும் திறந்து பார்த்துவிட்டுத் தான் ட்ரெயினில் ஏற்றவேண்டும் என்பது ரெயில்வே நிர்வாகத்தின் சட்டம். அதை மீறமுடியாது. சவப்பெட்டியையும் திறந்து பார்த்துவிட்டுத்தான் ஏற்றவேண்டும்."

"அது... அது... நாகரிகம் இல்லையே. இறந்துபோன சகோதரர் ஒருவேளை உயிர்த்து எழுந்து, சவப்பெட்டிக்கு மேலேயுள்ள மணியை அடிப்பார் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார் இந்த அப்பாவிப் பெண். சவப்பெட்டியைத் திறப்பது அவருக்கு மனவேதனையைத் தரலாம்." (சவப் பெட்டிக்கு மேல் மணி கட்டும் அந்த நாளைய பிரிட்டிஷ் நம்பிக்கை பற்றி கடந்த அத்தியாயத்தில் படிக்கவும்)

"கடமை என்று வரும்போது அதெல்லாம் பார்க்கமுடியாது. நீங்கள் ஒரு ரெயில்வே ஊழியர். உங்களது கடமையை கவனிக்கவேண்டும். சவப்பெட்டி யைத் திறந்து பாருங்கள்."

அற்புதம்... அற்புதம்... எனது சகோதரர் உயிர் பெற்றுவிட்டார்.

ரெயில்வே டெஸ்பாச்சர் சாம். "நீங்கள் ஒரு ரெயில்வே ஊழியர். உங்களது கடமையை கவனிக்கவேண்டும். சவப்பெட்டியைத் திறந்துபாருங்கள்" என்று சொன்ன பின்னரும் ஸ்கொட் தயங்கினார். காரணம், சவப்பெட்டியைத் திறக்காமலேயே ட்ரெயினில் ஏற்றும் அதிகாரம் தன்னிடம் இருப்பதாக ஏற் கனவே மிஸ் மரியத்திடம் பெருமை யாகக் கூறியிருந்தார்.

இப்போது ரெயில்வே டெஸ்பாச்சரின் பேச்சுக்கு ஏற்ப சவப்பெட்டியைத் திறக்கப் போனால், அந்த அழகான பெண் தன்னைப் பற்றி என்ன நினைப்பாரோ என்று யோசித்தார்.

"நீங்கள் தயங்குவதைப் பார்த்தால், இறந்துபோன உடலைப் பார்ப்பதற்கு உங்களுக்கு பயமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இப்படி அச்சப்படும் ஆள் எதற்காக காவலர் வேலைக்கு வருகிறீர்கள்."

"பயமில்லை. ஒரு மரியாதை நிமித்தம்..." என்று இழுத்தார் ஸ்கொட்.

"இறந்தவருக்கு மரியாதை கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அதைவிட அதிக மரியாதை செய்யும் தொழிலுக்கும், அதன் விதிமுறைகளுக்கும் கொடுக்க வேண்டும்."

"இருந்தாலும்..."

"சரி. உங்களால் முடியாவிட்டால் நானே சவப்பெட்டியைத் திறந்து பார்க்கிறேன். ஆனால் சவப்பெட்டியைத் திறக்க மறுத்ததற்காக ரெயில்வே மேலதிகாரிகளுக்கு நீங்கள் பதில்கூற வேண்டியிருக்கும். ஞாபகமிருக்கட்டும்." என்றுகூறிய சாம், மிஸ் மரியத்தின் பக்கமாகத் திரும்பி, "மன்னிக்கவேண்டும் மிஸ். இது ரெயில்வே விதிமுறை. நான் உங்களது சகோதரரின் சவப்பெட்டியைத் திறந்து பார்க்கவேண்டும்" என்றார்.




**(தொடரும்...)**



# நிலமெல்லாம் இரத்தம்

**153**

**பா.ராகவன்**

ஒற்றர், அடுத்த ஒரு மாத காலத்துக்கு அந்த இடத்துக்கு வரமாட்டார். அத்தனை கவனம்!

இப்படிப் பணியில் நிறுத்தப்படும் ஒற்றருக்கு ஒரே ஒரு கட்டளைதான். ஹமாஸ் தலைவர் எப்போது எந்த மசூதிக்கு வருகிறார் என்று பார்த்துச் சொல்லவேண்டும் அவர் தினசரி வருகிறாரா, வாரம் ஒரு முறை வருகிறாரா, அல்லது ஏதாவது விசேஷ தினங்களில் மட்டும் வருகிறாரா என்று காத்திருந்து சரியாகப் பார்த்துச் சொல்லவேண்டும்.


தகவல் சரிதான் என்று உறுதிப்படுத்தப் பட்டதும் பாதுகாப்பான தூரத்தில் பதுங்கியிருந்து ரொக்கெட் வெடிகுண்டு மூலம் கொன்றுவிடலாம் என்று யோசனை சொன்னது மொஸாட்.

இப்படித்தான் ஷேக் அகமது யாசின் படுகொலை செய்யப்பட்டார். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி மசூதிக்கு வருபவர் அவர் என்பது, இஸ்ரேல் இராணுவத்துக்கு சௌகரியமாகப் போய் விட்டது. அவர் உள்ளே போகும் நேரம், வெளியே வந்து நாற்காலியிலிருந்து இறங்கி வண்டியில் ஏறுவதற்கு ஆகும் காலஅவகாசம் ஆகியவற்றைத் துல்லியமாகக் கவனித்து, சரியாக அடித்தார்கள். யாசின் இறந்துபோனார்.

யாசின் இறந்தபோது, கோபத்தில் ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் முழுவதும் ஏராளமான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். எங்கு பார்த்தாலும் குண்டுவெடித்தது. பஸ்கள் எரிந்தன. மக்களின் அலறல் ஓசை பத்து நாட்கள்வரை ஓயவே இல்லை. புதிய தலைவரான டாக்டர் அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸியின் வழிகாட்டுதலில் இயக்கம் இன்னும் உத் வேகத்துடன் செயற்படத் தொடங்கியிருப்பதாக அறிவித்தார்கள்.

உடனே மொஸாட் விழித்துக் கொண்டது. ஓஹோ, உங்கள் புதிய தலைவர் இவர்தானா என்று அவருக்கு அடுத்தபடியாகக் கட்டம் கட்டினார்கள். அதே போல ஒளிந்திருந்து தாக்கி அவரையும் கொன்றார்கள். ஒரே வருடத்தில் இரண்டு தலைவர்களைப் பறிகொடுத்த ஹமாஸ், செய்வதறியாமல் திகைத்தது.

ஹமாஸ் தனது அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தபோதுதான், விஷயத்தை மோப்பம் பிடித்த ஹமாஸின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் சிரியாவில் வசிப்பவருமான காலித் மஷால், "அவசர அவசரமாக தலைவரை இரகசியமாகத் தேர்ந்து எடுங்கள். எக்காரணம் கொண்டும் யார் தலைவர் என்பதை வெளியே சொல்லாதீர்கள்" என்று இயக்கத்தினருக்கு இரகசியச் சுற்றறிக்கை அனுப்பினார்.



**எந்த** விவரமும் கண்டுபிடிக்க முடியாத இவர்களில் சிலரை இஸ்ரேல் இராணுவம் எப்படிக் கொன்றது என்பது மிக முக்கியமான விஷயம். ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் அந்த இயக்கத்தின் தலைவராக அறிவிக்கப்படுகிறார் என்றால் கண்டிப்பாக அவர் மிகப்பெரிய மார்க்க அறிஞராகத்தான் இருப்பார். அவரது இராணுவத் தகுதிகளெல்லாம் கூட இரண்டாம்பட்சம்தான்.



அப்படி சமய ஈடுபாடுமிக்க ஒருவர் மசூதிக்குப் போய் தொழுகை நடத்துவதில் இருந்து ஒரு நாளும் தவறமாட்டார்.

இதை கவனத்தில்கொண்ட இஸ்ரேல், காஸா பகுதியில் உள்ள அத்தனை மசூதிகளைச் சுற்றிலும் நூற்றுக்கணக் கான ஒற்றர்களை எப்போதும் நிறுத்தி வைக்கும். இந்த ஒற்றர்கள், மூன்று மணிநேரத்துக்கு ஒருமுறை மாற்றப் பட்டுக்கொண்டே இருப்பார்கள். ஒரு முறை ஓரிடத்தில் பணியில் இருக்கும்

**(தொடரும்)**





# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அழிவு யுத்தத்துக்கும், வன்முறைகளுக்கும் முகங்கொடுத்த ஒரு இனத்தை ஆயுதங்களே அடக்கியும், ஆண்டும் வந்துள்ளன. அதற்கு மக்கள் பழகியும் விட்டிருந்தார்கள்.**

**இப்போது ஆயுதங்கள் விலகிவிட்டுள்ள நிலையில் கொள்ளைக் கோஷ்டிகளும், வன்முறைக் கும்பல்களும், ஊர்ச் சண்டியர்களும், வாள்வெட்டு வீரர்களும் அதிகரித்துள்ளனர். சமூகம் ஒரு கலாசார பிறழ்வை சந்தித்திருப்பதுபோல் இருக்கின்றது.**

**எவ்வாறான பாதை நமக்காக திறக்கப்படுகின்றதோ அதில் எவ்வாறு பயணிக்கவேண்டும் என்பதை நாமே தீர்மானிக்கவேண்டும். தென் ஆபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக் கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)**
**யாழ்ப்பாணம்**

ஆபிரிக்க சிறுவர்களுக்கு கல்வி என்பது பள்ளிக்கூடங்களில் போதிக்கப் படுவதில்லை. பார்த்து, கேட்டு, முட்டி, மோதி தாமாகவே தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் அது. கண்களையும் காதுகளையும் தீட்டி வைத்துக்கொண்டால் இயற்கையிடமிருந்தும், பெற்றோரிடம் இருந்தும், உறவினர்களிடம் இருந்தும், நண்பர்களிடமிருந்தும் நிறைய கற்றுக்கொள்ளலாம். சமூகமும் கற்றுக்கொடுத்தது.

மண்டேலாவின் வம்சத்தில் யாருக்குமே எழுதப் படிக்கத் தெரியாது. மண்டேலாவை எப்படியாவது படிக்க வைத்து சோஸா மக்கள் மத்தியில் பெருந்தலைவராக்க வேண்டுமென்பதே காட்லாவின் குறிக்கோளாக இருந்தது.

மண்டேலாவுக்கு அப்போது ஏழு வயது அவனை பள்ளிக்கு அனுப்பி படிக்க வைக்க காட்லா முடிவு செய்தி ருந்தார். மண்டேலாவை அழைத்து நாளை முதல் நீ உன் படிப்பை ஆரம்பிக்கவேண்டும். முதலில் உனக்கு உடைகள் தேவை. வெள்ளைக்கார ஆட்சியில் சிக்குண்டிருக்கும் நாம் நீளக் காற்சட்டை அணிந்துதான் பள்ளிக்குச் செல்லவேண்டும். இப்படியே போனால் ஆசிரியர்கள் திட்டுவார்கள் என்று கூறினார்.

மண்டேலா அதுவரை அணிந்திரு ந்தது ஒரு போர்வையை மட்டுமே. தோள் பக்கமாகப் போர்த்தி, இடுப்பில் ஊசி செருகியிருப்பார்கள். ஓடினாலும் ஆடினாலும் அவிழாது. காட்லா அவர்கள் மண்டேலாவுக்கு நீளக் காற்சட்டை ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அந்த நீளக் காற்சட்டை மண்டேலாவிற்கு பெரிதாக இருந்தது. மண்டேலாவின் உயரத்தை அளந்து, அதற்கேற்றாற் போல் கால்பகுதியை வெட்டியிருந்தார். இடுப்பை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் பாதக மில்லை. மண்டேலா ஒருவாறு நீளக் காற்சட்டையை அணிந்துகொண்டான். காட்லா அந்த நீளக் காற்சட்டையை இடுப்போடு சேர்த்து ஒரு முடிச்சும் போட்டுவிட்டார். மண்டேலா அந்த உடையுடன் ஆசையுடன் பள்ளிக்குத் துள்ளிச் சென்றான்.


அந்தக் காலத்தில் பள்ளி என்பது ஒரு அறை மட்டுமாகவே இருந்தது. முதல் நாள் பள்ளிக்கு சென்ற மண்டேலாவின் மனது படபடப்பாக இருந்தது. மண்டேலாவை ஆசிரியர் அழைத்து "நீ படிக்கப் போவது ஆங்கிலப் பாடங்களை, கற்கப்போவது பிரிட்டிஷ் சரித்திரத்தை, பழகிக் கொள்ளப் போவது ஆங்கிலேயப் பழக்கவழக்கங்களை, அநாவசியமாக உனக்கேன் ஆபிரிக்கப் பெயர்? என்று கேட்டுவிட்டு இன்றிலிருந்து உனது பெயர் "நெல்சன்" என்று பெயர்மாற்றம் செய்துவிட்டார். ரோலிலாலா மண்டேலா அன்றிலிருந்து இன்றுவரை நெல்சன் மண்டேலா என்றே அழைக்கப்பட்டார்.

அந்தக்காலத்தில் சோஸா மக்கள் மானசீகக் கடவுளாக "கமாடா" என்னும் கடவுளையே வணங்கி வந்தார்கள். மண்டேலாவின் தந்தை காட்லாதான் அப்பகுதி மக்களின் அறிவிக்கப்படாத பூசாரியாக விளங்கினார். சோஸா மக்களுக்கு கிறிஸ்தவ மதம் அறிமுகப் படுத்தப்பட்டதும் முதன்முதலாக மண்டேலாவின் தாயார்தான் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டார்.

**(தொடரும்)**

**கிராம மக்கள் வறுமையில் உழல்வதற்கு மதுப்பாவினை தான் முக்கிய காரணமாக உள்ளது. ஆரோக்கியமான உணவுக்கும் கல்விக்கும் செலவிடுகின்ற பணம் போதைப் பொருள் பாவனைக்குச் சென்று விடுவதால் குடும்பம் நிலை குலைந்து ஆரோக்கியம் குன்றி சீரழிந்துவிடுகின்றது.**

**உழைத்துக் களைத்து சம்பாதிக்கின்ற பணம் மதுப்பாவினைக்காக வீண் விரயமாக்கப்படுகின்றது. நிலவளம், நீர்வளம் எல்லாம் நிறைந்த ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் ஏன் வறுமையிலும் முதலிடம் பிடிக்கவேண்டும் என்ற கேள்வி இயல்பாகவே எழுவது நியாயம்தான்.**



## எமது கிராமத்தில் போதை அற்ற மாணவ சமூகத்தை உருவாக்க I.N. மதுபான சாலையை அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டப் பேரணி

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**





# மது ஒழிப்புக்கான மக்கள் போராட்டம்

"மதுபான சாலையினை அகற்றி மதுவுக்கு அடிமையானவர்களைக் காப்பாற்று, மதுபான சாலையினை மூடி எங்கள் கணவர்களைக் காப்பாற்று, எங்கள் பிள்ளைகள் சீர்ழிவதைக் காப்பாற்று, மதுபானசாலை பாடசாலைக்கு அருகில் இருப்பதனால் பாடசாலை மாணவர்கள் மதுவுக்கு அடிமையாகிவருவதை தடுக்க உதவுங்கள், ஆலயம், பாடசாலைகளுக்கு அருகில் இருக்கும் மதுபானசாலையினை மூடு"

"மதுபானசாலை உரிமையாளரே மக்களின் உணர்வுக்கு மதிப்பளி, அரச அதிபரே மதுவினால் மதிகெட்டுப்போகும் கல்வியைக் காப்பாற்று, வேண்டாம் வேண்டாம் மதுபானசாலை வேண்டாம்" போன்ற இன்னும் பல வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வீதிக்கு வந்து பொதுமக்கள் கோசமெழுப்பினர்.

வழமையாக மதுவுக்கு எதிராக உரக்கக் குரல் கொடுப்பவர்கள் பெண்கள் தான் என்றாலும் இப்பொழுது ஆண்களும் பெண்களும், இளைஞர்களும், யுவதிகளும், சிறுவர்களும் இன்னும் மதகுருமாரும் சேர்ந்து ஏகோபித்த குரலில் வீதியில் இறங்கியிருப்பது சாதக மாற்றம் ஒன்றுக்கு வழிகோலும் என்றே கருதப்படுகின்றது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சமீப சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.

அம்பாறை நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேப்பையடி மதுபான சாலையினை உடனடியாக இழுத்து மூடவேண்டும் என அப்பகுதி பொதுமக்களால் கடந்த 30ஆம் திகதி பெரியளவிலான ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

### மதுக்கடை மூடுவதில் அரசியல்வாதிகள் தலையீடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் இருக்கும்வரை மதுபானசாலைகளை குறைக்கவோ, மூடவோ முடியாது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.துரைரெட்ணம் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

துப்பாக்கியுடன் வந்து மாவட்ட அரசாங்க அதிபரை மிரட்டி மதுபான சாலைக்கு அனுமதிபெற முயன்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

### புதிய மதுச்சாலைகளுக்கு அனுமதி இல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக மதுபானச் சாலைகள் திறப்பதற்கு அனுமதி வழுங்கக்கூடாது என்று மாவட்ட செயலக மண்டபத்தில் 2015, மே, ஏழாம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக மதுபானச் சாலைகள் திறப்பதற்கு அனுமதி வழுங்கக்கூடாது என்பதுடன், வேறு மாவட்டங்களிலுள்ள மதுபானச் சாலைகளை இடம்மாற்றிக் கொண்டுவந்து இந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் திறப்பதற்கும் அனுமதி வழங்கக்கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பில் மதுவரித் திணைக்கள ஆணையாளருக்கு அறிவிப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வறுமை நிலைமை மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதியமைச்சருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுப் பாவனைக்கு எதிராக மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் விழிப்புணர்வு பேரணியொன்றை நடத்தவுள்ளதுடன், இதற்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.துரைரெட்ணத்தை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நியமித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மதுபான சாலைகளை அரைவாசியாகக் குறைப்பதற்கான வேண்டுகோளை அரசாங்கத்திடம் விடுப்பது எனவும் அது எடுபடாத பட்சத்தில் அனைத்து கட்சிகளும் இணைந்து மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டத்தினை மேற்கொள்வது எனவும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 67 மதுபான சாலைகள் உள்ளதாகவும் சில பகுதிகளில் இவை தேவைக்கு அதிகமானதாகவும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக மதுபானசாலைகள் உள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் சரோஜினிதேவி சார்ள்ஸ் தெரிவித்தார்.

எனினும் மதுபான சாலைகளுக்கான அனுமதியை ரத்துச் செய்யும் அதிகாரம் மாவட்ட செயலகத்துக்கு இல்லையெனவும் அதற்கான அதிகாரம் மதுவரித் திணைக்கள ஆணையாளருக்கே உள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிதாக மதுபான சாலைகள் அமைப்பதற்கு அனுமதிகள் வழங்க முடியாதவகையில் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதால் எதுவித மதுபான சாலைகளுக்கும் அனுமதி வழங்கப் படவில்லையெனவும் பழைய மதுபான சாலைகளே இயங்கிவருவதாகவும் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி எஸ்.தங்கராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமை நிலைக்கு இங்குள்ள மதுபானசாலைகளும் முக்கிய காரணமாகும். எனவே இவற்றினை இங்கு குறைப்பது தொடர்பில் நாங்கள் அனைவரும் ஒருமித்து இயங்கவேண்டும்.

மதுபானசாலைகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் அரைவாசியாக குறைப்பதற்கு இந்த கூட்டத்தில் ஏகமனதான தீர்மானிக்கப்படுகின்றது. அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் அனைவரும் இணைந்து மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டத்தினை வாகரையில் இருந்து களுவாஞ்சிகுடி வரையில் நடாத்துவோம் இதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்றார்.

### மதுப் பாவனையில் சிங்கள மக்கள் இரண்டாமிடம்

சிங்கள மக்களைவிட தமிழ் மக்கள் செறிந்துவாழும் பகுதியிலேயே அதிகளவான மதுபான பாவனை உள்ளதாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் குற்றப்பிரிவு ஆணையாளர் டி.மல்லவ தெரிவித்தார்.

கிராம மட்டத்தில் போதையொழிப்பு திட்டத்தினை மட்டக்களப்பு, களுவாஞ்சி குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருக்கள் மடத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், நடுத்தர மற்றும் கீழ்நிலையில் உள்ள குடும்பங்களிலேயே மதுபாவனை அதிகளவில் உள்ளது. இதைத் தடுப்பதற்கான வழிவகைகளை உள்ளூர் அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் அதற்கு தேவையான உதவிகளை மதுவரித் திணைக்களம் வழங்கும்.

சில பகுதிகளில் மதுபான சாலைகளை பூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. சட்டவிரோத மதுவிற்பனைகள் அதிகரிப்பதனால் கிராம மட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றார்.

### "குடி நிறுத்துவோர்" கழகங்கள்

யுத்தத்திற்குப் பின்னரான மட்டக்களப்பில் மதுப் பாவினை அதிகரித்துள்ளதால் மதுப் பாவினையிலிருந்து குடிகாரர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் பரந்த அளவில் தொடங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு உளநலச் சேவைகள் நிலையத்தின் மட்டக்களப்பு உளநல மருத்துவர் பி.ஜூடி ரமேஸ் ஜெயக்குமார் தெரிவித்தார்.

குடிகாரர்களை அந்தப் பழக்கத்தில் இருந்து விடுபட வைப்பதற்கு கிராமங்கள் தோறும் "குடி நிறுத்துவோர்" (**Clubs for Alcohol Treatment**) கழகங்களை உருவாக்குவதற்காக தொண்டர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கிராமங்கள் தோறும் "குடி நிறுத்துவோர்" கழகங்களை உருவாக்குவதற்காக இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. குறைந்தபட்சம் ஒரு கிராமத்திற்கு ஒரு "குடி நிறுத்துவோர்" கழகம் உருவாக்கப்படவேண்டும் என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டு (Servant Teachers) சேவையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பயிற்சியின்போது குடிகாரர்களை இனங்காணும் வழிமுறைகள், குடிநோயை இனங்காண்பதற்கான வினாக்கொத்து, மதுப்பாவினையை அளவிடும் குறிப்புகள், பாவிக்கும் மதுவின் காரத் தன்மை போன்றவை பற்றியும் மதுப் பாவினையினால் உண்டாகும் ஆரோக்கிய, சமூக, பொருளாதாரப் பாதிப்புக்கள் பற்றியும் விழிப்புணர்வூட்டப்படுவதாக உளநல மருத்துவர் பி.ஜூடி ரமேஸ் ஜெயக்குமார் தெரிவித்தார்.

"குடி நிறுத்துவோர்" கழகங்களுக்கு மேலதிகமாக பாடசாலைச் சமூகம், சிறுவர் கழகங்கள், மாதர் சங்கங்கள் என்பன வற்றிற் கூடாகவும் மதுப்பாவினைக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக அவர் மேலும் கூறினார்.

### வறுமைக்கும் மதுவுக்கும் தொப்பிள் கொடி உறவு

இலங்கை மத்திய வங்கியினால் 2013 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டம் வறுமையின் முதலாமிடத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதேவேளை இலங்கையில் அதிகூடியளவு மதுப் பாவனையைப் பாவிப்பதும் மட்டக்களப்பு மாவட்டம்தான்.

அதன்காரணமாக அதிகளவு நிதியைத் திறைசேரிக்கு அனுப்புதும் இந்த மட்டக்களப்பு மாவட்டம்தான். போதைப் பொருள் பாவினையிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளவர்கள் அதிகளவு அடிமையாகி இருக்கின்றார்கள் என்பதும் தெரியவந்திருக்கின்றது.

கிராம மக்கள் வறுமையில் உழல்வதற்கு மதுப்பாவனைதான் முக்கிய காரணமாக உள்ளது. ஆரோக்கியமான உணவுக்கும் கல்விக்கும் செலவிடுகின்ற பணம் போதைப் பொருள் பாவினைக்குச் சென்றுவிடுவதால் குடும்பம் நிலை குலைந்து ஆரோக்கியம் குன்றி சீரழிந்துவிடுகின்றது.

உழைத்துக் களைத்து சம்பாதிக்கின்ற பணம் மதுப்பாவினைக்காக வீண் விரயமாக்கப்படுகின்றது. நிலவளம், நீர்வளம் எல்லாம் நிறைந்த ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் ஏன் வறுமையிலும் முதலிடம் பிடிக்கவேண்டும் என்ற கேள்வி இயல்பாகவே எழுவது நியாயம்தான்.

அளவெட்டி
ப.உதயகுமார்




# கூட்டமைப்பின் திருவிழா?

பாராளுமன்றத் தேர்தல் வரப் போகின்றது! பொய், புரட்டு, புழுகு மூட்டை மற்றும் செய்யமுடியாத வாக்குறுதிகளையெல்லாம் அள்ளிவீச கட்சிகள் தயாராகிவிட்டன. தேசியக் கட்சிகள் மற்றும் சிறு கட்சிகள், கூட்டணிக் கட்சிகள் என்பன மேளதாளம் அடித்து மேடைபோட்டு முழங்குவதற்கு ஆயத்தமாகிவருகின்றனர்.

கடந்த காலப் பாராளுமன்றத் தேர்தல்களுடன் ஒப்பீடு செய்கையில் இம்முறைத் தேர்தலானது கடும் போட்டி யுடன் சவால்மிக்க ஒரு தேர்தலாக அமையப்போகின்றது. பாராளுமன்றக் கதிரைகளை பிடிப்பதற்கு அரசியல் அரங்கிலே எதுவும் நடக்கலாம் என்றொரு சூழலே இலங்கையிலே காணப்படப்போகின்றது.

சுதந்திரக் கட்சியா?, ஐக்கிய தேசியக் கட்சியா?? எனும் போட்டியுடன் இதர கட்சிகளும் தயாராகிவரும் இவ்வேளையிலே தமிழர்களின் ஏகபோக பிரதிநிதிகள் நாங்களே என்று கூறிக் கொண்டு, காலத்துக்குக் காலம் மக்களை ஏமாற்றி ஏமாற்றியே வாக்குகளை அள்ளி எடுப்பதிலே வல்லரசுகளாகவும், இவற்றிலே ருசி கண்ட பூனையாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்படுகின்றது.

மக்களின் வாக்கிலே வாழ்க்கை நடாத்தும் இவர்கள் தமிழர்களுக்காக எதையுமே செய்ததில்லை. செய்யப் போவதில்லை என்பதே வரலாறு என்றாகிவிட்டது.

இருப்பினும் ஒன்றுக்குமே கையாலாகாத வர்களாக வெளித்தோற்றம் ஒன்றினைக் காட்டிக்கொண்டு உள்ளே அரசுடன் இரட்டைவேடம் போட்டு, தங்களுக்கும் தமது உறவுகளுக்கும் தேவையான சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வாக்குப் போட்டவர்களை திரும்பியே பார்க்காமல் இருக்கும் இருக்கக்கூடிய வல்லமை தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கின்றது. அன்று பின்கதவினால் ஒளிந்துபோனவர்கள் இன்று முன் கதவினால் தெளிவாகப்போய் உதவிகள், சலுகைகளைப் பெற்றுக் கொண்டுவருகின்றனர்.

புதிய அரசுடன் பங்காளிகளாக இருந்துகொண்டு தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள்? என்று நான் கேட்க வில்லை. ஊர் திரண்டு கேட்கின்றது.

இந்த நிலையிலே எதிர்வரும் மாதங் களிலே நடைபெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் தேர்தலுக்கு இம்முறை எந்தவகையான அணுகுமுறையினைக் கூட்டமைப்பினர் கையாளப்போகின்றனர் எனும் எதிர்பார்ப்பு நகைச்சுவை வடிவிலே காணப்படுகின்றது!

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைகளில் கொஞ்சக் காலம் பிரபாகரனின் பெயரையும் புலிகள் அமைப் பையுமே பயன்படுத்தினர். வடமாகாண சபைத் தேர்தலில்கூட பிரபாகரனைப் போற்றிப் புகழ்பாடி வாக்குப் பெற்றவர்கள் இப்போது அந்த நாமத்தையே அடியோடு மறந்துவிட்டனர்.

இது ஒருபுறமிருக்க சர்வதேசம் வந்து இறங்கப்போகின்றது. சர்வதேசம் இம்முறை தேர்தலை உன்னிப்பாக கவனித்தபடி உள்ளது! சர்வதேசம் எமக்கான தீர்வினைப் பெற்றுத் தரும் என்று பரப்புரை செய்தார்கள்.

பின்பு சர்வதேசம் என்றொரு பெயரை மறந்தும் உச்சரிக்க மறந்துவிட்டனர். ஏனென்றால், சர்வதேசம் என்றால் யார்? யார் வரப்போகின்றார்கள்? என்று மக்கள் கேள்வி கேட்க தொடங்கிவிட்டனர். எந்தவொரு சர்வதேசமும் உள்நாட்டுப் பிரச்சினையிலே தலையிடப் போவதில்லை என்பதனை மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பதால் அந்த யுக்தியினை இனிமேல் கையாள மாட்டார்கள்.

எனவே, இப்போது புதிய அணுகுமுறை என்ன என்பதிலே கூட்டமைப்புக்குள்ளே புனிதப் போர் நடைபெற்றுவருகின்றது. கூட்டமைப்பின் கட்சிகள் சகலவற்றுக்கும் சம உரிமை வேண்டும் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் போர்க்கொடி தூக்கி வருகின்றார். தெரிந்தோ, தெரியாமலோ புலிகள் அமைப்பின் பிடியிலே உருவான தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல கட்சிகளை இணைந்து உருவானது! அவர்களினால் (புலிகளால்) உதயமான கூட்டமைப்பு புலிகளின் மறைவின் பின்பு புலிகள் சார்ந்தவர்களையே கழட்டிவிட்டனர். உதாரணம்: குதிரை கஜேந்திரன், பத்மினி, கஜேந்திரகுமார் போன்றவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையிலே தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் கூட்டமைப்பு சார்ந்தவர்களை யும் கழட்டிவிடுவதிலே மும்மூரமாகி வருகின்றனர். இதேவேளை அடுத்த தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவிலும் சிக்கல்கள் இருப்பதாகத் தகவல்கள் கசிகின்றன. யாரை உள்ளே எடுப்பது? யாரை வெளியேற்றுவது என்பதிலே உட்கட்சி மோதல்களும் நடைபெறுவதாக கேள்வி. இது ஒருபுறமிருக்க இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ள சிலரது இருப்பிடம் கேள்விக்குறியாகவே உள்ளன. புதியவர்களை உள்ளெடுக்க பழையவர்களை ஓரம் கட்டவேண்டிய நிலை தென்படுகின்றன.

ஆனாலும், இழந்துபோயுள்ள மக்கள் ஆதரவினை எடுப்பதற்காக இப்போது உறுப்பினர்களாக உள்ள பலர் இப்போதே கூட்டம்போட்டுப் பேசத் தொடங்கிவிட்டனர். அழையா விருந்தாளிகளாக கொண்டாட்டங் களில் முகம் காட்டுவதுடன் புத்தகம் கொப்பி உட்பட விளையாட்டு உபகரணங் களை வழங்குவதிலும் சிலர் மும்மூரம் காட்டிவருகின்றனர்.

இவற்றிலே பத்திரிகை ஒன்றின் உரிமையாளவரின் படம்வராத நாட்களே இல்லை. பல கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுவருகின்றார். இவர் இதுவரை காலங்களும் எங்கே இருந்தார் என்று மக்கள் கேள்வி கேட்கத் தவறவில்லை என்பதுடன் இவர் புதிய அரசு எதையும் தராது எதையுமே செய்ய முன்வராது என்பதனையும் சொல்லிவருகின்றார்.

ஒருபுறம் நல்லாட்சிக்கான ஆதரவு என்று சொல்லிக்கொண்டு புதிய அரசின் கைக்கூலிகளாக, அவர்கள் சொல்வதற் கெல்லாம் தலையினை ஆட்டிக்கொண்டி ருக்கும் கூட்டமைப்பினரின் செயற்பாட்டுக்கு எதிரான கருத்தை பத்திரிகை உரிமை யாளர் சொல்லிவருகின்றார்.

ஒரு அணிக்குள்ளே இருக்கும் பலர் புகழ் பாடிக்கொண்டிருக்க இவர் மட்டும் எதிர்ப்பரசியல் செய்துவருவது எதற்காக என்றால் எதிர்வரும் பாராளுமன்றக் கதிரையிலே உட்காருவதற்காக என்பது எல்லோருமே அறிந்த புரிந்த விடயம்.

ஆனாலும் பத்திரிகையுடன் தொடர்பு பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துக் களிலே நியாயம் இல்லாமலும் இல்லை. புதிய அரசினால் தமிழர்களின் பிரச்சினை க்கு ஒருபோதுமே தீர்வு கிடைக்காது! என்பதனை அவர் துணிந்து சொல்வதற்காக சபாஸ் போடலாம்.

இது இவ்வாறிருக்கும் நிலையிலே கூட்டமைப்பு எந்த வகையான கோரிக்கை களை முன்வைத்து தேர்தல் பரப்புரையைச் செய்யப்போகின்றது! அடுத்தகட்ட நகர்வு என்ன என்பதே எஞ்சியுள்ள கேள்வி.

ஏன் இக்கேள்வி என்றால் புதிய அரசுடன் இணக்கம் ஒன்றினை உருவாக்கி இணக்க அரசியல் செய்கின்றார்கள். இந்த இணக்க அரசியல்மூலம் தமிழ் மக்களுக்கு செய்தது என்ன? ஆளுநரும், செயலாளரும் இடையூறு என்று சொன்ன வடமாகாண சபை புதியவர்களின் வரவின் பின்பு என்ன அபிவிருத்தியைச் செய்தார்கள். புதிய அரசு உருவாகி சில மாதங்கள் உருண்டோடி விட்டது! இவ்வளவு காலமும் இவர்கள் எவ்வளவு பணத்தினை செலவு செய்தார்கள் என்று கேட்டால் பதில் பூச்சியமே.

**எங்கள் இன மக்களுக்கு என்ன செய்தார்கள்??**

**வேலைவாய்ப்பு கொடுத்தார்களா?**

**அபிவிருத்தி செய்தார்களா?**

**வாக்குப்போட்ட மக்களை திரும்பிப் பார்த்தார்களா?**

எதுவுமே செய்யாதவர்கள் மீண்டும் பாராளுமன்றம் சென்று வெட்டியா?? பிடுங்கப் போகின்றார்களா?

மக்கள்போடும் வாக்குகளுக்காவது ஏதாவது செய்யவேண்டும். ஆனால் அது கூட்டமைப்புக்குத் தெரியாது. இருந்தும் இம்முறை பதவியிலே இருக்கக்கூடிய அரசையும் வசை பாடமுடியாது. மீள் குடியேற்றம் செய்யவில்லை. கைதிகளை விடுதலை செய்யவில்லை. பிடிக்கப் பட்ட காணிகளை விடவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கவில்லை என்றெல்லாம் மக்களுக்குமுன் சொல்லமுடியாது. ஏனெனில் இப்போது கூட்டமைப்பினர் அரசின் செல்லப்பிள்ளைகளாக உள்ளனர்.

இவர்களுக்கு முன்பு அரசுடன் இணக்க அரசியல்செய்து அரசிலிருந்து பெருமளவு வேலைத்திட்டங்கள் அபிவிருத்திகள், வேலைவாய்ப்புகள், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், மின்சாரம், வீதி அபிவிருத்திகள் என்று ஏராளமான மக்கள்நலப் பணியாற்றிய முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பார்த்து இலங்கை அரசுக்கு ஒத்து ஊதுகின்றார் என்று கோஷமிட்ட கூட்டமைப்பு இன்று அதே வேலையைத் தானே செய்கின்றது! அதாவது அரசுடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். இந்த இணக்க அரசியல் மூலம் இதுவரை சாதித்தது என்ன? செய்யப்பட்ட மக்கள் பணி என்ன? எல்லாமே ஏமாற்றுவித்தையாகவே உள்ளது!

அன்று அமைச்சரைப் பார்த்து நக்கலடித்தவர்கள் இன்று இவர்களைப் பார்த்து கிண்டல் பண்ணப் போவது யார்? தமிழ் மக்களினால் கட்டி பாதுகாக்கப்பட்ட கோட்பாடுகளைக்கூட மறந்து சுதந்திர தின நிகழ்விலும் கலந்து சாதனை படைத்துள்ளனர்.

இணக்கப்பாட்டு அரசியல்மூலமே எதையும் சாதிக்கமுடியும் என்பதே யதார்த்தமாகும். ஆனாலும் காலம் கடந்து ஞானோதயம் உருவாகி இருக்கின்றது. கனிந்துள்ள காலத்தை பயன்படுத்தியாவது எதையாவது உருப்படியாக செய்ய முன்வரவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ள நிலையிலே மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

ஒன்றுமே செய்யாதவர்கள் இனி என்ன சொல்லி ஏமாற்றப்போகின்றார்கள். 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தீர்வு நிச்சயம் என்று தலைவர். சம்பந்தன் ஐயாவும் அடித்துச் சொல்லிவிட்டார். 2105ஆம் ஆண்டின் மிகப்பெரிய நகைச்சுவையாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

பேச்சிலும் செயலிலும் எதனையும் செய்யமுடியாத கூட்டமைப்பினரின் திருவிழா இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கப்போகின்றது. ஆட்சி மாறினால் இவர்களின் ஆட்டமும் நின்றுபோகுமா. பாராளுமன்றத் தேர்தல் முடிவு வரும்வரை காத்திருங்கள்.

தொகுப்பு : வேணு கிருஸ்ணா

**'தினமும் நான்கு முறை இந்தியாவில் இருந்து நேபாளத்திற்குப் பறக்கும் 'மீட்பு' விமானம் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்களை சுமந்து சென்றவாறே உள்ளது. இந்திய பத்திரிகையாளர்கள் நேபாளத்தின் குறுக்கும் நெடுக்குமாக அலை பாய்ந்து தங்கள் தேசத்தின் பெரியண்ணன் தோரணையை, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நேபாளிகள்முன் பீற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து நேபாளிகள் மட்டும்தான் ஆத்திரப்பட வேண்டுமா?'**




# நேபாளத்தில் இந்திய ஊடக தர்மம்

ஏப்ரல் 25ஆம் திகதி நேபாளத்தைத் தாக்கிய பூகம்பம் 10000-க்கும் மேற்பட்ட மக்களை பலிவாங்கி 20,000-க்கும் அதிகமான மக்களைக் காயப்படுத்தியுள்ளது. 7.8 ரிக்டர் அளவில் நேபாளத்தின் இமயத்தின் அடிவாரத்திலுள்ள கோர்க்கா மாவட்டத்தின் பார்பக் பகுதியைத் தாக்கிய பூகம்பம் மொத்த நாட்டையும் குலுக்கிப் போட்டது. இதன் அதிர்வுகள் இந்தியத் துணைக் கண்டமெங்கும் எதிரொலித்தது.

கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும் இடிபாடுகளிடையே இருந்து மீட்கப்படும் பிணங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருகின்றது. மீட்பு நடவடிக்கைகளில் உடனடியாக தலையிட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றென்பது ஆச்சரியமான விசயமல்ல.

மூன்று புறங்களில் இந்தியாவாலும் வடக்கே இமயத்தாலும் (சீனா) சூழப்பட்ட நேபாளத்தின் புவியியல் அமைப்பும் அதன்காரணமான வரலாறு மற்றும் அரசியல்ரீதியான பிணைப்பும் இந்தியாவின் தலையீட்டை அவசியமானதாக்குகிறது.

வறிய நாடான நேபாளத்திற்கு பூகம்பம் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் மிகவும் பாரதூரமானது. அதிர்ச்சியில் இருந்து மீளாத நேபாள மக்கள், வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இடிபாடுகளிடையேயிருந்து மீட்டெடுக்கப்படும் துண்டிக்கப்பட்ட கைகளிலும் கால்களிலும் தமது உற்றார், உறவினரின் அடையாளங்கள் ஏதும் உள்ளதாவென நெஞ்சம் பதைக்க தேடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

உருக்குலைந்துபோன நாட்டின் வாழ்வை மீட்கும் வழியை அவர்கள் இன்னமும் கண்டடையவில்லை. கூர்க்காக்களின் நெஞ்சுரம் குறித்து அறியப்பட்ட எண்ணற்ற செவிவழிக் கதைகளை மெய்ப்பிக்கும்விதமாக தங்கள் சொந்த நாட்டு அரசும் அந்நிய தேசங்களும் நெருங்கமுடியாத இடங்களில் கையில் எந்த உபகரணங்களும் இன்றி நேபாளிகள் களமிறங்கி உள்ளதாக செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

மீளமுடியாத சோகத்தினிடையேயும் உதவிசெய்வதான போர்வையில் இந்தியா செய்திருக்கும் தலையீட்டை நேபாளிகள் ரசிக்கவில்லை. அதிலும் குறிப்பாக மீட்புப் படையினரின் எண்ணிக்கைக்கு சற்றும் குறையாத எண்ணிக்கையில் களமாடி வரும் இந்திய ஊடகங்களை தீராத வெறுப்போடு நேபாளிகள் காறி உமிழ்கிறார்கள் என்று செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

# gohomeindiamedia என்ற ஹேஷ்டேக் தான் கடந்த 3ம் திகதி ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் முதன்மையான பேசுபொருளானது.

உதாரணத்திற்கு சில ட்விட்டுகள் மட்டும்...

"மதிப்புக்குரிய பிணந்தின்னிக் கழுகுகளே, இறந்த உடல்களின் எலும்புகள் வரை சுத்தமாக பொறுக்கிவிட்டீர்கள்... இப்போது நீங்கள் வீட்டுக்குப் போகலாமே" #gohomeindiamedia.

."திருவாளர் மோடி அவர்களே... பெருமைக்குரிய எங்களது தாராகரா ஸ்தூபி வீழ்ந்துவிட்டது... ஆனால், எங்கள் இறையாண்மை இன்னும் வீழவில்லை. #gohomeindiamedia".

"திருவாளர் மோடி அவர்களே, உங்கள் ஊடகங்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள். இவர்களே எங்களுக்கு மிகமோசமான பாதிப்புகளை உண்டாக்குகிறார்கள். #gohomeindiamedia"

இன்னும் பல்லாயிரக்கணக்கான ட்விட்டுகள் நேபாளிகளிடமிருந்து மட்டுமல்ல இந்திய ஊடகங்களின் செயற்பாடுகளால் அவமானப்பட்ட இந்தியர்களிடமிருந்தும் குவிந்தவண்ணமுள்ளது.

பூகம்பத்தில் சிக்கி மீட்கப்பட்ட இந்தியர்களில் ஒருவரான நிமிஷ் சிரீவஸ்தவா கூறுவதைக் கவனியுங்கள். "பாதிப்புக்குள்ளான நேபாள மக்களை கும்பலாக நிறுத்தி அவர்களை "மோடி, மோடி" என்று கோஷமிடச் செய்து இந்திய ஊடகவியலாளர்கள் அந்தக் காட்சிகளை படம் பிடித்துக்கொண்டார்கள்" என்கிறார் அவர். "மீட்கப்பட்ட ஒவ்வொருவரிடமும் மோடியின் இரக்ககுணம் பற்றி கேட்டு அவற்றைப் பதிவு செய்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளார். அதேசமயம், "மீட்புப் படை தாமதமாக வந்ததாக சிலர் தெரிவித்த கருத்துக்களை கவனமாக கத்தரித்து விட்டார்கள்" என்றும் தனது முகநூல் பக்கத்தில் எழுதியுள்ளார்.

24/7 ஆங்கில செய்தி தொலைக்காட்சிகள் இந்திய ஊடகவெளியில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கியபின் கடந்த 15 ஆண்டுகளில் 'செய்தியின்' தன்மை பெருமளவிற்கு மாற்றமடைந்துள்ளதை நாம் அறிவோம். பாரபட்சமின்றி நடப்பு நிகழ்வுகளை செய்திகளாக வெளியிடுவது, நிகழும் செய்திகளைக் குறித்த நடுநிலையான அலசல், அரசியல், பொருளாதாரம் மற்றும் துறைசார் வல்லுநர்களைக் கொண்டு செய்யப்படும் விரிவான ஆய்வுகள் என்பவையெல்லாம் பழைய வரலாறுகள் ஆகிவிட்டன.

செய்தித் தொலைக்காட்சிகளைப் பொறுத்தவரை செய்திகள் ஒவ்வொன்றும் 'கதைகள்'. மக்களின், தேசத்தின் வாழ்வை பாதிக்கும் செய்திகள் வெறும் கதைகளாகச் சுருங்கியபின்னர், நடக்கும் இரத்தமும் சதையுமான அந்த நிகழ்வுகளில் இருந்து தாம் சொல்லப்போகும் கோணம் எது, அந்தக் கோணத்தை விவரிக்கும் விதம் என்ன, கதையின் நாயகன் யார், வில்லன் யார், பின்னணி இசைக்கோர்வை எப்படி இருக்கவேண்டும் என்பதே பிரதான முக்கியத்துவம் வாய்ந்த விசயங்களாகின.

இவ்வாறாக இந்தியாவின் செய்தித் தொலைக்காட்சி ஊடகங்களைப் பொறுத்தவரை எந்தவொரு உண்மை நிகழ்வும் மசாலா தடவப்பட்ட பதார்த்தம்தான். இதில் 'பதார்த்தத்தை' உப்பு காரம் தூக்கலாக சுடச்சுட யார் பரிமாறுகிறார்களோ அவர்களுக்கே TRP என்ற வெற்றிக் கோப்பை சன்மானமாகக் கிடைக்கும்.

இந்தக் கதைகள் வெவ்வேறானதாக இருந்தாலும், இவற்றுக்கு ஒரு இணைப்பு தேவைப்படுகிறது. ஆங்கிலத்தில் Storyline என்பார்கள். சம்பவங்கள் எதுவானாலும், ஊடகங்கள் கதைகளாக சொல்லும்போது அவற்றினூடாக ஒரு கதைவரிசையை (storyline) முன்வைக்கின்றன. இப்படி பல கதைவரிசைகள் உள்ளன. நிகழ்வு எதுவோ அதற்கு பொருத்தமான கதை வரிசைக்குள் 'செய்தியை' சொருகி தேசியவாத மசாலா தடவி இந்துத்துவ பொதுப்புத்தி என்கிற எண்ணெயில் பொரித்து சூடாகவும் சுவையாகவும் ப்ரைம் டைமில் தமது நடுத்தரவர்க்க வாடிக்கையாளர்களுக்கு பரிமாறுவதே சமகாலத்திய ஊடக அறம்.

இந்திய அச்சு ஊடகங்கள் தமது இளைய பங்காளிகளான காட்சி ஊடகங்களின் நகல் பிரதி என்பதால் அவற்றைக் குறித்து தனியே சொல்லத் தேவையில்லை.

நேபாளத்தின் வாழ்வை புரட்டிப்போட்ட பூகம்பம் இந்திய ஊடகங்களுக்கு டி.ஆர்.பி புதையலாக காட்சியளித்துள்ளது. திகிலூட்டும் பின்னணி இசையோடு மலிவான உணர்ச்சிகளைத் தூண்டும்விதமாக 'கண்ணீர்' கதைகளைத் தேடி அலைந்துள்ளனர் இந்திய ஊடகவியலாளர்கள். பூகம்பத்தில் பாதிக்கப்பட்டு பெற்ற பிள்ளையை பறிகொடுத்த தாய் ஒருவரிடம் சென்று "இப்போது எப்படி உணர்கிறீர்கள்?" என்று மைக்கை நீட்டியுள்ளார் ஒரு செய்தியாளர். மற்ற செய்திச் சேனல்களுக்குக் கிடைக்காத கதைகளை கண்டுபிடித்து டி.ஆர்.பியை அள்ளும் வெறியில் மீட்பு நடவடிக்கைகளுக்கே இடையூறு ஏற்படுத்தியுள்ளனர்.

நேபாள டெலிகிராப் பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்றின்படி, மீட்பு நடவடிக்கைகளுக்காகச் சென்றுள்ள இந்தியாவின் உலங்கு வானூர்திகள் ஒவ்வொன்றிலும் செய்தியாளர்களையே இடத்தை அடைத்துக்கொண்டு சென்று உள்ளனர். விளைவாக, குறைவான கட்டுமான வசதிகளைக்கொண்டிருக்கும் நேபாள இராணுவத்தைவிட சொற்ப எண்ணிக்கையிலேயே இந்திய இராணுவம் பாதிக்கப்பட்டவர்களை மீட்டுள்ளது.

தினமும் நான்கு முறை இந்தியாவில் இருந்து நேபாளத்திற்குப் பறக்கும் 'மீட்பு' விமானம் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்களை சுமந்து சென்றவாறே உள்ளது. இந்திய பத்திரிகையாளர்கள் நேபாளத்தின் குறுக்கும் நெடுக்குமாக அலைபாய்ந்து தங்கள் தேசத்தின் பெரியண்ணன் தோரணையை, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நேபாளிகள்முன் பீற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து நேபாளிகள் மட்டும்தான் ஆத்திரப்படவேண்டுமா?

சர்வதேச ஏகாதிபத்திய பொருளாதார கட்டுமானத்தோடு பிணைக்கப்பட்டுள்ளது இந்தியா. இதனால், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டலுக்காக இந்த தேசத்தின் எல்லைகள் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த அடிமைத்தனமும், அது தரும் எலும்புத் துண்டும்தான் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஆன்மாவாக விளங்குகிறது.

அதுதான் பல்லாயிரம் பேரின் உயிரைக் குடித்த போபாலின் துயரத்திற்குக் காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியை பாதுகாப்பாக நாட்டைவிட்டு வெளியேற அனுமதித்ததிலும், அணு உலைகள் வெடித்து அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு மேற்கத்திய நாடுகளைப் பொறுப்பாக்கமாட்டோம் என்று அறிவித்ததிலும் இன்னும் எண்ணற்ற சந்தர்ப்பங்களிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.


(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



# பாப்பா முரசு

குட்டிக் கதை

## சிக்கனமான பையன்



கொள்ளக்குடி என்னும் ஊரில் மகா கஞ்சன் ஒருவன் இருந்தான். அவன் தன் ஒரே மகளுக்கு சிக்கனமாக மணமகனைத் தேடி, ஒவ்வோர் ஊராக அலைந்தான். சிக்கனமாக வாழ்க்கை நடத்தக்கூடிய யாருமே அவனுக்குக் கிடைக்கவில்லை. எல்லோருமே ஊதாரிகளாகவே தெரிந்தனர். இதற்காக அவன் முயற்சியை விடவில்லை. பல இடங்களில் அலைந்தான்.

எங்கெங்கோ அலைந்து, ஓர் ஊருக்குள் நுழைந்தான். நண்பன் ஒருவன் அங்கே கடை வைத்திருக்கிறார் என்பது அறிந்து அங்கு சென்றான்.

கஞ்சனின் நண்பனும் அவரை வரவேற்றார். "தங்களுக்கு என்னால் ஏதேனும் உதவி ஆகவேண்டுமா?" என்று கேட்டார்.

கஞ்சனும் தாம் வந்த வேலையைச் சொல்லி, "மிகவும் சிக்கனமானவனாக இருக்கவேண்டும். நம் இனத்தைச் சேர்ந்த வனாக இருக்கவேண்டும். அப்படி யாரேனும் இருந்தால், சொல்லுங்கள் என் மகளுக்கு மாப்பிள்ளை தேடி என் கால்கள் தேய்ந்து விட்டன" என்றான்.

"உங்கள் கவலை இன்றோடு தீர்ந்தது. எதிரில் மளிகைக் கடையில் அமர்ந்திருக் கிறான் பாருங்கள் ஒரு பையன். அவன்தான் இந்த ஊரிலேயே மிகவும் சிக்கனமான பையன். உங்கள் மகளுக்கு ஏற்றவன். இங்கேயே இருந்து அவன் நடவடிக்கை களை கவனித்தால் எப்படிப்பட்ட சிக்கன மானவன் என்பது உங்களுக்கே புரியும்" என்றார் கஞ்சனின் நண்பர்.

கஞ்சனும் அங்கேயே அமர்ந்து எதிர் கடையை பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ ஒருவர் வந்து அந்தக் கடையில் ஏதோ பொருளை வாங்கிச் சென்றார்.

உடனே அந்த இளைஞன் ஒரு பாத்திரத்தில் தன் கைகளைக் கழுவினான். பிறகு அந்தப் பாத்திரத்தை பாதுகாப்பாக ஓரிடத்தில் வைத்தான்.

இதை பார்த்த கஞ்சனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அந்த இளைஞன் ஏன் கையை கழுவினான்? பிறகு நீரைக் கீழே கொட்டாமல் ஏன் பாதுகாப்பாக வைக்கிறான்" என்று கேட்டான் கஞ்சன்.

"கடைக்கு வந்த யாரோ மிளகு வாங்கி இருக்கிறார்கள். மிளகை அவன் தன் கையால் எடுத்து போட்டிருக்கிறான். மிளகு வாசனை வீணாகக்கூடாது என்பதற்காக கைகளைக் கழுவி இருக்கிறான். அந்த நீரை வீட்டுக்கு அனுப்பிவிடுவான். அதில் இன்று அவன் வீட்டில் ரசம் வைத்து விடுவர். இப்படிப்பட்ட சிக்கனமான பையனை எங்காவது பார்த்திருக்கிறீர்களா?" என்று பெருமையுடன் கூறினார் கஞ்சனின் நண்பர்

கஞ்சனின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தது.

"சிக்கனமான பையனாக இருந்தால் என் மகளுக்குப் பாருங்கள் என்று சொன்னேன். நான் மட்டும் கொஞ்சம் ஏமாந்திருந்தால், இந்த ஊதாரிப் பையனை என் தலையில் கட்டியிருப்பீர்கள்" என்று கோபத்துடன் கத்தினான். கஞ்சனின் நண்பருக்கு, கஞ்சனின் கோபம் புரியவில்லை.

"இந்தப் பையனைவிட எப்படி சிக்கனமாக இருப்பது சொல்லுங்கள்." என்று கேட்டார்.

"மிளகு எடுத்துப்போட்ட கையை, முழுவதும் ஒரே பாத்திரத்தில் கழுவி ஒரே நாளில் ரசம் வைத்து சாப்பிட்டால் சிக்கனம் ஆகுமா? நானாக இருந்தால் ஒவ்வொரு விரலையும் ஒரு பாத்திரத்தில் கழுவுவேன். உள்ளங்கையை ஒரு பாத்திரத்தில் கழுவுவேன். ஆறு நாட்கள் ரசம் வைத்து சாப்பிடு வேன். இனிமேலாவது சிக்கனத்தை கற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான் கஞ்சன். "அடப்பாவி. இப்படியும் ஒரு கஞ்சனா?" என்று நொந்துபோனார் கஞ்சனின் நண்பர்.

## அன்புசால் தம்பி, தங்கைகளே!

உங்களின் அபிமானம் மிக்க 'பாப்பா முரசு' முற்றிலும் புதியதாக மாற்றி அமைக்கப்படவுள்ளது. அதில் நீங்களும் சின்னச் சின்னக் கதைகள், குட்டிக் குட்டி கவிதைகள் எழுதி அனுப்பலாம். நல்லவையாக அமைந்தால் 'பாப்பா முர'சில் இடம்பெறும்.

உங்களைப் போலொரு அண்ணா படிப்பிலும், விடாமுயற்சியாலும் விஞ்ஞானியாக உயர்வதைக் கூறும் குட்டித் தொடர்கதையை 'பரமண்ணா' எழுதவுள்ளார்.


விரைவில் ஆரம்பமாகும் சிறுவர் தொடரைப் படிக்க ஆயத்தமாகுங்கள். நீங்கள் எழுதும் விடயங்களை இந்த முகவரிக்கு இன்றே அனுப்பிவையுங்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி**

'பாப்பா முரசு'
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல: 167,
யாழ்ப்பாணம்.



## 'குள்ள' கிரகத்தில் 10 ஒளிரும் புள்ளிகள்



அமெரிக்கா ஏவிய, டான் விண்கலன் எடுத்து அனுப்பிய புகைப்படங்களின்படி, செரஸ் என்ற 'குள்ள' கிரகத்தின்மீது இரண்டு பிரகாசமான புள்ளிகள் இருப்பதாக கடந்த பெப்ரவரியில் விஞ்ஞானிகள் அறிவித்தனர். ஆனால், செரசில் இரண்டல்ல, பத்து பிரகாசமான புள்ளிகள் இருப்பது தெரியவந்துள்ளது.

அவை எரிமலைகளாக இருக்கலாம். அல்லது ஒளியை பிரதிபலிக்கும் உறைந்த ஏரிகளாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒரு கோளுக்கு இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களில் சில இல்லாத போது அவற்றை விஞ்ஞானிகள் 'குள்ள' கிரகம் (ட்வார்ப் பிளானட்) என்கிறார்கள்.

டான் விண்கலன் அனுப்பிய தகவல்களையும், ஹப்பிள் தொலை நோக்கிமூலம் சேகரித்த தகவல்களையும் ஒப்புநோக்கிவிட்டு பிறபாடு நாசா புதிய தகவல்களை அறிவிக்கக்கூடும். 'குள்ள' கிரகமான செரசின் புதிய தகவல்களை டான் அனுப்பத் தயாராகிக் கொண்டிருக்கிறதாம்.

## வீனஸ் பிளை



வீனஸ்பிளை என்ற செடியின் இலைகளின் மேல் பூச்சி வந்து உட்கார்ந்ததுமே, தன் பொறியில் அந்தப் பூச்சியைச் சிக்க வைத்து தன் இதழ்களை மூடி, அந்தப் பூச்சியைக் கொன்று சாப்பிட்டுவிடும்.

அந்தச் செடியில் உள்ள ஒவ்வொரு இதழிலும் ஆணிகளைப் பரப்பி வைத்தது போல முட்கள் இருக்கும். பூச்சி அதன் இதழில் வந்து உட்கார்ந்ததுமே, விஷ முட்கள் பக்கத்தில் உள்ள இதழைத் தொடும். உடனே இரண்டு இதழ்களும் பூச்சியை மூடிக்கொள்ளும். செடியில் இருந்து ஊறும் திரவம் பூச்சியை பஸ்பமாக்கி ஜீரணித்துவிடும்.

## கண்டுபிடிப்புக்கு உதவும் கருவிகள்

▲நியூட்ரோன்களின் எண்ணிக்கை கூடாமலும், குறையாமலும் ஒரே சீராக வைக்க உதவுவது எது?
**அணுக்கரு உலைகள்**

▲காற்றின் வேகத்தை அளக்க உதவும் கருவி எது?
**அனிமோ மீற்றர்**

▲ஒலியின் வலிமையை அளக்க பயன்படும் கருவி எது?
**ஓடியோ மீற்றர்**

▲கேட்கும் திறனை அதிகரிக்க உதவும் கருவி எது?
**ஓடியோ போன்**

▲கண்ணின் உட்பாகத்தையும், விழித்திரையையும் சோதிக்கும் கருவி எது?
**ஓப்தலாஸ் கோப்**



'பொம்மை நின்னு போச்சுப்பா!"
"சாவி கொடுடா"
"கொடுக்கறேன்பா..., அது வாங்கவே மாட்டேங்குதுப்பா"

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 25.05.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1096**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.


**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1094**

பரிசுக்குரியவர்: 1094
மா.ஆரபி,
பூவரசங்குளம், யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்

01. ச.மிதுனன், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
02. வ.லக்கியா, கோப்பாய் மேற்கு, கோப்பாய்.
03. எஸ்.எம்.ஷர்மி, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
04. மு. யாதவி, பரந்தன், கிளிநொச்சி.
05. என்.இஷாரா, வாகரை, மட்டக்களப்பு.
06. வ.அஸ்வத், பிரதான வீதி, நுவரெலியா.
07. சா.பிரஜீன், கொழகாமம் வீதி, நெல்லியடி.
08. கொ.யனுவிந்த், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.

## சிறந்த வர்ணத்துக்கு பரிசு தரும் எண்ணம்



# உண்மைத் தொடர்

**அதிர் இடி 90**



> **மாணவர்களையும், பாதுகாப்பு ஊழியர் களையும் ஒரு அறைக்குள் தள்ளி பூட்டினார்கள்.**
> **சற்றுத் தள்ளியிருந்த மண்டபத்துக்கு வருமாறு தாதிமாரை அழைத்துச் செல்லும் போதே அவர்கள்மீது உரசினார்கள். பின்புறத்தில் கிள்ளினார்கள்.**

# இடி அமீன்

அதனைக் கொடுத்தால் உம்மீது விழுந்துள்ள வலை விலகும். என்ன சொல்கிறீர்? என்றான். இலஞ்சப் பேய் வாயைத் திறந்தபடி தன் முன்னால் அமர்ந்திருப்பதுபோல அவருக்கு பிரமை தோன்றியது.

அவனும் கிடத்தட்ட ஒரு குட்டிப் பிசாசு போன்ற தோற்றத்தில்தான் இருந்தான். அடிக்கடி தனது பெரிய தொந்தியை கைகளால் தடவிக் கொண்டான். அவன் முகத்தில் தளும்புகள் இருந்தன.

என்ன விலை என்று கேட்டார் வெக்கிரோ!

அவன் சிறிதும் தாமதியாது "உன் சொத்துக்களை என் பெயரில் எழுதிவை!" என்றான் மிகவும் சாதாரணமாக.

வெக்கிரோவின் முகத்தில்தோன்றிய அதிர்ச்சியை பார்த்துவிட்டு "என்ன பெரிய விலையாகத் தெரிகிறதா? உன் உயிரை விடப்பெரிதல்ல, உயிர் இருந்தால் மறுபடி சம்பாதித்துக் கொள்ளலாம். இந்த நரகத்தில் கிடந்து மலம் அள்ளுவதுதான் உனக்கு விதி என்றால், நீ நிதி தரவேண்டாம் விடு!" என்று முற்றுப் புள்ளியிடுவது போலப் பேசினான்.

வெக்கிரோவுக்கு எப்படியாவது அங்கிருந்து தப்பிப்பிழைத்தால் போதும் என்றிருந்தது. தருகிறேன் என்றார்.

நம்பமுடியாமல் உண்மையாகவா, என்றான் அலி.

வெகுமதியாய் சொத்துக்கள் கிடைக்க இருப்பதால், வெக்கிரோவுக்காக இடி அமீனிடம் அலி பரிந்து பேசினான்.

இடி அமீனுக்கு அலியைப் பற்றித் தெரியும். அவன் சம்பாதிப்பது தெரியும். இப்போது வெக்கிரோவிடமும் ஏதாவது பெரிதாக வாங்கிப் பையில் போட்டிருப்பான் என்பதும் தெரியும்.

தன்னைப் போன்ற ஒருவனுக்கு நேர்மையான அதிகாரிகள் கிடைக்க மாட்டார்கள் என்பதும் தெரியும்.

அதனால் கண்டும் காணாதது போல நடப்பதோடு அவர்களது சிபாரிசுகளில் சிலவற்றையும் நிறைவேற்றி சந்தோசப்படுத்துவான்.

என்ன திடீர் கரிசனை? என்று மட்டும் கேட்டான்.

அந்த செயலாளர்தான் இவனை தூண்டி இருக்கிறான், அவனை நம்பித்தான் இவனும் என்று விளக்க வந்தவனை இடைமறித்த அமீன் உன் விருப்பம். அவனை விடுதலை செய்யலாம் என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் அமீன்.

அலிக்கு திருப்தி. அந்த மாதிரி சின்னச் சின்ன திருப்தியோடு அவன் தனக்கு விசுவாசமான அடிமையாக இருப்பான் என்பது அமீனுக்குத் தெரியும்.

வெக்கிரோ விடுதலையானார். சொத்துக்களை அலி வாங்கிக்கொண்டான்.

1977 ஜனவரியில் நடைபெற்ற சம்பவம் ஒன்று அமீனின் ஆட்சியை காட்டுமிராண்டி ஆட்சி என்று உகண்டா மக்கள் கடும் சினம் அடையவைத்தது.

மக்கெரெரே பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு கேளிக்கை விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்த விருந்துக் கொண்டாட்டத்துக்கு மருத்துவமனை தாதிமார்கள் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

நள்ளிரவுவரை ஆட்டமும், பாட்டும் நீடித்தது. அதன்பின்னர் தாதிமார் தங்கள் விடுதிகளுக்குத் திரும்புவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உகண்டா போக்குவரத்துக் கழக பஸ்ஸில் திரும்பிக் கொண்டு இருந்தனர்.

அந்த பஸ்ஸில் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலரும் சென்றனர்.

அந்த வண்டியின் பின்புறமாக வோக்ஸ் வாதன் வாகனம் ஒன்று தொடர்ந்து வந்தது. திடீரென்று பஸ்லை முந்திச் சென்று தெருவின் குறுக்காக நிறுத்தப்பட்டது.

அந்த வாகனத்திலிருந்து சீருடை அணிந்த இருவர் இறங்கினார்கள் நேராக பஸ் சாரதியிடம் சென்றனர்.

"எங்கே இந்த நேரத்தில் போகிறீர்கள்?" என்று கேட்டபடி பஸ்ஸின் உள்ளே பார்வையை எறிந்தனர்.

தாதிமார்களில் சிலர் எடுப்பாக இருந்தனர். அந்த இருவருக்கும் அவர்களை தாங்கள் அனுபவிக்க வேண்டும் என்ற சபலம் தலைதூக்கியது.

இருவரும் அரச ஆய்வுத்துறையைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள்.

பஸ்ஸை தங்கள் முகாமுக்கு கொண்டுபோகத் திட்டமிட்டனர்.

இந்த நேரத்தில் பஸ் ஓட உத்தரவுச் சீட்டு இருக்கிறதா, என்று சாரதியிடம் கேட்டனர்.

அப்படி உத்தரவுபெறும் நடைமுறையே கிடையாது என்பதால் சாரதியிடம் உத்தரவுச் சீட்டு இருக்காது என்பது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது.

இல்லை என்று அவர்கள் எதிர்பார்த்த பதிலை சாரதி கூறியதும், பஸ்ஸை தமது முகாமுக்குச் செலுத்துமாறு கூறினார்கள்.

பஸ்ஸில் இருந்த பாதுகாப்பு ஊழியர்கள் குறுக்கிட்டு விளக்கமளிக்க முயன்றபோது அவர்களது முகங்களில் குத்துக்கள் விழுந்தன.

நள்ளிரவு தாண்டி அதிகாலை இரண்டு மணிக்கு அரச ஆய்வு நிறுவன முகாமுக்குள் பஸ் வண்டி புகுந்தது.

வண்டி நின்றதும் முகாமுக்குள் தூக்கத்தில் இருந்த இராணுவத்தினர் எழுப்பப்பட்டனர். தூக்கக் கலக்கத்தோடு பஸ்ஸை சூழ்ந்து கொண்டனர்.

பஸ்சுக்குள் பெண்கள் இருப்பதைக் கண்டதும் அவர்களது தூக்கக் கலக்கம் போன இடம் தெரியவில்லை.

பஸ்ஸில் இருந்த அனைவரையும் பாதணிகளைக் கழற்றிவிட்டு கட்டடத்துக்குள் நடந்து செல்லுமாறு கட்டளையிட்டனர்.

மாணவர்களையும், பாதுகாப்பு ஊழியர்களையும் ஒரு அறைக்குள் தள்ளி பூட்டினார்கள்.

தம்மை தனியாகப் பிரித்து அடைக்க முற்பட்டதும் மாணவர்களுக்கு சந்தேகம் வந்துவிட்டது. திமிறினார்கள். அதனால் இராணுவத்தினரின் துப்பாக்கி முனைகளால் தாக்கப்பட்டனர்.

சற்றுத் தள்ளியிருந்த மண்டபத்துக்கு வருமாறு தாதிமாரை அழைத்துச் செல்லும்போதே அவர்கள் மீது உரசினார்கள். பின்புறத்தில் கிள்ளினார்கள்.

தங்களுக்குத் தீங்கு நேரப்போகிறது என்பதை தாதிமார்கள் ஊகித்து பயந்துபோனார்கள். தப்பியோடவும் முடியாது.

மண்டபத்துக்குள் சென்றதும் வக்கிரமான உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

**(தொடரும்..)**

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 625

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | | 22 | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 623 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ழ | 3 கி | 4 ரி | 5 சா | 6 மி |
| 7 தி | 8 சூ | 9 ரி | 10 ல் | | 12 த |
| 13 ர் | | 15 ர | 16 தி | | 18 வா |
| 19 ந் | 20 து | 21 கெ | | 23 ரி | 24 தி |
| 25 தா | 26 ர் | | 28 பு | 29 கா | |
| 31 ல் | | 33 த | 34 லை | 35 மு | 36 டி |

**இடமிருந்து வலம்**

01. தன்னைப் போல் பிறரையும் நேசிப்பதுதான் ...............
07. ஒருவருக்கு இது இருந்தால் எதையும் சாதித்துக் கொள்வார். (குழம்பியுள்ளது)
13. எண்ணெய் வள நாடுகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
22. உத்தமன் தாய். (திரும்பியுள்ளது)
25. குடம் ; நண்டு. (திரும்பியுள்ளது)
28. ஒரு தானிய வகை. (குழம்பியுள்ளது)
31. வெண்மை ; திருவெண்ணீறு.

**மேலிருந்து கீழ்**

01. செய்மதியில் உள்ள இது, புவிமேற்பரப்பு கதிர்ப்பு செய்யும் அல்லது பிர்திபலிக்கும் சக்தியை அளவீடு செய்கின்றது.
02. ஒரு கரடி இனம். (குழம்பியுள்ளது)
03. வக்கிராந்த பாசாணம் . (குழம்பியுள்ளது)
04. அஸால்ட் Assault என்ற ஆங்கில வார்த்தை .......... என்ற பொருளில் தமிழுக்கு வந்துள்ளது.
05. பாய் தயாரிக்கும் ஒரு புல்வகை. (திரும்பியுள்ளது)
06. கற்பதிலும், உழைப்பதிலும் முழு ஆற்றலைப் பயன்படுத்துதல். (திரும்பியுள்ளது)
23. கடல் ; மலை ; முகத்தில் வரும் சிறிய கட்டி. (திரும்பியுள்ளது)
26. வாழ்த்து ; வேண்டல்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **25.05.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 625
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.623 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

வி.சுரேந்திரன்,
100, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. வ.சாம்பவி, கண்டி வீதி, பளை.
02. தா.மதனன், குளியாப்பிட்டி.
03. அ.துசாங்கன், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
04. ந.யாதவி, திருநாவற்குளம், வவுனியா.
05. ப.கிருபானந்தன், பருத்தித்துறை வீதி, வரணி.
06. எம்.பிரோஸ்கான், நிந்தவூர், மட்டக்களப்பு.
07. திருமதி சாராதா தவராசா, பிரதான வீதி, காலி.
08. எவ்.நிதூசா, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
09. கை.வதனன், குருநகர், யாழ்ப்பாணம்
10. எம்.எம்.ஷிமாயா, கிருலப்பனை







## திரை விமர்சனம்

# உத்தம வில்லன்

கமலஹாசன் ஒரு மிகப்பெரிய நடிகர். இவர் தனது மனைவி ஊர்வசி, மகன் மற்றும் மாமனார் விஸ்வநாத்துடன் ஒரே வீட்டில் வசித்துவருகிறார். கமலுக்கும் அவரது குடும்ப டாக்டரான ஆண்ட்ரியாவுக்கும் நெருக்கமான உறவு இருந்துவருகிறது. இந்நிலையில், கமல் நடித்து முடித்த ஒரு படத்துக்கு படக்குழுவினர் ஒரு பெரிய ஓட்டலில் பார்ட்டி நடத்துகின்றனர். இதில் கமலின் குடும்பத்தினர் கலந்துகொள்கின்றனர்.

அப்போது, அந்த பார்ட்டிக்கு வரும் ஜெயராம், கமலை தனியாக சந்தித்து அவருக்கு ஒரு மகள் இருப்பதாகவும், இதுபற்றி விவரம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் தன்னை தொடர்புகொள்ளுமாறும் கூறிவிட்டு அவரிடம் தன்னுடைய விசிட்டிங் கார்டை கொடுத்துவிட்டு செல்கிறார்.

அதிர்ச்சியில் உறைந்துபோய் இருக்கும் கமலஹாசன், தனது மேனேஜரிடம் கூறி இதுகுறித்து விசாரிக்கச் சொல்கிறார். ஆனால், இதற்குள் கமலுக்கு அந்த இரகசியத்தை தெரிந்துகொள்வதற்கான ஆர்வம் அதிகமாகவே, ஜெயராமை தேடிச்சென்று சந்திக்கிறார். அப்போது, கமல் கல்யாணத்துக்கு முன்பே ஒரு பெண்ணிடம் நெருக்கமாக பழகியதையும், அந்த பெண் கர்ப்பமுற்று, அந்த பெண்ணின் கருவை கலைக்க இவரது மாமாவான விஸ்வநாத் பணம் கொடுத்ததையும், அந்த பெண் அதை வாங்க மறுத்து, அந்த கருவுடனேயே கமலை விட்டு பிரிந்து சென்றதையும், அந்த பெண்ணை தான் திருமணம் செய்துகொண்டதையும் அவரிடம் விளக்கிக் கூறுகிறார்.

அந்த பெண்ணுக்கு பிறந்த குழந்தைதான் பார்வதி மேனன். அவள் தற்போது கல்லூரியில் படித்துவருவதாக கமலிடம் கூறும் ஜெயராம், "அவள் உங்களை ஒரு வில்லனாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்" என்கிறார். தன் தவறை உணர்ந்த கமல், அவளை பார்க்கத் துடிக்கிறார்.

இந்நிலையில், கமலுக்கு ஆரம்பத்திலிருந்தே இருக்கும் தலை வலி தற்போது அதிகமாகிறது. ஸ்கேன் செய்து பார்க்கும்போது, கமலின் தலையில் ஒரு கட்டி இருப்பதாகவும், நீண்ட நாளைக்கு உயிரோடு இருக்கமாட்டார் என்றும் டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்காக தனது குருநாதர் கே.பாலச்சந்தரிடம் சென்று "உங்களையும் என்னையும் இந்த மக்கள் மறக்கமுடியாத அளவுக்கு ஒரு படத்தை இயக்கவேண்டும்" என்று கேட்கிறார். பாலசந்தர் இக்கதையைக் கேட்கிறார். இறுதியில், அந்த கதை கமலுடைய நிஜவாழ்வில் நடந்த கதை என்பது தெரிந்ததும் கமலை வைத்து உத்தமவில்லன் என்ற படத்தை இயக்க ஒப்புக்கொள்கிறார்.

கமலுக்கும் அவரது மாமனாருக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. கமல் தன் மாமனாரை கோபத்தில் திட்ட, இதனால் கமலுடைய மனைவி தனது மகன் மற்றும் அப்பாவுடன் அந்த வீட்டை விட்டு வெளியேறுகிறார். இருப்பினும், தன்னுடைய இலட்சியத்தில் விடாப்பிடியாக இருக்கும் கமல், இதையெல்லாம் தாங்கிக் கொண்டு படத்தில் நடிக்க ஆரம்பிக்கிறார்.

இறுதியில், கமல் அந்த படத்தை திட்டமிட்டபடி முடித்தாரா? பிரிந்துபோன இவர் குடும்பம் மீண்டும் ஒன்று சேர்ந்ததா? என்பதே மீதிக்கதை. மொத்தத்தில் உத்தமவில்லன் வாழ்வியல் யதார்த்தம்.

## வித்தார்த்துக்கு டும் டும் டும்

ஜூன் 11ம் திகதி திருப்பதியில் நடிகர் வித்தார்த் - காயத்ரிதேவி திருமணம் நடைபெற இருக்கிறது. 'மின்னலே', 'சண்டைக்கோழி', 'லீ', 'குருவி' போன்ற படங்களில் துணை நடிகராக தனது திரையுலக பயணத்தைத் தொடங்கியவர் நடிகர் வித்தார்த். பிரபு சாலமன் இயக்கிய 'மைனா' படத்தில் நாயகனாக நடித்ததன்மூலம் அனைவரது பாராட்டையும் பெற்றார். 'முதல் இடம்', 'கொள்ளைக் காரன்', 'காடு' உள்ளிட்ட பல படங்களில் நாயகனாக நடித்தார். தற்போது இவரது நடிப்பில் 'உலா', 'விழித்திரு' ஆகிய படங்கள் வெளிவர இருக்கிறது. இந்நிலையில், வித்தார்த்துக்கும் காயத்ரி தேவி என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டு இருக்கிறது. ஜூன் 11ம் திகதி திருப்பதியில் திருமணம் நடைபெற இருக்கிறது. திருமண வரவேற்பு நிகழ்ச்சியை சென்னையில் ஜூன் 17ஆம் திகதி நடத்த திட்ட மிட்டு இருக்கிறார்கள்.



## சல்மான்கானின் தண்டனை நிறுத்தி வைப்பு



2002ஆம் ஆண்டு நடந்த ... விபத்து வழக்கில் கடந்த ... திகதி நடிகர் சல்மான் ... மும்பை செஷன்ஸ் கோ... 5 ஆண்டு ஜெயில் த... விதித்தது. அன்றைய... அவருக்கு முழு தீ... வழங்கப்படாததால்... காரணம் காட்டி மு... ஹைகோர்ட்டு அவ... இடைக்கால ஜாமீ... இதனால் சல்மான்க... செய்யப்படவில்லை... சல்மான்கானுக்கு வி... விதித்த தண்டனை... வைப்பதாகவும் அவரு... ஜாமீன் வழங்குவதாகவு... திப்சே தீர்ப்பு கூறினார். இந்த தீர்ப்பு காரணமாக சல்மான்கான் ஜெயிலுக்கு போ... தவிர்க்கப்பட்டது. இதனால் சல்மான்கான் குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர்.

## சேலை கட்டும் பெண்ணுக்கு வெட்கமா?

"பிளஸ் டூ எக்ஸாம் லீவு. ரொம்ப ஜா... நிறைய சொந்தக்காரங்க வீட்டுக்குப் போ... நிறைய நிறைய சினிமா பார்க்கிறேன். சந்தோஷமான சம்மர்!" லட்சுமி மேனன் மலையாளச் சாரல்.

"பிளஸ் டூ-வில் எவ்வளவு மார்க் வ...

"ம்ம்... நல்லாவே எழுதியிருக்கேன். ... பண்ணிடுவேன். பரீட்சை ரிசல்ட் வந்ததும் ... நல்ல காலேஜ்ல, சூப்பர் கோர்ஸ்ல சே...

"தமிழ் சினிமாவின் ஹிட் ஹீரோயின்... எல்லா படமும் ஹிட். ஆனா, காலேஜ் ... போறேன்னு சொல்றீங்க..!"

சட்டெனக் குரலில் அலுப்பு... "ப்ச்... ஹீரோயின்னு நீங்க சொல்லிட்டா போது... நடிச்சிருக்கீங்கனு என்னை யாரும் பாரா... தெரியுமா!? ஒரே மாதிரி கேரக்டர்ல நடி... பாராட்டுவாங்க? 'கொம்பன்' ஷூட்டிங் ஸ்... காஸ்ட்யூம்னு பாவாடை - தாவணி கொடு... வந்துநின்னேன். அங்கே இருந்த பொண்... என்னை ஒரு மாதிரி பார்க்க ஆரம்பிச்ச...



## முதல் முறையாக அஜித்துடன் இணையும் சூரி

வீரம் சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கவிருக்கும் படத்தில் காமெடியனாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் சூரி. வீரம் சிவா - அஜித் மீண்டும் இணையும் படத்தின் படப்பிடிப்பு சென்னையில் நாளை தொடங்கவிருக்கிறது. சண்டைக் காட்சிகளுடன் இப்படத்தின் படப்பிடிப்பை ஆரம்பிக்கிறார்கள். அஜித்தின் தங்கையாக லட்சுமி மேனன், நாயகியாக ஸ்ருதிஹாசன், இசையமைப்பாளராக அனிருத், ஒளிப்பதிவாளராக வெற்றி ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இந்நிலையில், தற்போது இப்படத்தில் காமெடி வேடத்தில் நடிக்க சூரி ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார். வீரம் படத்தில் நடிக்கவே சூரியிடம் பேசினார்கள். ஆனால், பல்வேறு காரணங்களால் அப்படத்தில் அவரால் நடிக்க முடியாமல்போனது. அஜித்துடன் ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும் என்ற சூரியின் ஆசை இப்படத்தின் மூலம் நிறைவேறி இருக்கிறது.



## பாலக்காட்டு மாதவன்

தமிழ் சினிமாவின் மிக வித்தியாசமான கேரக்டர்... தயாரிப்பாளர் ஒஸ்கார் வி.ரவிச்சந்திரன், கோடிகளைக் கொட்டி படங்களைத் தயாரிப்பார் பட பூஜைகளுக்கு ஜாக்கிசான், அர்னால்ட் என அகில உலக பிரபலங்களை வரவழைப்பார்.

ஆனால், மனிதர் எங்குமே தலைகாட்டமாட்டார். இவர் தயாரிக்கும் படங்களின் போஸ்டர்கள் திரும்பும் திசையெல்லாம் பளபளக்கும். ஆனால், இவருடைய பாஸ்போர்ட் சைஸ் படம்கூட எங்கும் வெளியானது இல்லை. இந்த விசித்திர சாதனையை கடந்த வாரம் உடைத்தெறிந்தது அந்த விளம்பரம்!

"எங்கள் வங்கியில் பெற்ற 96 கோடி ரூபாய் கடன்தொகையை ஒஸ்கார் வி.ரவிச்சந்திரன் திருப்பித் தரவேண்டி இருப்பதால், அவரது சில சொத்துக் களை வங்கி தன்வசம் எடுத்துக் கொள்கிறது" என்ற தேசிய வங்கி ஒன்றின் அறிவிப்பில், ஒஸ்கார் ரவிச்சந்திரனின் பழைய பாஸ்போர்ட் சைஸ் படம் இடம்பெற்றிருந்தது.

தசாவதாரம், ஐ என தமிழ் சினிமாவின் பட்ஜெட்டை அடுத்தடுத்து எகிறச் செய்பவர், இவ்வளவு கடனில் சிக்கித் தவிக்கிறாரா?!

## சல்மான்கானின் தண்டனை நிறுத்தி வைப்பு



2002ஆம் ஆண்டு நடந்த கார் விபத்து வழக்கில் கடந்த 6ஆம் திகதி நடிகர் சல்மான்கானுக்கு மும்பை செசன்ஸ் கோர்ட்டு 5 ஆண்டு ஜெயில் தண்டனை விதித்தது. அன்றைய தினம் அவருக்கு முழு தீர்ப்பு நகல் வழங்கப்படாததால் அதை காரணம் காட்டி மும்பை ஹைகோர்ட்டு அவருக்கு 2 நாள் இடைக்கால ஜாமீன் வழங்கியது. இதனால் சல்மான்கான் கைது செய்யப்படவில்லை.

சல்மான்கானுக்கு கீழ் கோர்ட்டு விதித்த தண்டனையை நிறுத்தி வைப்பதாகவும் அவருக்கு முழு ஜாமீன் வழங்குவதாகவும் நீதிபதி திப்சே தீர்ப்பு கூறினார்.

இந்த தீர்ப்பு காரணமாக சல்மான்கான் ஜெயிலுக்கு போவது தவிர்க்கப்பட்டது. இதனால் சல்மான்கான் குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர்.







ளஸ் டூ எக்ஸாம் லீவு. ரொம்ப ஜாலியா இருக்கேன்.
ப சொந்தக்காரங்க வீட்டுக்குப் போறேன்.
ப நிறைய சினிமா பார்க்கிறேன். இது ரொம்ப
ஷமான சம்மர்!" லட்சுமி மேனன் பேச்சில்
பாளச் சாரல்.
ளஸ் டூ-வில் எவ்வளவு மார்க் வாங்குவீங்க?"
ம்... நல்லாவே எழுதியிருக்கேன். பாஸ்
டுவேன். பரீட்சை ரிசல்ட் வந்ததும், கேரளாவிலேயே
காலேஜ்ல, சூப்பர் கோர்ஸ்ல சேரணும்!"
மிழ் சினிமாவின் ஹிட் ஹீரோயின் நீங்க. நடிச்ச
படமும் ஹிட். ஆனா, காலேஜ் படிக்கப்
ன்னு சொல்றீங்க..!"
டெனக் குரலில் அலுப்பு... "ப்ச்... ஹிட்
யின்னு நீங்க சொல்லிட்டா போதுமா?" நீங்க நல்லா
ருக்கீங்கனு என்னை யாரும் பாராட்டினதே இல்லை
மா!? ஒரே மாதிரி கேரக்டர்ல நடிச்சா, எப்படிப்
டுவாங்க? 'கொம்பன்' ஷூட்டிங் ஸ்பொட். போனதுமே
பூம்னு பாவாடை - தாவணி கொடுத்தாங்க. கட்டிட்டு
ின்னேன். அங்கே இருந்த பொண்ணுங்களே,
ஒரு மாதிரி பார்க்க ஆரம்பிச்ச?

# முதல் காதல்

கமல் நடிப்பில் வெளியான வேட்டையாடு விளையாடு படத்தில் இடம் பெற்ற மஞ்சள் வெயில்... என்னும் பாடல்மூலம் பாடகராக அறிமுகமானவர் கிரிஷ். இப்படத்தை தொடர்ந்து பல படங்களுக்கு பாட்டுபாடி வந்த கிரிஷ், தற்போது கதாநாயகனாக 'புரியாத ஆனந்தம் புதிதாக ஆரம்பம்' படம்மூலம் நாயகனாக அறிமுகமாகிறார். இதில் இவருக்கு ஜோடியாக சிருஷ்டி டாங்கே நடிக்கிறார். மேலும் வெண்ணிலா கபடிகுழு நித்தீஷ், பிசா பூஜா, மதுரை ஜானகி, ஹரீஷ்மூசா, விஜய்பாபு ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

இப்படத்தை பல வெற்றிப்படங்களை தயாரித்த இப்ராகீம் ராவுத்தர் தனது இராவுத்தர் பிலிம்ஸ் சார்பில் தயாரித்து வருகிறார். இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமானின் சகோதரி ரைஹைனா சேகர் இசையமைக்கிறார். செந்தில்மாறன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம், எழுதி தம்பி செய்யது இப்ராஹீம் இயக்குகிறார். இவர் ஆர்.மாதேஷ், தருண்கோபி ஆகியோரிடம் உதவியாளராக பணியாற்றியவர்.

படம் பற்றி இயக்குனர் கூறியதாவது, இந்த படம் முழுக்க முழுக்க காதல் சம்மந்தப்பட்டது. எல்லோருக்கும் ஒரு முதல் காதல் கண்டிப்பாக இருக்கும். அதில் சில வி'யங்களை சொல்ல தயங்குவார்கள் அப்படி சொல்ல தயங்குகிற விஷயம் தான் இந்த படத்தின் கரு.

இந்த படத்திற்காக காட்சிகள் 23 நாட்கள் மழையிலேயே எடுக்கப்பட்டது. கவிஞர் வாலி கடைசியாக எழுதிய பாடல் இந்த படத்திற்காகத்தான். அதுவும் மரணம் சம்மந்தப்பட்ட பாடல்தான்.

படப்பிடிப்பு தென்காசி, குற்றாலம், மதுரை அம்பாசமுத்திரம், ராஜபாளையம், சென்னை போன்ற இடங்களில் நடைபெற்றுள்ளது. படம் விரைவில் திரைக்கு வர உள்ளது என்றார்.









## 50 கோடியில் ருத்ரமாதேவி!

தெலுங்கில் நாயகி அனுஷ்காவை வைத்து 50 கோடி செலவில் 'ருத்ரமாதேவி' என்ற படம் உருவாகிறது. தமிழ்நாட்டு ராணி மங்கம்மாள் மாதிரி, தெலுங்கு தேசத்தின் வரலாற்று காலத்து நாயகி ருத்ரமாதேவி. ருத்ரமாதேவியின் வரலாறு கடந்த 1950ஆம் ஆண்டில் சினிமாக வந்திருக்கிறது. இருந்தாலும் இப்போது அதனை மிகவும் பிரம்மாண்டமாக தயாரிக்கிறார்கள்.

அருந்ததியில் அனுஷ்கா மிரட்டியதைப் பார்த்து தான் இந்த பட்த்தை இயக்குகிறார் இயக்குனர் குண சேகரன்.

முன்னணி நாயகன் ராணா இளவரசராக நடிக்கும் இப்படத்தில் மொத்தம் 9 பாடல்கள்.

## கடனில் சிக்கித் தவிக்கிறாரா?!

ரிப்பாளர்
விச்சந்திரன், கோடிகளைக்
ங்களைத் தயாரிப்பார் பட
கு ஜாக்கிசான், அர்னால்ட்
உலக பிரபலங்களை
ார்.
, மனிதர் எங்குமே
மாட்டார். இவர் தயாரிக்கும்
பாஸ்டர்கள் திரும்பும்
பளபளக்கும். ஆனால்,
போர்ட் சைஸ் படம்கூட
து இல்லை. இந்த விசித்திர
ந்த வாரம் உடைத்தெறிந்தது
ரம்!
வங்கியில் பெற்ற 96 கோடி
ன்தொகையை ஒஸ்கார்
சந்திரன் திருப்பித் தரவேண்டி
தால், அவரது சில சொத்துக்
வங்கி தன்வசம் எடுத்துக்
ர்கிறது" என்ற தேசிய
வங்கி ஒன்றின் அறிவிப்பில்,
ஸ்கார் ரவிச்சந்திரனின்
ழைய பாஸ்போர்ட் சைஸ்
டம் இடம்பெற்றிருந்தது.
தசாவதாரம், ஐ என தமிழ்
சினிமாவின் பட்ஜெட்டை
அடுத்தடுத்து எகிறச்
செய்பவர், இவ்வளவு
கடனில் சிக்கித்
தவிக்கிறாரா?!

## இது என்ன மாயம் படத்திற்கு யு சான்றிதழ்

விஜய் இயக்கத்தில் விக்ரம் பிரபு நடித்துள்ள படம் 'இது என்ன மாயம்'. இப்படத்தில் விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். மேலும் அம்பிகா, ராதிகா உள்ளிட்டோர் பலர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்கள்.

இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். விஜய்யுடன் இணைந்து இவர் இசையமைப்பது 7ஆவது படமாகும். நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்திருக்கிறார். ரொமான்டிக் மற்றும் பொழுதுபோக்கு படமாக உருவாகி இருக்கும் இப்படத்தை மேஜிக் பிரேம்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

விறுவிறுப்பாக நடந்து வந்த இப்படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டு சமீபத்தில் இப்படத்தின் இசையை வெளியிட்டனர். இது ரசிகர்களிடம் வரவேற்பு பெற்றுவரும் நிலையில், இப்படம் தணிக்கை குழுவிற்கு அனுப்பப்பட்டது. படத்தைப் பார்த்த தணிக்கை குழுவினர் படத்தின் எந்த காட்சியிலும் கட் செய்யாமல் யு சான்றிதழ் வழங்கியுள்ளது.

தேன் கிண்ணம்



# பாதி பாதி!

ஒன்றும், ஒன்றும் ஒன்றில்லை
ஒன்றாகச் சேரவும் தடையில்லை!
என்கின் நாமோ பாதிபாதி
ஒன்று சேரின் என்ன மீதி?
ஒன்றும் ஒன்றும் ஒன்றென்றும்
ஒத்து வாராச் செல்நெறியே
தின்றே வைத்த கணக்கியலும்
திசைக் கொன்றா விலக்கிவிடும்!
ஆண்பாதி, பெண்பாதி என்றவரின்
ஆய்வது செய்முறை காதலர்கள்;
வீண்போக செய்யும் பொறிமுறையே
வீணாக் காலமும் போகலாமோ?
பொழுதும் நாளில் நான்காமே
பொழுது பட்டால் முதலிரவாம்;
தழுவி இருவர் ஒன்றாகின்
தெவிட்டாக் காதல் வாழ்வாகும்!
காதல், காதல் காலமெல்லாம்
கட்டிப் போட்டுத் தொடரட்டும்
ஆதல் ஆணும் பெண்ணுமென்
அன்றிக் காதல் எங்குண்டாம்?
அன்பு காதல் என்றுமில்லை
அதனில் தோய்தல் காதலரோ?
ஒன்றும், ஒன்றும் ஒன்றென்றும்
உளறல் போலே இதுவாகும்!
தந்தை, தாயும் சகோதரர்
தரணி வாழும் மாந்தரிடை
முந்தி அன்பு தோன்றட்டும்
முகிழும் காதல் அன்பாமோ?
இச்சை புணர்ந்த காமமுணர்
இதையும், அதையும் சேர்க்காமல்;
பச்சைக் காதல் பாதிபாதி
புணர்த லொன்றாய் என்றுணர்வீர்!

நவாலியூர்க் கவிராயர்

# கவிப் பிரசவிப்பு

கவி வடிக்க
கருத்தேடி
உருக்கொடுக்க
நாடினேன் தலைப்பதை!


பேனாமுனையின்
பேருவகையதால்
பெருமிதம் கொண்டே
ஏடெடுத் தெழுதினேன்!

எதுகையும் மோனையும்
எதிரும் புதிருமாக
ஏட்டிக்குப் போட்டியாக
கடை மோனையதில் முட்டியது!

சந்தம் அமைந்த
எழுத்தணி சுதி பிசகாது
முத்துக் கோர்வையதாய்
முழுக்கவிதை வடித்தது!


சூரிய காந்தி கண்ட
சூரியச் சிரிப்பாய்
சந்திரக்கல் கண்ட
சந்திரச் சிரிப்பாய்

எந்தன் உள்ளமும் பூரித்தது
கவிப் பிரசவிப்பும் வென்றது
எண்ணமும் வண்ணமும்
சங்கமிக்க
தத்தித் தவழ்ந்து தித்தித்தது!



அப்ரார் எ. அலிஸ்,
யாழ்ப்பாணம்.

# மரணம் வரும்வரை



நான் ஏன் பிறந்தேனென்று
எனக்கே தெரியவில்லை
ஏன் வாழ்கின்றேனென்று
எதுவும் புரியவில்லை
என்னைச் சுற்றி
என்ன நடக்கிறதென்று
ஒன்றுமே விளங்கவில்லை
எல்லாமே வேசமாயுள்ளது
நடப்பது எதுவுமே
நன்றாயில்லை
நாளை என்பது
நிச்சயமில்லை
ஆனாலும் நான்
நடைப்பிணமாய் வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்
ஏன் தெரியுமா??
மரணத்தின் பிடியிலாவது
மகிழ்ச்சியை
காணலாமென்னும்
நம்பிக்கையில்.

அளவெட்டி, ப.உதயகுமார்

இந்தப் புவியில்
எங்கு சென்றாலும்
அண்டவெளியில் தான்
வாழ்ந்திட விளைந்தாலும்
இணக்கம் ஒன்று.
இல்லை யென்றிருந்தால்
மனித இயக்கமே
இங்கு இருந்திருக்காது.

மனித உருவாக்கம்
உறவு முறைகள்
நாளாந்த சீவியம்
எதிர்கால திட்டமிடல்
அத்தனைக்கும் தேவை
நல் இணக்கப்பாடு
இல்லையேல் மீட்சியில்லை
இந்த மனிதத்திற்கு.

ஒற்றுமையின் மூலம்
உலகில் உருவானதே
உயரிய நெறி வாழ்க்கை
நீடித்த மனநிம்மதி
இணக்கம் இல்லாவிடில்
சமூக பற்று மாண்டுபோய்
மாக்களாகியிருப்பர்
மண்ணில் மாந்தரெல்லாம்

தேவைகளுக்கான இந்த
பற்று வாழ்க்கையில்
சட்டங்களும் திட்டங்களும்
வாழும் மனிதனை
செம்மைப்படுத்தும்
சிறந்த சாதனங்களாயின
மனித முதிர்ச்சிக்கு
அவை வழிவகுத்தன.

ஆற்றல்களாலும்
வயது அனுபவங்களாலும்
முதிர்ச்சி நானென
எக்காளமிட்ட போதும்
தோற்றுப் போய்
நிற்கின்றது மனிதம்
இணக்க மின்மையை
வலிந்து ஆக்கிரமித்ததனால்

ஆளப் பிறந்தவரென்றும்
ஆளவிடு என்றும்
எங்கு பார்த்தாலும்
மலிந்த கொலைவெறி
எவ்வளவு சாதித்தும்
பயனொன்றும் வராது
எண்ணத்தில் நல்
இணக்கம் இல்லையெனில்.



எம்.ஐ.எம். அஷ்ரப்,
சாய்ந்தமருது



# பாடசாலையில் முதல் நாள்...

முன்பள்ளியில் கற்று
முதுகலைமானி பட்டம் பெற்றதும்
முத்தமிழ்க் கடலில் மூழ்க
எண்ணி முதலடி வைத்தேன்
பள்ளிக்கூடத்தில்...

அருள்விழி கொண்டு
அபயக் கரம் உயர்த்தி
அழகாய் வீற்றிருந்த
அன்னை சரஸ்வதி - என்னை
அன்பாய் வரவேற்றாள்.

அரிச்சுவடி கற்றுத் தேர்ந்த
அறிஞர்கள் பலர் - அங்கே
அடுத்த கட்ட படிப்புக்காய்...

கையில் பிரம்பும் கண்ணில்
கோரமும்
மூக்கில் கோபமுமாய்
நான் சித்தரித்த ஆசானை
அங்கே காணவில்லை.

அன்பு விழியும் அரவணைக்கும்
கரமுமாய் அமர்ந்திருந்தவரை
என்னையொத்த
அறிஞரென்றே நினைத்தேன்.

அவர் கற்பிக்கும் போது கண்ட
அறிவும் அனுபவமும்
அடையாளம் காட்டின...
ஆசான் என்று.

வசந்தமகள் திவ்யா

# மங்கையர் திலகம்



**மகளிர்** இரட்டையர் WTA ரென்னிஸ் தரவரிசையில் தரம் ஒன்றைக் கொண்டிருப்பவர் இந்திய வீராங்கனை சானியா மிர்ஸா. இவர் பாகிஸ்தானின் மருமகள். கிரிக்கெட் வீரர் சொஹெப் மாலிக் இவரது கணவர். நாங்கள் இரண்டு நாடுகளைச் சேர்ந்தவர்கள். இரண்டு வேறுபட்ட தொழில்சார் விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள். இது ஒரு தனித்துவமான நிலைமைதான் என்கிறார் சானியா. மேலும் எல்லையின் இரு பக்க மக்களும் கொண்டாடப்படும் பெண்மணியாகவும் இவர் இருக்கிறார்.

எனது வளர்ச்சி இரு நாட்டு விளையாட்டு வீரர்களுக்கும் ஆதர்சமாக இருந்தால் சந்தோசப்படுவேன். அதுவும் பெண்கள் என்னைப்போல ரென்னிஸ் ரெக்கட்டை கையில் எடுத்தால் இன்னும் நிறைய சந்தோசப்படுவேன் என்பவர், எம்மிரு நாடுகளில் மட்டுமல்ல உபகண்டத்திலேயே பெண்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவது குறைவென்றே சொல்லவேண்டும். தொழில்சார் விளையாட்டு பெண்களை உன்னத நிலைக்குக் கொண்டுபோகும் என்பதை பெண்களோ அவர்களது பெற்றோர்களோ ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டும் என்பதே என் ஆசை என்று கூறியுள்ளார்.

சானியா முன்னதாக ஒற்றையர் மகளிர் பிரிவில் தரவரிசை 30 வரை உயர்ந்தவர். இருந்தும் தொடர்ச்சியான உபாதைகள் இவரை ஒற்றையர் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற வைத்தன. இருந்தும் முற்றுமுழுதாக விலகவேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டபோது இரட்டையர் ரென்னிஸ் விளையாட்டை சானியா ஏற்றுக்கொண்டார். இன்று அவர் பெண்களின் முன்மாதிரி வீராங்கனை. இவரின் கருத்துக்களை பெண்கள் மற்றும் பெற்றோர் கவனத்தில் எடுத்தால் உபகண்டத்தில் பல்வேறு துறைகளிலும் நிறையவே பிரகாசிக்கும் வீராங்கனைகளைக் காணமுடியும்.

# இடை விலகல்

**இங்கிலாந்து** துடுப்பாட்ட வீரர் ஜொனதன், ட்ரொட் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். நடைபெற்று முடிந்த இங்கிலாந்து மே.இந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இந்தத் தொடரில் இவர் எடுத்த ஓட்டங்களின் எண்ணிக்கை 72 மட்டும். அதாவது ஆறு இனிங்சுகளில் மூன்று பூஜ்ஜியமும் அடக்கம்.

எனவே இவராகவே விலகிக்கொண்டது மரியாதைக்கு உரியதுதான். முன்னதாக 2013இல் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரின்போது இவர் சூழ்நிலைகளை சமாளிக்கமுடியாமல் பதகளிப்பாக தானாகவே தொடரின் இடைநடுவில் இங்கிலாந்து திரும்பியவர். அப்போது இவர்மீது டேவிட் வோர்ணர் வீசிய சொல்லாடல்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.




ஆனாலும் இரண்டு வருடங்களின்பின் இவருக்கு இங்கிலாந்து சந்தர்ப்பத்தைக் கொடுத்தும் அதனைச் சரிவர பயன்படுத்திக்கொள்ள முடியாத துர்ப்பாக்கியசாலியாக இவர் அமைந்துவிட்டார்.

34 வயதான இவர், 52 டெஸ்ட் மற்றும் 68 ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர். அறிமுக டெஸ்டிலேயே (2009) அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஆஷஸ் தொடரில் சதம் அடித்தவர். மொத்தம் இவரது பெயரில் 9 சதங்கள் இருக்கின்றன. எது எவ்வாறாயின் மிகுந்த மென்மையான மனப்போக்கைக் கொண்ட இவரால் கடுமையான சர்வதேச போட்டிகளை எதிர்கொள்ள முடியவில்லை என்பதே உண்மை. இவர டெஸ்டில் இருந்த ஒதுங்கினாலும் வோரிக்ஷயர் கவுன்ரிக்காக தொடர்ந்து விளையாடுவார் என்று கூறியுள்ளார். இன்னொரு விடயம் இவரும் தென் ஆபிரிக்காவில் பிறந்தவர் என்பதாகும்.

# கேட்டு நடவுங்கள்



**வசீம்** அக்ரம் தற்போது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுனராவார். முன்னாள் பாகிஸ்தான் வேகப்பந்து ஜாம்பவானான இவர் தற்போதைய பாகிஸ்தான் அணி பற்றிப் பேசுகிறார். பாகிஸ்தான் அணியின் வீரர்கள் அடிக்கடி விலக்கப்படுவது தகுதிபேண் நிலைகுறைவால் மாத்திரம் அல்ல. ஒழுக்கமீறல்கள் தொடர்பிலும் வீரர்கள் விலக்கப்படுகிறார்கள்.

இம்முறை பங்களாதேஸ் சென்ற கிரிக்கெட் அணியில் உமர் அக்மல், அகமட் செஜாட் இருவரும் இக்காரணத்தாலேயே விலக்கப்பட்டிருந்தனர். இது பற்றிப்பேசும் அக்ரம், இத்தகைய நடவடிக்கைகளுக்கு முன்னால் சரியான மேலாண்மை, ஒழுக்கமுறைப் போதனைகளைச் சரியாகச் செய்தால் இப்படி அணியில் இருந்து நீக்கும் தேவைகள் ஏற்படாது. சரியான முகாமைத்துவம் இன்மையால் எதிர்வரும் பத்து வருடங்களுக்கு விளையாடக்கூடிய வீரர்களை இழக்கவேண்டி ஏற்படுகிறது என்று கூறியுள்ளார்.

இவரது இந்தக் கண்ணோட்டம் வித்தியாசமானதாக இருப்பதுடன், யதார்த்தபூர்வமாகவும் இருக்கிறது. பாகிஸ்தான் அணியின் பயிற்றுனராக சந்தர்ப்பம் வாய்த்தால் ஏற்பீர்களா என்று கேட்டதற்கு, இது ஒரு சவாலான தொழில். இப்பொழுது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் திருப்தியாகவே இருக்கிறேன்.

ஏதாவது இருப்பின் அது பாகிஸ்தான் பக்கம் இருந்துதான் வரவேண்டும், பொறுத்திருந்து பார்ப்போம் என்பவர், ஐ.பி.எல். போட்டிகளில் பாகிஸ்தான் இங்கிலாந்து வீரர்கள் இன்மை என்பது ஒரு குறைபாடுதான். வருமானரீதியாக மட்டுமல்ல, சிறந்த நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள ஐ.பி.எல் சந்தர்ப்பம் அளிக்கிறது. அதோடு, மிகப்பெரிய இரகசிய கூட்டத்தின்முன் விளையாடும்போது தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். நிச்சயம் எதிர்காலத்தில் இவர்களும் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவார்கள் என்று நம்புகிறேன் என்று முடிக்கிறார் வசீம் அக்ரம்.

# இனி மாறுமா?




**நியூசிலாந்து** கிரிக்கெட் வீரர் ஜெஸிரைடரை யாரும் மறந்திருக்கமுடியாது. தகைமைக் குறைவு என்பதற்கு அப்பால், மைதானத்துக்கு அப்பாலான இவரது நடவடிக்கைகள் இவரை கிரிக்கெட்டில் இருந்து ஒதுக்கிவைத்த சந்தர்ப்பங்கள் அநேகம்.

2013 ஒரு மதுபான சாலையில் ஏற்பட்ட கைகலப்பில் இவர் ஒரு வாரம் கோமா நிலைக்குக்கூடச் சென்றிருந்தார். அதில் இருந்து மீண்டுவர இவருக்கு ஏழு மாதங்கள் ஆயிற்று. தற்போது இவரைத் தாக்கிய இருவருக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

ஜெஸிரைடர் மீண்டபின்னும் கிரிக்கெட்டைக் கைவிடவில்லை. உள்ளூர் போட்டிகளில் விளையாடினாலும், உலகக் கிண்ண இறுதிப்போட்டி வரை முன்னேறிய நியூசிலாந்து அணியில் இடம்பிடித்துக் கொள்ள முடியவில்லை. தற்போது இங்கிலாந்து கவுன்ரி அணியான எசெக்ஸ் அணிக்காக விளையாடிக் கொண்டிருக்கும் இவர் எதிர்காலத்தில் நியூசிலாந்து தேசிய அணியில் இடம்பிடிப்பாரா என்பதைச் சொல்லத்தெரியவில்லை.

# இன்னொரு பாய்ச்சல்




**மீண்டும்** குமார் சங்ககக்கார பற்றிய பெருமிதப் பேச்சுக்கள் கேட்கின்றன. உலகத் தரவரிசையில் சிறந்ததொரு கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றவர் இவர். இங்கிலாந்தின் சர்வே கவுன்ரி அணியில் பிரமாதமாக விளையாடிக் கொண்டு இருக்கையில் அவுஸ்திரேலியாவில் இருந்து இவருக்கு அழைப்பு வந்திருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டியான BIG BASH மிகப் பிரபல்யமானது. கடந்த உலகக் கிண்ணப்போட்டிகளுடன் 404 ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய பெருமையுடன் ஓய்வு பெற்றார் இவர்.

இவ்வருட ஓகஸ்ட் மாதத்துடன் டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் ஓய்வுபெறும் எண்ணத்தை வெளியிட்டுள்ளார். இவர் தற்போது சங்கக்கார பிக்பேஸ் அணிகளில் ஒன்றான ஹோபார்ட் ஹரிக்கேன்ஸ் அணியில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளார்.

ஹரிகேன்ஸ் பயிற்றுனர் டேமியன் ரைட் குறிப்பிட்ட ஒரு கருத்து சங்கக்காரா எங்கு நிற்கிறார் என்பதைக் காட்டும்.


அவர் கூறும்போது குமார் கைச்சாத்திட்டது ஹோபார்ட் ஹரிகேன்சுக்கு மட்டுமல்ல முழு பிக்பேஸ் சுற்றுப்போட்டிக்குமே பெருமை என்றிருக்கிறார்.

இவர் ஒரு தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் மட்டுமல்ல சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவருமாவார் என்றும் மேலும் கூறியுள்ளார். சங்கா கூறும்போது BBL மிகப்பெரிய சுற்றுப்போட்டி. இதில் பங்கேற்பதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு சந்தோசமாக எதிர்கொள்ளப்போகிறேன் என்று கூறியுள்ளார்.

- ஜோசப் கிருஷ்ணா -




பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.



# கருக்குழாய் கர்ப்பம் ஆபத்தானதா?

இந்த வகை கர்ப்பத்தில் மாதவிலக்கு தள்ளிப்போவது, மயக்கம் என எல்லா அறிகுறிகளும் இருக்கும். சிறுநீர் பரிசோதனையில் கர்ப்பம் உறுதி செய்யப்பட்டிருக்கும், ஆனாலும் அந்தக் கர்ப்பம் ஆரோக்கியமானதா, கர்ப்பப்பையில்தான் வளர்கிறதா, என்பதை அந்தத் தாய் அறியவாய்ப்பில்லை.

கர்ப்பப்பையில் வளர்வதற்குப் பதில் கருக்குழாயில் வளர்ந்தால் அந்தக் கருவை காப்பாற்றமுடியாது. கவனிக்காமல்விட்டால் தாயின் உயிருக்கும் ஆபத்தாகலாம். இயற்கையாக பெண்ணின் கருமுட்டையும் ஆணின் உயிரணுவும் சேர்ந்து கரு உருவாகிறது. இதை கருக்குழாயானது எடுத்துச்சென்று கர்ப்பப்பையினுள் வைக்கிறது.

அங்கு அது வளர்கிறது. இது ஆரோக்கியமான கர்ப்பம். கருக்குழாயில் தொற்று இருந்தாலோ சிதைந்து போயிருந்தாலோ கருவானது கர்ப்பப்பைக்குள் நகர்த்தப்படுவது தடுக்கப்பட்டு கருக்குழாயிலேயே தங்கி வளரத்தொடங்கும். கர்ப்பப்பை மட்டுமே கருவைத்தாங்கி அதன் ஒவ்வொரு கட்ட வளர்ச்சிக்கும் ஈடுகொடுக்கும் சக்தி உடையது.

மிகவும் குறுகலான கருக்குழாயினுள் கருவானது வளரமுடியாமல் 40 முதல் 70 நாட்களுக்குள் குழாயையே வெடிக்கச்செய்துவிடும். சிலநேரங்களில் கருவானது குழாயி-லேயே அழுகிப்போகலாம். அதுவும் தாய்க்கு ஆபத்தானது. சிறுநீர் பரிசோதனையில் கர்ப்பம் உறுதி செய்யப்பட்டாலும் கருவானது கர்ப்பப்பையில் இருப்பதை 38 முதல் 45 நாட்களில்தான் தெரிந்துகொள்ளமுடியும்.

அப்படித் தெரியாவிட்டால் கருக்குழாய் கர்ப்பமாக இருக்கலாம் என சந்தேகப்படலாம். இரத்தப் பரிசோதனை மற்றும் ஸ்கேன் செய்து பார்ப்பதன்மூலம் கருக்குழாய் கர்ப்பமா என கண்டுபிடிக்கலாம். கருக்குழாயில் தங்கி வளரும் குழந்தையைக் காப்பாற்றமுடியாது. அதை வளரவிடுவது தாயின் உயிருக்கே ஆபத்தானது என்பதால் ஊசி அல்லது மாத்திரைமூலம் அதை மடியச்செய்யவேண்டும்.

அறுவை சிகிச்சையின்மூலம் கருவை வெளியே எடுத்து கருக்குழாயை பாதுகாக்கலாம். சிலருக்கு கருக்குழாயானது அளவுக்கதிகமாக பாதிக்கப்பட்டிருந்தால் கருக்குழாயையும் நீக்கவேண்டிவரும். இரண்டில் ஒரு கருக்குழாயை மட்டும் நீக்குவதால் அந்தப் பெண் பயப்படத் தேவையில்லை. கர்ப்பம் தரிக்க ஒரு கருக்குழாயே போதுமானது.

## கீழ் வயிற்று தசைப்பகுதியை குறைக்கும் பயிற்சி

உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் உடற்பயிற்சிக்குதான் முதல் இடம். உடற்பயிற்சி செய்யும்போது எந்தவிதக் கவனச்சிதறலும் இல்லாமல், புரிதலோடும் அக்கறையோடும் செய்தால்தான், அதன் பலன் முழுமையாகக் கிட்டும். எந்தப் பயிற்சியாக இருந்தாலும் உடலின்



நெகிழ்வுத்தன்மைக்கு வோர்ம்அப் பயிற்சிகள் உதவியாக இருக்கும்.

பயிற்சி செய்வதற்கு முன்பு வோர்ம்அப் (Warm up), ஸ்ட்ரெச்சிங் (Stretching) பயிற்சிகளையும் பயிற்சி செய்த பின்பு கூல்டவுன் (Cool down), ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகளையும் செய்யவேண்டும். இல்லை எனில், கை கால் தசைகளில் வலி, மூட்டுகளில் இறுக்கம், சோர்வு போன்ற தொந்தரவுகள் உண்டாகும்.

ஒவ்வொருவரின் உடல்வாகுக்கு ஏற்ப, பயிற்சிகளைத் தேர்ந்தெடுத்து செய்தால், நல்ல ஃபிட்டான உடல் அமைப்பைப் பெறமுடியும். கீழ் வயிற்று தசைப்பகுதியை குறைக்க இந்த பயிற்சி எதிர்பார்த்த பலனை தரும். இந்த பயிற்சி செய்ய விரிப்பில் கால்களை நீட்டிப் படுத்துக்கொள்ளவேண்டும். கைகள் இரண்டையும் 'ஏ' வடிவத்தில் பின்புற இடுப்பில் வைத்துக்கொள்ளவேண்டும். கால்களை மடக்கி, தொடைப்பகுதி வயிற்றின்மீது மெள்ள அழுந்துமாறு வைத்து, பிறகு மீண்டும் கால்களை நன்கு மேல்நோக்கி நீட்டவேண்டும். இவ்வாறு 20 முதல் 30 முறை செய்யவேண்டும்.

## தோழிகளுக்கு பாதுகாப்பு அறிவுரை

**பெண்கள் பாதுகாப்பு என்பது அனைத்து பெண் தோழிகளுக்கும் தெரியாத ஒன்றாக உள்ளது. பள்ளி செல்லும் பெண் குழந்தைகள் மற்றும் பல்கலைக்கழகம் செல்லும் தோழிகள் மற்றும் அலுவலக பணிகளுக்கு செல்லும் பெண்கள் என அனைத்து தரப்பு பெண் தோழிகளும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பார்க்கலாம்.**

* நாம் செல்லும் இடங்களில் நடைபெறும் செயற்பாடுகளை கவனிக்கப்படவேண்டும்.

* ஒருவரிடம் கலந்துரையாடும்பொழுது அவரை பற்றியும் அவரின் செயற்பாடுகளையும் நன்கு கவனிக்க வேண்டும்.

* அடையாளம் தெரியாதவர்கள் பின்தொடர்ந்தால் அருகில் உள்ள இடங்களிலோ அல்லது வீட்டிற்கு தகவல் தெரியப்படுத்தவேண்டும்.

* தொலைபேசி எண்களை மிகநெருங்கிய நண்பர்கள் மற்றும் வீட்டில் உள்ள உறவினர்களுக்கு மட்டும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

* பல்கலைக்கழக தோழிகள் தங்கள் சகநண்பர்களுடன் பொது இடங்களில் சுற்றுவதை தவிர்க்கவேண்டும்.

* பெண் குழந்தைகளிடம் அடையாளம் தெரியாதவர்கள் தரும் பொருட்களை வாங்கக்கூடாது என அறிவுறுத்தவேண்டும்.

* வீட்டில் தனியாக இருப்பதை முடிந்தவரையிலும் தவிர்க்கவேண்டும் அல்லது அருகில் உள்ளவர்களின் தொலைபேசி எண்களை வைத்து கொள்ளவேண்டும்.

* காதல் நண்பர்களின் வசிய மாற்றங்களுக்கு மனதில் இடம் கொடுக்காமல் இருக்கவேண்டும்.

* இரவுநேர பயணங்களில் அதிக விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் மற்றும் தனியாக அதிக தொலைவு செல்வதை தவிர்க்கவேண்டும்.





## உச்சி முதல் பாதம் வரை

வெயில் காலங்களில் நம் முகம்சோர்ந்தும், எண்ணெய்ப் பசையோடும் காணப்படும். அதற்காக எல்லோரும் அழகு நிலையத்திற்கு போக முடியாது. வீட்டில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே எல்லா வயதினரும் உச்சி முதல் பாதம்வரை அழகை பாதுகாக்கலாம். வெயிலில் வெளியில் செல்லும்போது சன்ஸ் கிரீம் லோஷன் உபயோகப்படுத்துங்கள். தினமும் 3 லீற்றர் தண்ணீர் அருந்துங்கள்.

நம் கண்களை பாதுகாக்க தினமும் இரவில் ஆமணக்கு எண்ணெயை கண்ணிமையின் மேலேயும், கண்ணின் கீழ்ப் பகுதிகளில் உருளைக்கிழங்குச் சாறையும் தடவவேண்டும். அப்படித் தடவிவந்தால் காலையில் கண்கள் பளிச்சென இருக்கும். கருவளையங்கள் போக, துளசியும் புதினாவும் அரைத்து பன்னீர் சேர்த்துத் தடவவேண்டும்.

உதட்டில் வெண்ணெயுடன், தேங்காய் எண்ணெயைத் தடவிவந்தால் உதடு காய்ந்துபோகாமல் இருக்கும்.

வெயில் காலங்களில் எண்ணெய் பசை இல்லாமல் சருமம் பளிச்சென இருக்க இதோ சில குறிப்புகள்: முதலில் பால் ஏட்டை முகத்தில் தடவி, பஞ்சுமூலம் முகத்தில் உள்ள அழுக்கை எடுக்க வேண்டும். பப்பாளி, அப்பிள் கலந்து முகத்துக்கு 15 நிமிடங்கள் மசாஜ் கொடுக்கவும். பிறகு துளசி, புதினா இலைகளுடன் தண்ணீரைக் கொதிக்கவைத்து முகத்துக்கு ஆவிபிடிக்கவும். (ஆவி பிடித்தால் முகத்தில் உள்ள இறந்த செல்கள் வெளியேறும்)

ஒரு முட்டைக் கரு, எலுமிச்சம்பழச் சாறு, தயிர், கடலை மா, எல்லாவற்றையும் கலந்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் ஊறவைக்கவும். கடைசியாக குளிர்ந்த நீரால் முகத்தைச் சுத்தப் படுத்தவும். இப்படி வாரம் இருமுறை அல்லது ஒரு முறை செய்துவந்தால், முகம் பொலிவுடன் காணப்படும்.

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-470**

**கேள்வி: முகத்தில் உள்ள இறந்த செல்களை வெளியேற்ற என்ன செய்யவேண்டும்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 25 .05. 2015**

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 470
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

**பரிசுப் போட்டி இல :- 468 இற்கான விடை :-**
**நெல்லி பிளை** (Nellie Bly)

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-**
எம். டயானா,
பிரதான வீதி, நுவரெலியா.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

**470**

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

..............................

கையொப்பம் : ..............................

**பூ**மியின் மேல் பகுதி ஏழு பெரிய தட்டுக்களாலும் (tectonoic plates) பல சிறிய தட்டுக்களாலும் ஆனது உள் பகுதி கொதிக்கும் குழம்பு நிலையான லாவாவால் ஆனது. இத்தட்டுக்களின் தடிமானம் ஏறத்தாழ 50 மைல்கள் இருக்கலாம் என்க் கணிக்கப்படுகிறது.

இத்தட்டுக்களில் வட அமெரிக்கத் தட்டு, தென்அமெரிக்கத் தட்டு, ஆபிரிக்காத் தட்டு, யூரேசியன் தட்டு, பசிபிக் தட்டு, ஆஸ்திரேலியத் தட்டு, அண்டார்டிகா தட்டு ஆகிய ஏழும் பெரிய தட்டுகளாக இருக்கின்றன. (ஆஸ்திரேலிய - இந்தியத் தட்டில் நமது இந்தியா உள்ளது). இதில் கடலுக்கடியில் உள்ளதைக் கடல் தட்டு (oceamic plates) என்றும், நிலத்திற்கடியில் உள்ளதைக் கண்டத் தட்டு (continental plates) என்றும் ஆய்வாளர்கள் வகையிட்டுள்ளனர்.

இத்தட்டுகள் ஒன்றுக்கொன்று பல திசைகளில் ஓர் ஆண்டுக்குச் சில அங்குலங்கள் என நகர்ந்துகொண்டிருக்கின்றன. இவை நகர்வதால் ஒன்றுக்கொன்று இடித்துக்கொள்ளலாம் (convergent), இதில் கடல் தட்டும், கண்டத் தட்டும் மோதும்போது கடல் தட்டு கீழிறங்கிக் கடலில் ஆழமான பள்ளம் உருவாகிறது. கண்டத் தட்டும், கண்டத் தட்டும் மோதும்போது நிலம் உயர்ந்து மலைத்தொடர் உருவாகலாம்.

### நிலநடுக்கம்

சிலநேரங்களில் பூமித்தட்டுகள் ஒன்றுக்கொன்று விலகிச்செல்லலாம் (divregent). இதனால் இடைவெளி ஏற்பட்டு சூடான, பாறைக் குழம்பு (lava) பூமிக்கு உள்ளிருந்து வெளியே வந்து குளிர்ந்து தரைபோல் ஆகிவிடும். இவ்வாறாகக் கடல் விரிவடைவதும், கண்டங்கள் விலகுவதும் (continental drift) நடைபெறுகின்றன. மற்றொருவகையில் பூமித்தட்டுகள் சமதளத்திலும் (transform - falut) நகரலாம்.

இதனால் தட்டுகளின் முனைப்பகுதி உரசி நிலநடுக்கம் ஏற்படுகிறது. பூமித் தட்டுக்குக் கீழே எரிமலைக் குழம்புகளில் கதிரியக்கப் பொருட்கள் அழிவினால் வெப்பம் உருவாக்கப்பட்டுப் பூமித் தட்டுகளை வெடிக்கச் செய்கிறது. இப்படிப் பிளவுகள் அதிகரித்து நிலப்பரப்பை அகற்றிப் பரப்புக்கிடையே பள்ளம் உருவாகிறது. தொடர்ந்து பிளவுறும் பகுதியில் கடல் நீர் உட்புகும் வாய்ப்புள்ளது.

பூகம்பங்களின்போது கட்டடங்கள் பக்கவாட்டு அதிர்வுகளால் அதிகம் பாதிக்கப்பட்டுக் கட்டடத்தின் பக்கங்கள் குவியலாகச் சரிகின்றன.

### எப்படித் தடுக்கலாம்?

இதைத் தவிர்க்க உலக அளவில் சில பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன. கட்டிடம் பக்கவாட்டு அழுத்ததைத் தாங்கும் திறனை அனைத்துத் திசைகளிலும் பெறுதல்வேண்டும். பக்கவாட்டு அழுத்தத்தைப் பூமிக்குச் செலுத்தும் தன்மை பெறுதல் வேண்டும். தற்போதைய முறைகளுக்கு மாற்றான பக்கவாட்டு அழுத்ததைத் தாங்கும் உத்தி அமைக்கவேண்டும் (புவியியல் மண்டலத்தைப் பொறுத்து, சூழலுக்கு ஏற்ப). கட்டடத்தின் அனைத்து பாகங்களும், அமைப்புகளும் சுமைகளைத் தாங்கும் திறன் பெறுதல், கடட்டத்தின் அனைத்து அடி பாகங்களும், அமைப்புகளும் ஒன்றுடன் ஒன்று இணைக்க பெறுதல் ஆகியவை வேண்டும். கட்டமைப்பில் கட்டுமான பலவீனம் ஏற்படாதவாறு தவிர்க்கவேண்டும்.

சுலபமாக உடையும் தன்மையுள்ள கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது. புவியியல் மண்டலத்தைப் பொறுத்து, மண்ணின் தன்மைக்கு ஏற்ற, சூழலுக்கு உகந்த அஸ்திவாரத்தை அமைக்கவேண்டும். கட்டமைப்பில் உறுதியைத் தரும் சுவரை அமைக்கவேண்டும் (கொங்கிறீட் சுவர், வங்கி பாதுகாப்பு அறை (safe room) லிப்ட் சுவரைப் போன்றது). திடீர் முடுக்கங்களைத் தாங்கும் திறன், அதற்கு இசைந்து கொடுக்கும் திறன்பெற்ற கூடு போன்ற அமைப்பு இருக்கவேண்டும்.

இது அழுத்தத்தையும், நெருக்கத்தையும், எதிர்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். நிலநடுக்கத்தின்போது ஏற்படும் பக்கவாட்டு அதிர்வு, எதிர் முடுக்க அதிர்வு ஆகியவற்றால் கட்டிடத்தின் அமைப்புகள் உடையாமலும், சிதறாமலும், சுவர்கள் சரியாமலும் இருக்க, வணிகக் கட்டடத்தைச் சுற்றித் திறந்த வெளி அமைக்கலாம் என்பது போன்ற சில யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

### கட்டுமானத்தில் மாற்றம்

கட்டடங்களுக்கான கம்பிகளை அதிகரிப்பதன்மூலம் அதிர்வைத் தாங்கும் வடிவமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அடித்தளத்தில் இறப்பர் மெத்தைகள் வைக்கும் யோசனையும் தற்போது ஆய்வில் இருக்கிறது. அடித்தளத்தில் நகரக்கூடிய சிறுசிறு சக்கரங்களைப் பொறுத்தி அதிர்வுகேற்ப கட்டடம் இசைந்து நகரும் முறைகளும் சிலரால் முன்வைக்கப்படுகின்றன.

அடித்தளத்தில் அதிர்வுகேற்ப தாங்கும் ஹைட்ராலிக் ஜோக் பொருத்திப் பார்க்கப்படுகிறது. மரவீடுகளும் பரிந்துரைக்கப்படுகின்றன. கன்டெய்னர் வீடுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

# நிலநடுக்கத்தை தாங்கும் கட்டிடம்?





## அவலத்தை இசைக்கும்

# கலைஞன் தி பியானிஸ்ட்

**இ**ரண்டாம் உலகப்போரின் கோரத் தாக்குதலுக்கு ஐரோப்பா மாபெரும் இழப்புக்குத் தள்ளப்பட்ட காலம் அது. அப்போது நாஸிப் படையினரின் தாக்கு தலுக்கு போலந்து தலைநகர் வார்ஸாவும் இரையாகிறது. உன்னதமான ஓர் இசைக்கலைஞனின் வாழ்விலிருந்துதான் இத்திரைப்படத்தின் பக்கங்கள் புரட்டப்படுகின்றன.

புகழ்மிக்க அந்த இசைக்கலைஞன் விலாடிஸ்லா ஸ்பில்மேனின் பியானோ இசை நிகழ்ச்சி வானொலியில் நேரலையாக ஒலிபரப்பாகிக் கொண்டிக்கிறது. ரேடியோ ஸ்டேஷனில் ஒலிப்பதிவு நடந்துகொண்டிருக்கும்போதே அங்கு குண்டுவீசப்படுகிறது. நல்லவேளையாக அந்த வெடிவிபத்தில் விலாடிஸ்லாவுக்கு ஒன்றும் ஆகவில்லை. போலந்து நகருக்குள் ஜெர்மானிய படை இறங்கிவிட்டது என்பதற்கான அந்த எச்சரிக்கை சற்று கூடுதலானதுதான்.

1939களில் ரேடியோவில் நேரலையாக பியானோ இசைநிகழ்ச்சி ஒலிபரப்பாவது என்பது ஓர் இசைக்கலைஞனின் புகழ்மிக்கநிலை. அன்று மாலை வீடு திரும்பியதும் அந்த மகிழ்ச்சியை குடும்பத்தினருடன் கொண்டாடுகிறான், வானொலி நிலைய வெடிவிபத்தின் மனத்தாங்கலோடு.

அப்போது ரேடியோவில் ஒரு செய்தி.... பிரான்ஸும் இங்கிலாந்தும் ஜெர்மனி மீது போர்த்தொடுக்கப்போவதாக அறிவித்துள்ளதைப் பற்றிய அச்செய்தியைக் கேட்டு, உலகப்போர் எனும் மிகப்பெரிய ஆபத்து வளையத்துக்குள் தாங்கள் சிக்கிக்கொண்டதை உணர்க்கிறார்கள் அவனது குடும்பத்தினர்.

அதைத். தொடர்ந்து அந்த நகரின் மக்கள் நாஜி வதைமுகாமுக்கு கூட்டம் கூட்டமாக ரயிலில் ஏற்றி அனுப்பப்படுகிறார்கள். பலர் வீதிகளிலேயே கொல்லப் படுகிறார்கள். அங்கேயே பிணங்களைக் குவித்து கொளுத்துகிறார்கள். குடும்பத் தினரோடும் சக இசைக்கலைஞர்களோடும் சேராமல் அவர்களைத் தவறவிடுவதோடு இவன் தனித்தும்விடப்படுகிறான்.

இதனால் யூதரல்லாத சில நண்பர்கள்மூலம் சிலகாலம் சில இடங்களில் தப்பி வாழ்கிறான். இராணுவத்தினரின் நெருக்கடிகளிலிருந்து மறைந்துவாழ்கிறான். நல்ல சாப்பாடு கிடையாது. நல்ல தூக்கம் கிடையாது. நல்லது கெட்டது பேசிக்கொள்ள யாருமில்லை. அந்த வாழ்க்கையில் மௌனமும் வலியும், தனிமையும், மனச்சோர்வும், சோகமும் ஏமாற்றமும், அச்சமும் அவனை ஆட்டிப்படைக்கிறது.

வார்ஸாவில் 1939இல் தொடங்கிய போர் 1945ஆம் ஆண்டு முடிவுக்குவரும் வரை இசைக்கலைஞன் தனிமையில் அங்குதான் வசிக்கிறான். நாஸிப் படை யினரால் யூத மக்கள் முற்றிலுமாக வெளியேற்றப்பட்ட நிலையில் கட்டடங்கள் எல்லாம் பீரங்கிகளால் தாக்கப்பட்ட அந்த நகரமே எரிந்து கிடக்கிறது.

இப்படத்தின் இறுதிக்கு முன்னுள்ள காட்சிகள் மிகமிக முக்கியமானவை. அழகிய இசைக்கலைஞன் தாடியோடு வாடிப்போயிருப்பான். 1944 ஒகஸ்ட் மாதம் அவன் தங்கியிருந்த வீடு தாக்கப்படுகிறது. மேலும் வெண் பொஸ்பரஸ் வாயுவைப் பாய்ச்சி தீவைக்கிறார்கள். அப்படியும் இப்படியுமாக ஓடி தீயிலிருந்து தப்பித்து, பல மாடிகள் ஏறி சிதறிய கூரைக்குத் தாவி அங்கிருந்து தொங்குவான்.

சாலையிலிருந்து பார்க்கும் இராணுவத் துருப்புகள் துப்பாக்கியால் சுடுவார்கள். அங்கிருந்து வேறொரு பல்கனிக்கு குதித்து அங்கிருந்து தப்பித்துச் செல்வான். வேறொரு ஆளில்லாத இடிபாடுகள் நிறைந்த வீட்டில் சென்று மறைந்துகொள்வான்.

அங்கிருந்து இன்னொரு வீடு இப்படியாக நகர்ந்து நகர்ந்து ஒரு மருத்துவ மனைக் கட்டடத்தில் சிலகாலம் தங்கியிருப்பான். அங்கும் இராணுவம் குண்டுகளை வீச அவன் பின்பக்கமாக ஓடி ஒரு மதில்மீது ஏறி கீழே குதித்துத் தப்பிப்பான்.

குதித்த இடத்திலிருந்து நிமிர்ந்து எதிரே கவனிப்பான். அவனுக்கு எதிரே மிகப்பெரிய நகரமே இறந்துகிடப்பது தெரியும். அதாவது மாபெரும் கட்டடங்கள் எல்லாம் தீக்கிரையாகி இருக்கும். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை மனிதவாசமே இருக்காது. எங்கு நோக்கினும் ஆளரவமற்ற பீரங்கிக்குண்டு தாக்குதலில் இடிந்துநிலையில் தீக்கிரையான கட்டடங்கள்.

ஒரு காலத்தில் நீண்ட சாலைகளில் டிராம் வண்டி செல்லவும் மரங்களில் வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் அழகுமிகுந்த நகராகவும் இருந்த வார்ஸா, இன்று அலங்கோலமாகி கிடக்கிறது. அவன் நடந்துசென்று ஒரு கட்டிடத்தில் ஏதாவது சாப்பிட அல்லது தாகத்தைத் தணிக்க குடிநீராவது கிடைக்குமா எனத் தேடுவான். அலமாரியிலிருந்த சிறிய தண்ணீர் கேன் ஒன்று கிடைக்க, அதை எடுத்துவந்து கத்தியால் உடைப்பான். ஓட்டையானதும் அது கைதவறி கீழே விழுந்துவிடும்.

அப்போது நீர் தரையில் கொட்டியவாறே டின் உருண்டோடும். அங்கு அந்த நேரத்தில் வந்து நிற்கும் இராணுவ அதிகாரி இவனை வைத்தகண் வாங்காமல் பார்ப்பார். இவரை உற்றுக் கவனித்தபடி நிற்பார். இவன் அவரை அதிர்ச்சியோடு பார்க்க அவர் இவனிடம் பேசுவார். "நீங்க புகழ்பெற்ற பியானிஸ்ட்தானே. எனக்காக ஒரு பாடலை இசைக்கமுடியுமா?" எனக் கேட்பார்.

தண்ணீர்கூட அருந்தமுடியாத தாகம் தணியாத நிலையில் எக்கச்சக்க மன வலியோடு அவன் அவர் மனம்விரும்பும் இசையை தனது கரங்களால் மீட்டுவான். இதில் மகிழ்ந்த அந்த இராணுவ அதிகாரி அவனுக்குத் தேவையான உணவை வழங்குவார். அவன் பிடிபடாமலும் சுட்டுக்கொல்லாமலும் இருக்கத்தான் அணிந்திருந்த கோட்டை அவனுக்குத் தந்துவிட்டுச் செல்வார்.

ஓரிரு நாட்களில் சூழ்நிலை மாறிவிட, ஜெர்மனி ராணுவத்தை வெல்கிறது ரஷ்ய ராணுவம். இவன் அங்கிருந்து வெளியேறும்போது ரஷ்ய இராணுவம் இவனை சுட யத்தனிக்கும். இவன் கோட்டு என்னுடையதல்ல, நான் ஜெர்மானியனல்லன் என்பான்.

போர்முடிவுக்கு வந்தபிறகு சிலகாலம் கடந்து வார்ஸா மீட்டுருவாக்கத்தில் உயிர்பெறத் தொடங்கும். அதே ரேடியோ நிலையத்தின் அரங்கத்தில் இசைநிகழ்ச்சி அரங்கேறும்.

விலாடிஸ்லா ஸ்பில்மேன் என்ற உண்மையான பியானோ இசைக்கலைஞன் 1954இல் எழுதிய சுயசரிதை நூலிலிருந்தே இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல இசைக்கலைஞனிடம் பியானோ வாசிக்கக் கேட்ட ஜெர்மானிய ராணுவ அதிகாரி வில்ம் ஹோசன்ஃபீல்டு பின்னர் ரஷ்ய அரசால் சிறைவைக்கப்பட்டவர்.

நைஃப் இந் த வோட்டர், சைனா டவுன் உள்ளிட்ட ஏராளமான படங்களை இயக்கியிருந்தும் பிரெஞ்சு இயக்குநர் ரோமன் போலன்ஸ்கியை உலகமே இவரைத் திரும்பிப் பார்த்தது தி பியானிஸ்ட் திரைப்படத்தை இவர இயக்கிய பிறகுதான்.

இரண்டாம் உலகப்போரை நினைவுகூர வரலாற்று நூல்களுக்கு இணையாக திரைப்படங்களுக்கும் முக்கிய பங்குண்டு என்பதற்கு சாட்சிசொல்லும் ஆவணம் இது.

காணும் கனவுகள் எல்லாம் நிஜமாகி விடுவதில்லை. சில நாடுகளில் பெண்களுக்குக் கனவு காண்பதில்கூடக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய சூழலில் தன்னுடைய சிறு வயதுக் கனவு நனவாகியிருப்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறார் நிலூ.ஃ.பர் ரஹ்மானி.

# ஆப்கான் வானில் பறந்த பெண்!



ஆனாலும் அது முழுமையான மகிழ்ச்சி என்று சொல்ல முடியவில்லை என்கிறார் நிலூ.ஃ.பர்.

2001ஆம் ஆண்டில் தலிபான்களின் பிடியில் இருந்து விடுபட்டது ஆப்கானிஸ்தான். இன்றும் அவர்கள் விதைத்துச் சென்றுள்ள அடக்குமுறைகளில் இருந்து முற்றிலும் விடுபடாத தேசத்திலிருந்து முதல் பெண் பைலட்டாக உருவாகியிருக்கிறார் ரஹ்மானி!

## சிறு வயது ஆர்வம்

எல்லாக் குழந்தைகளையும் போலவே வானில் பறந்து திரியும் பறவைகளைப் பார்த்து, பறக்க வேண்டும் என்ற எண்ணம் ரஹ்மானிக்கு வந்துவிட்டது. தன் அப்பாவிடம் சொன்னார். அவருக்கும் சின்ன வயதில் இராணுவ பைலட்டாகும் ஆர்வம் இருந்தது. சோவியத் கட்டுப்பாட்டில் இருந்தபோது, ஆப்கானிஸ்தானில் சில பெண்கள் பைலட்டாக இருந்து இருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகுவந்த தலிபான்கள் பெண்களுக்கு இருந்த அத்தனை சுதந்திரத்தையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டனர்.

ரஹ்மானியின் அப்பா மகிழ்ந்து போனார். ஆனால் இன்றைக்கு இருக்கும் ஆப்கானிஸ்தானில் ஒரு பெண் பைலட்டாக வருவது சாத்தியமா என்ற சந்தேகமும் அவருக்கு இருந்தது.

"உன்னுடைய ஆர்வம் அதுதான் என்றால் நான் உடன் இருக்கிறேன். ஆனால் உன் மனதை உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டும். எந்த இடையூறு வந்தாலும் அதைப் பொருட்படுத்தக்கூடாது. கஷ்டப்பட்டு நீ ஒரு பைலட்டாக மாறிவிட்டால், இந்த நாட்டுப் பெண்களுக்கு உன்மூலம் விடிவு காலம் பிறக்கும். பூனைக்கு மணி கட்டும் பணியை நாமே செய்வோம்" என்றார் அவரது அப்பா.

## இராணுவப் பயிற்சி

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, ஓராண்டு ஆங்கிலம் படித்தார். 2010ஆம் ஆண்டு ஆப்கான் ஏர் ஃபோர்ஸ், பெண் பைலட்டுகளுக்குப் பயிற்சியளிப்பதாக அறிவிப்பு வெளியிட்டது. அதைப் பார்த்ததும் ரஹ்மானிக்கு நம்பிக்கை வந்தது. உறவினர்களுக்குக்கூடத் தெரியாமல் பயிற்சியில் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகளில் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்து வெளிவந்தார்.

ஆப்கான் இராணுவத்தில் சரக்கு விமானத்தை இயக்கும் வாய்ப்பு ரஹ்மானிக்குக் கிடைத்தது. சாதனை செய்யப் போகிறோம் என்ற எண்ணமெல்லாம் அவருக்கு இல்லை. வாய்ப்பை நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மட்டும் எண்ணிக்கொண்டார். காக்கிச் சீருடையை அணிந்துகொண்டார். தலையில் கறுப்புத் துணியைச் சுற்றிக்கொண்டார். தன்னம்பிக்கையோடு விமானத்தில் ஏறினார். கவனமாக விமானத்தை இயக்கினார். மேகக் கூட்டங்களும் காற்றும் ரஹ்மானிய உற்சாகப்படுத்துவது போலத் தெரிந்தன. ஆனால் கீழே நிலைமை அப்படி இருக்கப் போவதில்லை என்பதை அறிந்தே இருந்தார் ரஹ்மானி.

## வலுத்த எதிர்ப்பு

நீண்ட இடைவேளைக்குப் பிறகு ஆப்கான் வானில் ஒரு பெண் பைலட் பறந்த சாதனை, பரபரப்புச் செய்தியாக வெளிவந்தது. செய்தியைக் கேட்டுச் சந்தோஷமடைந்தவர்களைவிடக் கோபத்தையும் வெறுப்பையும் உமிழ்ந்தவர்கள்தான் அதிகம். குடும்பத்துக்கு அவமானத்தைத் தேடித் தந்துவிட்டார் என்று ரஹ்மானியின் உறவினர்களே கொதித்துப்போனார்கள். தலிபான்களிடமிருந்து ரஹ்மானிக்கும் அவரது குடும்பத்துக்கும் கொலை மிரட்டல்கள் வந்துகொண்டே இருந்தன, இருக்கின்றன. ஒரு கட்டத்தில் நாட்டை விட்டே வெளியேறும் மோசமான சூழல் உருவானது. இரண்டு மாதங்கள் வெளிநாட்டில் தங்கியிருந்தார் ரஹ்மானி.

"இவ்வளவு தூரம் வந்துவிட்டேன். இதற்குப் பிறகு பின்வாங்கினால் பெண்கள் முன்னேற்றத்தில் மிகப்பெரிய தடைக்கல்லாக மாறிவிடும். நம் உரிமைகளுக்காகப் போராடுவதில் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. எந்த ஆபத்தையும் நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். எனக்குப் பிறகு வரும் பெண்களுக்காவது உரிமைகள் கிடைக்கட்டும் என்று முடிவு செய்துவிட்டுத் தாய்நாடு திரும்பினேன்" என்கிறார் ரஹ்மானி.

பணிபுரியும் இடத்திலும் பெண் என்ற காரணத்தால் மோசமாக நடத்தப்பட்டார் ரஹ்மானி. சில அதிகாரிகள் நேரிடையாகவே "இந்த வேலையை விட்டுச் சென்றுவிடு" என்று எச்சரித்தார்கள். அதைப் புறக்கணித்துவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தார். அவர்களுக்குப் பதில் அளிக்கும் விதமாக எந்த ஷி.ஃ.ப்ட்டையும் விரும்பி ஏற்றுக்கொண்டார். வானில் பறக்கும் போதுதான் அவருக்கு ஓரளவு நிம்மதியாக இருந்தது. ஆனாலும் வீட்டை அடிக்கடி மாற்றிக்கொண்டார். பாதுகாப்புக்காகத் துப்பாக்கியை வைத்துக்கொண்டார். தெருக்களில் அதிகநேரம் நடமாட இயலாது. எப்போதும் ஆபத்தை எதிர்நோக்கிக் கொண்டே வாழவேண்டிய நிலைமை.

## பெண்ணுரிமை மட்டுமே தேவை

எந்த எதிர்ப்புக்கும் நம் வெற்றி மட்டும்தான் பதிலாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் ரஹ்மானி. காயம் அடைந்த வீரர்களைப் பெண்கள் தங்கள் வாகனத்தில் ஏற்றிச்செல்லக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. காயம் அடைந்த சில வீரர்களை ஒருமுறை கண்டார். விமானத்தில் ஏற்றி, மருத்துவமனையில் சேர்த்தார். உயரதிகாரியிடம் இருந்து அழைப்பு வந்தது. "சில உயிர்களைக் காப்பாற்றியது சட்டப்படி குற்றம் என்றால் என்னைத் தண்டியுங்கள்" என்றார். "நீ நல்ல காரியம் செய்தாய்" என்று அதிகாரி சொன்னபோது ரஹ்மானியால் நம்பவே முடியவில்லை!

இவ்வளவு தூரம் துணிச்சலுடன் இருக்கும் ரஹ்மானி, தன் நாட்டின் கலாசாரத்தை மிகவும் மதிக்கிறார். ஆண்களுடன் பெண்கள் கைகுலுக்கக் கூடாது என்பது ஆப்கானில் இருக்கும் சட்டம். ஒருநாள் அவரிடம் சக ஊழியர் கையை நீட்டினார். இன்முகத்துடன் அதை மறுத்துவிட்டார் ரஹ்மானி. ஏமாற்றம் அடைந்த சக ஊழியர் அதற்கான காரணத்தையும் கேட்டார்.

"ஆணிடம் ஒரு பெண் கை குலுக்குவது தவறான சமிக்ஞையாக இங்கே பார்க்கப்படுகிறது. என் கலாசாரத்தை நான் மதிக்கிறேன். அதே நேரத்தில் பெண் என்ற ஒரு காரணத்துக்காக மறுக்கப்படும் உரிமைகளைப் பெறப் போராடுகிறேன். இங்கே கடைப்பிடிக்கப்படும் கலாசாரத்தை மீறுவதோ, அவமதிப்பதோ என் நோக்கம் இல்லை. இதுபோன்ற காரியத்தைச் செய்து, மீண்டும் வீட்டுக்குள் முடங்கிப் போக நான் தயாரில்லை. பெண்களுக்கு உரிமை கொடுத்தால் இப்படித்தான் என்று ஒரு மோசமான முன்னுதாரணமாக என்னைக் காட்டி, பிற பெண்களின் முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய காரியத்தை ஒருபோதும் செய்யமாட்டேன்" என்கிறார் ரஹ்மானி.

**"ஆணிடம் ஒரு பெண் கை குலுக்குவது தவறான சமிக்ஞையாக இங்கே பார்க்கப்படுகிறது. என் கலாசாரத்தை நான் மதிக்கிறேன். அதே நேரத்தில் பெண் என்ற ஒரு காரணத்துக்காக மறுக்கப்படும் உரிமைகளைப் பெறப் போராடுகிறேன்.**


**இங்கே கடைப்பிடிக்கப்படும் கலாசாரத்தை மீறுவதோ, அவமதிப்பதோ என் நோக்கம் இல்லை. இதுபோன்ற காரியத்தைச் செய்து, மீண்டும் வீட்டுக்குள் முடங்கிப் போக நான் தயாரில்லை. பெண்களுக்கு உரிமை கொடுத்தால் இப்படித்தான் என்று ஒரு மோசமான முன்னுதாரணமாக என்னைக் காட்டி, பிற பெண்களின் முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய காரியத்தை ஒருபோதும் செய்யமாட்டேன்" என்கிறார் ரஹ்மானி.**

## தேடிவந்த விருது

இண்டர்நேஷனல் விமன் ஓ.ஃ.ப் கரேஜ் விருது 2015 சமீபத்தில் அமெரிக்காவில் மிஷேல் ஒபாமா மூலம் இவருக்கு வழங்கப்பட்டது. இந்த விருதுக்கு உலகம் முழுவதிலுமிருந்து 10 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 23 வயது கேப்டன் ரஹ்மானியும் ஒருவர். இந்த விருதுமூலம் உலகம் முழுவதும் அறியப்பட்டார். தனக்கு அளிக்கப்பட்ட விருதை ஆப்கானில் இருக்கும் அனைத்துப் பெண்களுக்கும் சமர்ப்பித்தார்.

அமெரிக்காவில் 80 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பெண்ணாக, தனியாளாக விமானத்தில் பறந்து சாதனை படைத்தார் அமெலியா எர்ஹார்ட். ஆப்கானிஸ்தானில் இபபொழுதுதான் அது சாத்தியமாகி இருக்கிறது. ஆண்களுக்கு இணையான எண்ணிக் கையில் பெண் பைலட்டுகள் உருவாகும் சூழல் இன்னும் சில ஆண்டுகளில் சாத்தியமாகலாம். அதற்கு 'முதல் அடி எடுத்து வைத்த துணிச்சல்காரர் கேப்டன் ரஹ்மானி'!

# இதய அடைப்புகளை நீக்கும் இயற்கை உணவுகள்



இதய சத்திரசிகிச்சைக்கு பல இலட்சங்கள் செலவு செய்து இதய அடைப்புகளை நீக்குகிறோம், மேலும் சத்திரசிகிச்சை முடிந்தவுடன் பழையபடி ஆரோக்கியத்திற்கு செல்வதில்லை உடல் பலவீனமாக்கப்படுகிறது. இதுவே இன்றைய நவீன மருத்துவம். நம் முன்னோர்கள் சர்வசாதாரணமாக இப்படிப்பட்ட நோய்களை தீர்க்க நம் சமயலறையிலேயே இயற்கை மருந்து வகைகளை பொக்கிசமாக அளித்து சென்றுள்ளனர். ஆனால் இந்த அவசர உலகில் அதையெல்லாம் தெரிந்துகொள்ள நாம் தயாராக இல்லை. இதயநோய்க்கு நம் வீட்டில் கிடைக்கும் பொருள்களிலிருந்து எப்படி தீர்வுகாண்பது என்று பார்ப்போம்.

சீரகம் அடைப்புகளை நீக்கக்கூடிய குணங்களைக் கொண்டது இரத்த நாளங்களிலே கொழுப்பு சேர்ந்து அடைப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனாலேயே நெஞ்சுவலி ஏற்படுகிறது. சீரகத்தை சாப்பிடும்போது இரத்தத்தை உறைய செய்யாமல் நீர்மைப்படுத்துகிறது. இரத்தநாளங்களில் சீராக செல்ல உதவுவது மட்டுமல்லாமல் இரத்தநாளங்களிலே உள்ள அடைப்புகளையும் கரைத்துவிடுகிறது. தினம் தோறும் மூன்று விரல்களால் சீரகத்தை எடுத்து (கட்டை விரல், நடுவிரல் மற்றும் சுட்டுவிரல். இந்த மூன்று விரல்களால் எவ்வளவு சீரகம் வருமோ அந்த அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்) அதை நீரிலே விட்டு காய்ச்சி காலையில் வெறும் வயிற்றில் அருந்திவர இரத்த அடைப்புகள் போகும்.

வெங்காயத்தில் இரத்தத்தை நீர்மைப்படுத்தும் சக்தி இருப்பதோடு கொழுப்பை கரைக்கக்கூடிய அற்புதமான ஆற்றல் வெங்காயத்திற்கு இருக்கிறது. தினம்தோறும் 25 முதல் 50 கிராம் வெங்காயத்தை எடுத்துக்கொள்வதால் அதில் 150 கிராம் இரத்தத்தை கரைக்கக்கூடிய ஒரு சத்து இருக்கிறது.

இந்த சத்தின் பயன் இதயத்திலிருக்கும் வீக்கத்தை போக்கக்கூடியது இதயத்தில் இருக்கக்கூடிய அடைப்பை போக்கக்கூடியது. பச்சை வெங்காயத்தை தினம்தோறும் மத்திய உணவிலே சேர்த்துக்கொண்டால் இதயத்திலுள்ள அடைப்புகள் கரைக்கப்படும்.

பூண்டும் இதய அடைப்பை கரைக்கும் குணமுடையது தினம்தோறும் பாலிலே 5 பல் பூண்டுசேர்த்து அருந்த இரத்த அடைப்பு நீக்கப்படுகிறது.

## பற்கள் வெண்மையாவதற்கு



அப்பிள், பாதாம், முந்திரி போன்ற கொட்டைகள், பச்சைக் காய்கறிகள், காளான், ஸ்டிரோபெர்ரி, வெங்காயம், சிட்ரஸ் பழங்கள் போன்றவை வாயிலுள்ள பக்ரீரியாக்களைக் குறைக்கின்றன. பற்களைக் கறையாக்குபவை வாயிலுள்ள பக்ரீரியாக்கள்தான்.

## அன்ரிபயோரிக்ஸ் செயலிழந்து போகுமா?



அன்ரிபயோரிக்ஸ் மருந்துகள் பயனற்றுப் போகும் நிலையை சமாளிக்க பெரும்பாலான நாடுகள் தயார்நிலையில் இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது மலேரியா, காசநோய் போன்ற தொற்றுநோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் என்று அந்த நிறுவனம் வர்ணித்திருக்கிறது.

இது குறித்து 133 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 34 நாடுகள் மட்டுமே இந்த மருந்துகள் சக்தி இழந்து போவதைத் தடுக்கும் முயற்சியை செய்யும் நிலையில் உள்ளன என்று காட்டுவதாக தெரியவந்திருக்கிறது.

அன்ரிபயோடிக் மருந்துகளால் நோய்களை குணப்படுத்த முடியாமல்போகும் நிலையை எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்க உலகளாவிய வகையில் எடுக்கப்பட ஒரு திட்டம் ஜெனிவாவில் உலக சுகாதார நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வருடாந்திர கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




பா.பாலச்சந்திரன், மயிலணி

"ஔவை மூதாட்டி சொன்ன இரண்டு நீதிகள் "இயல்பலாதன செயேல்", "உத்தமனாயிரு" என்பன இக்காலத்தில் மிகமிக அரிதாகவே கடைப்பிடிக்கப் படுகின்றன. மாஸ்ரர் சொன்ன விடயங்கள் இந்த செய்தியை எனக்கு மீண்டும் மீண்டும் சொல்கின்றன. என்றார் பண்டிதர் ஐயா அவர்கள்.

நீங்கள் கலாசாலையில் நிர்வாகம் செய்கிற காலத்திலை ஐயா ஓரளவுக் காவது நாட்டிலை நீங்கள் குறிப்பிட்ட இரண்டும் பெரும்பாலானோர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. இப்ப அரசாங்கத்திலை, சில கோவில்களில், சில கூட்டுறவுச் சங்கங்களில் அவை படுகொலை செய்யப் பட்டு புதைக்கப்பட்டு விட்டன. சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலை கழிவு ஓயில் பிரச்சினையின் மூலத்திற்கு காரணம் அது. இது என்பதுபோல, இடமே தெரியாது புதைத்துவிட்டனர் என்றார் கந்தையா மாஸ்ரர்.

"ஐயா இந்த ஓயில் எப்பிடி நிலத்திற்குள் போனது? நிலத்தில் விடும்போது மிகப் படித்த உத்தியோகத்தர்கள் அதன் விளைவுகள் பற்றி சிந்திக்கவில்லையா? என்றார் நடராசா ஓவசியார். தம்பி இது சதியா, விதியா, கலியா என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கு. ஒன்றிலும் உண்மை கிடையாது" என்றார் மாஸ்ரர்.

"உதை அரசியலாக்கி போட்டினை, உதைவிடுங்கோ. ஊர் ஆட்கள் நடத்துகிற கோவில்கள், சங்கங்களை பாருங்கோ. அங்கையும் எல்லாம் உண்மை கிடையாது" என்றார் பண்டிதர். "நீங்கள் பத்திரிகை பாக்கேலையோ. சந்திரிகா அம்மையார் அரசியல் யந்திரம், ஊழல் மயம், அதை சீரமைப்பதே சவால் என்று கூறுகிறார். மிகச் சரியாக கூறியுள்ளார். என்றார் நடராசா.

நடா சின்ன ஊரிலேயே சரியாய் நடத்தமுடியாமல் இருக்கேக்க எப்படி நாடு சரியாய் நடக்குமென நாங்கள் எதிர்பார்ப்பது. முதலிலை நாம் திருந்த வேண்டும். பின்பு பிறரை குற்றம் காணலாம். தர்மவிதி எல்லாருக்கும் ஒன்றுதான் என்று நான் நினைக்கிறேன். சிலவேளை, ஐயாத்துரை பேசின மாதிரி நான் பிழைக்க தெரியாத மடையனோ தெரியாது" என்றார் பண்டிதர்.

"இல்லை ஐயா! உது ஐயாத்துரை கள்ளன் தனக்கு காசடிக்க நீங்கள் தடைபோட்டுவிட்டீர்கள்" என்று சொன்ன விமர்சனமல்லோ, இப்ப வட்டியும் குட்டியும் சேர்த்து மடைத்தனமா ஊழல்செய்து மானங்கெட்டு, நிர்வாணமாய் திரிகின்றான்" என்றார் நடராசா. "யார் சொன்னது நிர்வாணமென்று? என்று கேட்டார் பண்டிதர். அது அவன்ரை தமயன் செல்லத்துரைதான் என்றார் மாஸ்ரர்.

ஐயாத்துரையின்ரை மாதிரிகள் அனேகம் பேர் எல்லா இடங்களிலும் வெள்ளையும் சுள்ளையுமாக பவனி வந்து ஆண்டு, ஊழல் செய்து அடங்கிய மாதிரி, ஆனால் உங்களுக்கு அடங்காமல் வலம் வந்துகொண்டு இருக்கின்றார்கள். பொதுச் செல்வமெல்லாம் அவர்களின் பேரில் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளில் வட்டி உழைக்கின்றது என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடு கின்றனர். ஆனால் வெளியில் ஊழல் பெயரையும் அது தேடிதருகிறது என்பதை நினைப்பது கிடையாது. லிகிதர்கள், பியோன்மார் எல்லோரும் மடையரோ? அவர்கள் பேசாமல் இருப்பார்கள். சந்தர்ப்பம் வரும்போது குட்டையை உடைப்பார்கள் என்றார் நடராசா.

"தம்பி சத்தியம், தர்மம் இரண்டும் மிகப் பொறுமையாக காத்திருக்கும், காலம் வரேக்க கழுத்தறுக்கும். அந்நாளும் அப்படியே என சனம் வாயிலை கை வைக்கக்கூடிய அளவுக்கு மானம் கெடுக்கும். இப்பு நற்பேரை பெரிதாய் பலர் பொருட்படுத்துவது கிடையாது. அவர்களின் உலகத்திலை வில்லன் தான் கதாநாயகன் என்றார் பண்டிதர்.

நீங்கள் அத்தனைபேரும் உத்தமர் தானா? என்பதுதான் ஊழல் பேர் வழிகளின் கவசமந்திரம்" என்றார் மாஸ்ரர். "உவர் என்ன காந்தி மகாத்மாவோ" என்று ஊரிலை கதைத்து திரிந்த கூட்டம் இப்ப வீழ்ந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று தலைநிமிர்ந்து திரிகிறது என்றார் பண்டிதர்.

சனம் கதைக்குது. வீட்டுக்காரி எனக்கு இப்ப சொல்லி இருக்கிறா "புண்ணியம் செய்ய எத்தினையோ வழி இருக்கு. அதை செய்யுங்கோ. கடவுளை கும்பிடுங்கோ. ஆனால் அவற்றை காரியங்களை அவரைச் செய்யவிடுங்கோ. தேவை என்றால் போய் கோவிலை மூத்தவன் செய்வதுபோல கூட்டிக்கழுவி துப்புரவு செய்யுங்கோ என்று என்றார் நடராசா சிரித்துக்கொண்டு.

"ஐயா தனாதிகாரி தனது சகோதரியின் மகனை கோவில் காசில் வெளி



முருகனும் தனாதிகாரியிட்டை கடன்பட்டவரோ? இது கலியுகம். அழிவுக்கு வழிதேடினை. வேறு எதைச் சொல்ல? என்றார் பண்டிதர் வெளியில் சிரிப்பும், உள்ளே கவலையுடனும்.

"கோவில் தலைவர்களைப் பார்த்துதான் அதிஉத்தம ஜனாதிபதியின் அதிகாரங்களை எழுதினார்களோ தெரியாது. பரம்பரையாய் திருவிழா செய்பவர்களைகூட தலைவர் தூக்கி எறிய பார்க்கிறார். அவர் வந்தது இரண்டு வருடங்களுக்கு முன்பு. அதுவும் பொதுமக்கள் தெரிவிலை. எப்படி இருக்கு அதிகாரம் என்றார். நடராசா கோவில் தலைவர் சாஸாத் பரமசிவனேதான். ஆனால் ஆக்க அழிக்கத்தான் சக்தி கிடையாது என்றார் பண்டிதர்.

"ஐயா! எனது பணிவான அப்பிப்பிராயம், பாவத்திற்கு பாவம் ஈடாகாது. மற்றவன் பாவம் செய்கிறான் என்று நானும் பாவம் செய்வது கூடாது. ஊழல் நடந்தால் இருக்கிற முறைகளை உபயோகித்து, அதை தடுக்க முயலவேணும். இயலாது போனால் கடவுளிடம் பாரத்தை ஒப்படைக்கவேண்டும். அதைத்தான் இப்ப பண்டிதர் ஐயா செய்கின்றார். காலம் கலியுகம்தான். அது எல்லா இடத்திலும் தெரியுது. அதற்காக நான் மாறமாட்டேன். கடவுள், சத்தியம் இல்லாமல் இல்லை. பஞ்சத்திலை உணவு அளித்தல், தாகத்திலை தண்ணீர் கொடுத்தல் மாதிரி இந்த காலகட்டத்திலை நேர்மை, நீதியாய் சத்தியமாய் வாழ்தல்தான். என்னால் இறைவனுக்கு ஆற்றக்கூடிய உண்மையான தொண்டாகும்" என்றார் கந்தையா மாஸ்ரர்.

"தலைமைக் கருங்கலம் நேர்மையும், எளிமையும்" கூட்டுறவு சங்கம் நடத்த தேவையான மனப்பாங்கு வேறு. கோவிலை கொண்டு நடத்த தேவையான மனப்பாங்கு வேறு. முந்தியது லௌகீகம். பிந்தியது ஆத்மீகம். போன மாதம் ஊர் பிரமுகர் ஒருவர் சொன்னார் ஓய்வுபெற்ற

# நேர்மையும் எளிமையும்

ஐயா! இப்ப நல்ல நிர்வாகம் செய்பவனுக்கு யூலியசீசருக்கு நடந்தமாதிரி தான் நடக்கும். பின்பு அவர்களை மக்கள் என்ன செய்தாலும் நல்லவன் போனது போனதுதான். இதனால்தான் மிக நல்லவர்கள் ஊரில் வாழ்ந்தாலும் ஒதுங்கி வாழ்கின்றனர் என்றார் நடராசா.

"இதற்காக நல்லவர்கள் பதவியில் இப்ப இல்லை என்று கூறமுடியாது. இருப்பவர்கள் சிலர் ஒரு போர் வீரனைப் போல் போராடிவாழ்கின்றனர். என்பதே உண்மையானதும் சாத்தியமானதுமான விடயமாகும் என்று கூறி பெரும்மூச்சுவிட்டார் பண்டிதர்.

பண்டிதர் தான்பட்ட பாடெல்லாத்தையும் நினைத்து, மனம் நொந்துதான் அப்பெரும் மூச்சைவிட்டார்.

"உண்மையிலை சில கூட்டுறவு சங்கங்கள் நல்லாய் நடக்கிறதை பார்க்க எவ்வளவு சந்தோசமாக இருக்கு! எல்லாரும் நேர்மையாய் நடந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும் என்றார் மாஸ்ரர்.

"நடா நீர் கோவில் நிர்வாக சபையிலை இப்ப இல்லையோ?" என்றார் பண்டிதர். இல்லை நான் விலகி மூன்று மாதமாகின்றது என்றார் நடராசா. கோடு ஊழல் என்று கலைக்க முன்பே நீர் விலகியது உமக்கு பெருமைதான் என்றார் பண்டிதர். "என்னை சும்மா தொகைக்குத்தானே வைச்சிருந்தவை. எனக்கு ஒன்றும் சொல்வதில்லை. தலைவரும், தனாதிகாரியும்தான் கூட்டு. செயலாளர் பாவம் அவை இருவருக்கும் நல்ல பிள்ளையாய் நடக்கப் போய் வில்லங் கப்பட்டதுதான் மிச்சம். என்னவாய் இருந்தாலும் அவர் பிழை ஒன்றும் செய்யவில்லை என்று ஊரிலை

நாட்டுக்கு அனுப்பினார் என்றால் ஊரவர்கள் மடையர் என்பதுதானே அவரின் கணக்குப்போல. எனது பெறாமகன் அனுப்பின காசு மூன்று இலட்சம் ரூபாய்க்குத்தான் அந்தக் கதி அனுப்புறவையிலும் பிழை இருக்கு. கையிலை கொடுத்தால் உப்படி நடக்கும்தானே என்றார் கந்தையா மாஸ்ரர்.

"இல்லை எனது வீட்டுப் பணம் உதுமாதிரி போனால் சனம் சொல்லும். போன பிறப்பிலை கடனாக்குமென.

எஸ்.எல்.ஏ.எஸ் ஒருவரை தாங்கள் தலைவராய் போடே போறோம் என்று. நான் கேட்டேன் எப்ப கோவில் கச்சேரியானதென்று. அவர் அதோட அந்த கதையை விட்டுவிட்டார். அடுத்த நாள் சொன்னார் சேர்! நீங்கள் சொன்ன பின்புதான் யோசித்து பார்த்தேன். அது ஒத்து வராத காரியம்தான் என்றார். இடத்துக்கு பொருத்தமானவர்களை தெரிவுசெய்வது அவசியம் என்றார் பண்டிதர்.


சிரிப்பதற்கு



"ஆமா, வீட்டில இருக்கும் போதுகூட ஃபுல் மேக்கப்ல இருக்கீங்களே... ஏன் மேடம்?"

"இல்லேன்னா... என் வீட்டுக்காரருக்கே நான் யாருன்னு என்னை அடையாளம் தெரிய மாட்டேங்குதே!"

15 வருசமா தீராத உங்க நோய்க்கு ஒரு வழியா மருந்து கண்டுபிடிச்சுட்டேன். ஆனா பேட் லக் எழுதி வெச்ச என்னோட கையெழுத்தை என்னாலேயே படிக்க முடியல!



# ஜெயலலிதாவின் விடுதலையும் நீதிபதியின் தீர்ப்பும்



– கேசி –

## சிலருக்கு அதிர்ச்சி, சிலருக்கு மகிழ்ச்சி

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின பொதுச் செயலாளர் ஜெயலலிதா, அவருடைய தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரை விடுதலைசெய்து கர்நாடக ஐகோர்ட்டு நீதிபதி குமாரசாமி பரபரப்பு தீர்ப்பு அளித்துள்ளார்.

விடுதலை செய்வதற்கான காரணங்களை அவர் தனது 919 பக்க தீர்ப்பில் விளக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

அந்த தீர்ப்பில் நீதிபதி கூறி இருப்பதாவது:-

மேல்முறையீட்டு வழக்குகளில், அரசு தரப்பின் வாதம் உண்மையானது என்றும், மேல்முறையீட்டு மனுதாரர்களின் குற்ற நிரூபணம் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாகவும் விசாரணை கோர்ட்டுகளை போலவே, மேல்முறையீட்டு கோர்ட்டையும் திருப்திப்படுத்த வேண்டும்.

▣ விசாரணை கோர்ட்டின் தீர்ப்பு தவறானது என்று மேல்முறையீட்டு மனுதாரர்கள் இந்த கோர்ட்டை திருப்திப்படுத்த வேண்டியது இல்லை. ஒட்டுமொத்த ஆதாரங்களையும் ஆய்வு செய்யவேண்டியது மேல்முறையீட்டு கோர்ட்டின் வேலை. அந்த வகையில், விசாரணை கோர்ட்டுக்கு உள்ள அதே அதிகாரங்கள், மேல் முறையீட்டு கோர்ட்டுக்கும் உள்ளன.

▣ அதன்படி, ஆதாரங்களை ஆராய்ந்தால், விசாரணை கோர்ட்டின் முடிவுகள் தவறானவை, ஆதாரங்களுக்கு முரணானவை என்றே சொல்லத் தோன்றுகிறது.

▣ இந்த வழக்கில், வருமான வரித்துறையின் மதிப்பீட்டை விசாரணை கோர்ட்டு பெரிய ஆதாரமாகவே எடுத்துக்கொள்ளவில்லை. ஆதாரங்களை உரிய கண்ணோட்டத்தில் பரிசீலிக்கவில்லை.

▣ குற்றம் சாட்டப்பட்டவர்கள், இந்தியன் வங்கியில் கடன்பெற்றதை விசாரணை கோர்ட்டு தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. ஆனால், அந்த கடனை ஒரு வருமானமாக கருதவில்லை. இதன்மூலம், கடனை வருமானமாக கருதாத தவறை விசாரணை கோர்ட்டு செய்துள்ளது.

மேலும், கட்டுமான செலவு தொடர்பான ஆதாரங்களை முறையாக ஆராய தவறிவிட்டது. கட்டுமான செலவாக, 20 சதவீத செலவை கழித்துக்கொள்ளலாம் என்று சர்வசாதாரணமாக முடிவு செய்துவிட்டது. இந்த 20 சதவீத கழிவு என்பது சந்தேகத்துக்கு உரிய வகையிலும், யூகத்தின் பேரிலும் கணக்கிடப்பட்டுள்ளது.

▣ மேலும், (சுதாகரன்) திருமண செலவை ரூ.3 கோடி என்று விசாரணை கோர்ட்டு மதிப்பிட்டுள்ளது. அந்த ரூ.3 கோடியை முக்கிய குற்றவாளிதான் (ஜெயலலிதா) செலவழித்தார் என்பதற்கு ஏற்கத்தக்க ஆதாரமேதும் இல்லை. அதையும் மீறி, திருமண செலவு ரூ.3 கோடி என்ற முடிவுக்கு வந்துள்ளது.

▣ திருமண செலவு ரூ.3 கோடி என்றும், அந்த தொகையை முக்கிய குற்றவாளியின் செலவு கணக்கில் சேர்த்ததும் முறையல்ல.

▣ குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்வைத்த பெரும்பாலான வாதங்களை விசாரணை கோர்ட்டு நிராகரித்துள்ளது. சாட்சிகளை பிறழ் சாட்சிகளாக கருதாமல், அவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்களின் வக்கீல்கள் கூறுகிறார்கள். அந்த சாட்சிகளிடம் தங்களுக்கு சாதகமான முறையில் அரசுத்தரப்பு கேள்விகள் கேட்டுள்ளது.

▣ குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமான அம்சங்களில் ஒன்றாக இதை கருத வேண்டும். சாட்சிகள், வெவ்வேறு காலகட்டத்தில், வெவ்வேறு விதமாக சாட்சி அளித்தால், அவர்கள் மீது நம்பிக்கை வைப்பது நல்லதல்ல.

▣ மேலும், முறைகேடாக சம்பாதித்த பணத்தில்தான் சொத்துகள் வாங்கப்பட்டதாக யூகிப்பது கடினம். எனவே, அந்த சொத்துகளை பறிமுதல் செய்யுமாறு விசாரணை கோர்ட்டு பிறப்பித்த உத்தரவு, சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல.

▣ எனவே, வருமானம் வந்த வழி, சட்டபூர்வமானது. நோக்கம், சட்டப்பூர்வமானது. 4 பேரும் ஒரே வீட்டில் இருந்தனர் என்ற ஒரே காரணத்துக்காக, 4 பேரும் சதி செய்தனர், முறைகேடான வழிகளில் சொத்துகள் வாங்கினர் என்ற முடிவுக்கு வரமுடியாது.

▣ ஒட்டுமொத்த சூழ்நிலைகள் மற்றும் ஆதாரங்களை பரிசீலித்து பார்க்கும்போது, விசாரணை கோர்ட்டின் தீர்ப்பும், முடிவும் பலவீனமாக உள்ளது. சட்டப்படி ஏற்க முடியாததாக இருக்கிறது.

▣ குற்றம் சாட்டப்பட்டவர்களின் சொத்துகளையும், நிறுவனங்கள் மற்றும் கம்பெனிகளின் சொத்துகளையும் அரசு தரப்பு ஒன்றாக சேர்த்துள்ளது. கட்டுமான செலவாக ரூ.27 கோடியே 79 லட்சத்து 88 ஆயிரத்து 945-ஐயும், திருமண செலவாக ரூ.6 கோடியே 45 லட்சத்து 4 ஆயிரத்து 222-ஐயும் சேர்த்துக்கொண்டு, மொத்த சொத்து மதிப்பு ரூ.66 கோடியே 44 இலட்சத்து 73 ஆயிரத்து 573 என்று மதிப்பிட்டுள்ளது.

**முன்னர் நீதியை பாராட்டியவர்கள் இப்போது தூற்றுகின்றார்கள். அப்படியென்றால் இது சட்டம் சரியாக தன் கடமையைச் செய்ய வில்லையா? அல்லது நீதிபதிகளுக்கு இடையே சட்டம் மாறுபடுகின்றதா? இரண்டில் ஒரு நீதிபதி நீதிக்கு புறம்பாக பொய் தீர்ப்பைக் கூறியிருக்கின்றாரா?**

**நீதியின் மேல் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்த மக்களுக்கு இவ்வாறான சட்ட சடுகுடு சதிராட்டங்களைப் பார்க்கும்போது நீதியின் மீதும் சந்தேகம் வருகின்றது. நீதிபதிகள் நீதிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றார்கள். நீதியையும் பழிவாங்கும் ஆயுதமாக கையாளப்படுகின்ற அபத்தம் சாத்தியமே என்ற முடிவுக்கே சாதாரணர்கள் வரவேண்டியுள்ளது.**

▣ ஆதாரங்களை உரிய கண்ணோட்டத்தில் விசாரணை கோர்ட்டு ஆராயவில்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெருமளவு கடன்வாங்கித்தான், அசையா சொத்துகள் வாங்கப்பட்டுள்ளன.

▣ 4 குற்றவாளிகளும் குற்றச்சதியில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை பொறுத்தவரை சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் முக்கிய குற்றவாளியுடன் ஒரே வீட்டில் வசித்தார்கள் என்பதை மட்டும் வைத்து அவர்கள் குற்றச்சதியில் ஈடுபட்டதாக கூறிவிட முடியாது.

▣ ஒரு சட்டவிரோதமான காரியத்தை செய்ய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் இடையே ஒப்பந்தம் உருவானால்தான், அதை சதியாக கருத வேண்டும். சதி நடந்தது என்பதையும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த சதியில் பங்கேற்றனர் என்பதையும் நம்புவதற்கு காரணம் இருக்கவேண்டும்.

▣ ஆனால், இந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள், ஜெயலலிதாவை தவிர மற்ற 3 பேரும், பெருமளவு கடன் வாங்கி, விவசாய நிலங்கள், நிறுவனங்கள் போன்ற அசையா சொத்துகளை வாங்கியதாக தெரிவிக்கின்றன.

▣ மிகைப்படுத்தப்பட்ட கட்டுமான செலவையும், திருமண செலவையும் கழித்துவிட்டோம் என்றால், மொத்த சொத்து மதிப்பு ரூ.37 கோடியே 59 இலட்சத்து 2 ஆயிரத்து 466 ஆகும். ஆடைகள் மற்றும் செருப்புகளின் மதிப்பு குறைவாகவே இருப்பதால், அந்த செலவை நான் கழிக்கவில்லை.

▣ குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் மொத்த வருமானம் ரூ.34 கோடியே 76 இலட்சத்து 65 ஆயிரத்து 654 ஆகும்.

▣ சொத்து மதிப்பில் இருந்து மொத்த வருமானத்தை கழித்துவிட்டால் வரும் தொகை ரூ.2 கோடியே 82 இலட்சத்து 36 ஆயிரத்து 812 ஆகும். இதுவே, வருமானத்துக்கு மீறிய சொத்து ஆகும். இந்த தொகை மொத்த வருமானத்தில் 8.12 சதவீதமே ஆகும்.

▣ கிருஷ்ணானந்த் அக்னிஹோத்ரி என்பவரின் வழக்கில், சொத்து குவிப்பு வருமானத்தைவிட 10 சதவீதம்வரை இருந்தால், குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்தது.

▣ சொத்து குவிப்பு வருமானத்தைவிட 20 சதவீதம்வரை இருந்தால், அதை அனுமதிக்கத்தக்க அளவாக கருதலாம்

என்று ஆந்திர அரசு ஒரு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. தற்போதைய பண வீக்கத்தை கருத்தில்கொண்டு, 10 முதல் 20 சதவீதம் வரையிலான சொத்து குவிப்பை அனுமதிக்கத்தக்க அளவாக எடுத்துக்கொள்ளலாம்.

▣ இந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்களின் சொத்து குவிப்பு வருமானத்தைவிட 8.12 சதவீதமே இருப்பதால், அது அனுமதிக்கத்தக்க அளவுக்குள்தான் இருக்கிறது. ஆகவே, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெற தகுதியானவர்கள்.

▣ முக்கிய குற்றவாளியே விடுதலை செய்யப்படும்போது, சிறிய பங்கு வகித்த மற்ற 3 பேரும் விடுதலை பெற தகுதியானவர்கள்தான்.

▣ ஆகவே, அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் 4 பேரும் விடுவிக்கப்படுகிறார்கள். அவர்கள் மீதான குற்ற நிரூபணமும், ஜெயில் தண்டனையும் ரத்து செய்யப்படுகிறது.

▣ அவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்ய பிறப்பித்த உத்தரவும் ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பில் கூறியுள்ளார்

முன்னர் குற்றவாளியாக ஒரு நீதிபதி சாட்சியங்களின் அடிப்படையில் அறிவிப்பதோடு, தண்டனைகளைகளையும் வழங்குகின்றார். அப்போது நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது என்று எல்லோரும் நீதியை பாராட்டுகின்றார்கள். அரசியலும், அதிகாரங்களும் தேவைக்கு ஏற்ப செயற்பட்டாலும், நீதி மட்டும் நேர்மையாகவே இருக்கின்றது. சாதாரண மக்களின் நம்பிக்கையே நீதியின் மேல்தான் என்றும் கூறினார்கள்.

இப்போது இன்னொரு நீதிபதி சுமத்தப்பட்டது குற்றமில்லை என்கின்றார். ஏற்கெனவே வழங்கப்பட்ட தண்டனைகளையும் செல்லாது என்கின்றார். குற்றவாளியை குற்றமற்றவர் என்று கூறி விடுதலை செய்கின்றார்.

நீதியின் மேல் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்த மக்களுக்கு இவ்வாறான சட்ட சடுகுடு சதிராட்டங்களைப் பார்க்கும் போது நீதியின் மீதும் சந்தேகம் வருகின்றது. நீதிபதிகள் நீதிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றார்கள். நீதியையும் பழிவாங்கும் ஆயுதமாக கையாளப்படுகின்ற அபத்தம் சாத்தியமே என்ற முடிவுக்கே சாதாரணர்கள் வரவேண்டியுள்ளது.

நீதித்துறை தன்னை தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டுமாக இருந்தால், ஒரு தீர்ப்பை இன்னொரு தீர்ப்பு தவறாகக் கூறுகின்ற சந்தர்ப்பத்தில் முன்னைய தீர்ப்பை வழங்கிய நீதிமன்றமும், மேன் முறையீட்டுக்கான தீர்ப்பை வழங்கும் நீதிமன்றமும் தமக்கிடையே விவாதங்களையும், விசாரணைகளையும் பகிரங்கமாக நடத்தி மிகச்சரியானதை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். அது சாத்தியமில்லையே.



"பார் போற்றும் திருவே போற்றி!
போர்முகத்தின் புயலே போற்றி!
நீ நடந்தால் நாடு அதிரும்!
நீ சினந்தால் உலகே அஞ்சும்!

நீ எழுந்தால் பகை பணியும்!"
மன்னனைப் போற்ற போட்டா போட்டி!
புரவலனைப் புகழ்வதில்
புலவர்களுக்குள் போட்டி!
முத்தான வார்த்தைகளால்
முகஸ்துதிகள்!

புகழ்பவர்களுக்கு பொன்
முட்டைகள்! புலவர்களுக்கா
கசக்கும்? ஓலை ஓலையாக
புகழாரம்! ஓதி ஓதியே
பொன் கறந்தார்கள்!

மகுடி கேட்டு பாம்பு ஆடும்!
முகஸ்துதி கேட்டு மன்னன்
ஆடினான்!

இல்லாத பெருமைகள்
இருப்பதாக நினைத்தான்!
இல்லாத திறமைகள்
இருப்பதாய் இரசித்தான்!

தகுதிக்கு மீறிய தற்பெருமை
கொண்டான்! புத்தி
சொன்ன அமைச்சர் புறம்
தள்ளப்பட்டார்!
தவறுகளை இடித்துரைத்தார்
எடுத்தெறியப்பட்டனர்!
நான் சொல்வதே வேதம்
நான் சொன்னதே சட்டம்
தேவையில்லை வேறு வாதம்!"

ஆமாம் சாமிகள்
தாளம் போட்டனர்!
தாங்கள் அறியாதது
தரணியில் உண்டா?
மூளையில்
உதிப்பதெல்லாம்
முத்தான
தத்துவங்கள்!

உங்கள் சிந்தனையில்
முளைப்பதெல்லாம்
சத்தான கோட்பாடுகள்!
மன்னன் காதுகளில் போதை
ஊற்றினார்கள்!

மன்னன் இதயத்தில் மமதை
நாட்டினார்கள்! தகுதிக்கு மீறிய
தற்பெருமை ஊட்டினர்!
தரத்துக்கு மீறிய
எண்ணம் கூட்டினர்!

மன்னன் மதிக்கு
முகஸ்துதி சதியானது!
மன்னனின் பலவீனம்
கண்டறிந்தவர்கள்
காரியம் சாதித்தனர்!

கட்டழகிகள் என்றால்
மன்னன் விழிகள்
அவர்கள்மீது வட்டமிடும்!

நளின சுந்தரிகளை
அறிமுகம் செய்தனர்!
மேனி வளைவுகளில்
மோகித்துக் கிடந்தான்!
மேடு பள்ளங்களில்
மெய் மறந்து தகித்தான்!
சல்லாபம் தேடி உல்லாசத்தில்
புரண்டான்!

'மாங்கனி மேனி
மன்மத கேணி




தாங்கடி தோணி
தழுவடி ராணி
நான்தான் தேனி
என்று புலம்பினான்.

கட்டழகிகள் பராமரிக்கவே
கஜானா பாதி காலியானது!
கூட்டித் தருபவர்களுக்கு
நீட்டிக் கொடுக்க நாட்டில்
வளம் போதவில்லை!

"நாடுகளைப் பிடி அங்கெல்லாம்
கொள்ளையடி!" என்று
உத்தரவிட்டான்.

மன்னனின் தேவைக்கு
மண்ணிலே யுத்தம்!
பொன்னள்ளி கொடுத்து
போகம் காண்பதற்கு
தேசம் எங்கும் சிந்தவேண்டும்
இரத்தம்!

படைகள் சோர்வுடன் களம்
சென்றன! சென்ற இடமெல்லாம்
தோல்வி தழுவியது! இறுதியில்
மன்னனே களம் சென்றான்!

மோக விளையாட்டில் மூழ்கிக்
கிடந்தவனுக்கு வீர விளையாட்டு
தூரமாய் போனது!

களம் சென்றால் பகை பறக்கும்
குளம் என்றாகும். பகைவர்
சிந்தும் இரத்தம் என்று முகஸ்துதி
செய்துதான் அனுப்பினார்கள்.

புகழ் வீச்சை இரசித்தவன்
வாள்வீச்சில் கோட்டைவிட்டான்!
கைதான மன்னன் எதிரி நாட்டு
இராஜ சபையில் நிறுத்தப்பட்டான்!

பகைவனை வென்று
பகலவன் ஆனாய்!
நாடு பிடிக்க வந்தவரை
நாடி பிடித்து பார்த்தாய்!"

அயல் நாட்டு மன்னனுக்கு
செவியாரப் புகழாரங்கள்!
எங்கோ கேட்ட குரலாய்
இருக்கிறதே முன்னாள் மன்னன்
முகம் திருப்பிப் பார்த்தான்!

என்னே ஆச்சரியம்
என்னே ஆச்சரியம்!
நேற்று அவன் சபையில்
நெற்றிக்கு நேராக
வெற்றி என்று உரைத்தவர்கள்
சுற்றி சுற்றி வந்தவர்கள்!
இன்று தோல்வி முற்றியதும்
கட்சி மாறி சுற்றுகிறார்கள்!

சேராத இனத்தோடு
சேர்ந்து விட்டால்
தீதான குணமெல்லாம்
சேர்ந்து வரும்!

செம்நிலத்திலே நீர் பொழிந்தால்
சிவப்பாகி சேர்ந்துவிடும்!
தீ மனத்தோடு சேர்ந்துவிட்டால்
திரு வான மனம்கூட
தீதாகிவிடும்!

அவன் மனதில் இறுதியாக
ஒலித்தது திருக்குறள் ஒன்று.

"நல் இனத்தைவிட
சிறந்த துணையும் இல்லை!
தீய இனத்தைவிட
கொடிய பகையும் இல்லை!

நல் இனம் என்பது
முதுகில் குத்தாதது!
முகஸ்துதியும் செய்யாதது
தீய இனம் என்பது
சேர்ந்தே இருந்து குழிபறிப்பது!
முகஸ்துதி செய்தபடி
முதுகில் குத்துவது
என்பதை உணர்ந்தான்!

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல"
அதிகாரம்: 46, குறள்: 460.




**சிந்தியா! நாடாளுமன்ற தேர்தலில் சிறுபான்மை கட்சிகளின் நிலைப் பாடு எவ்வாறு இருக்கும்?**

எம்.சாந்தன், புன்னாலைக்கட்டுவன்.

பழைய தேர்தல் முறைமையின் படியே அடுத்துவரும் தேர்தலை நடத்தினால் சிறுபான்மை கட்சிகளுக்கு வேறு பெரிய பிரச்சினை இல்லை. தமது வாக்காளர்களிடையே என்ன தான் தனித்துவம், கொள்கை என்று வாய்கிழியக் கத்தினாலும், தற்போதைய அரசியல்போக்கில் மத்தியில் அரசோடு இணக்கமாக இருப்பதே சிறிய கட்சி களுக்கு தந்திரோபாயமாகும். அதை நேர்த்தியாகச் செய்வார்கள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பிரதமராகும் திட்டம் நிறைவேறவில்லையே சிந்தியா?**

எவ்.எவ்.தாஹிர், கொள்ளுப்பிட்டி.

அவசரப்படுகின்றீர்களோ என்று தான் நினைக்கின்றேன். இப்போது தானே விளம்பரத்தைப் பார்த்திருக் கின்றீர்கள். இனிமேல்தானே முழுப் படமும் இருக்கின்றது. பொறுமையாக இருந்துபாருங்கள். அடுத்த தேர்தல் பலரின் கணக்குகளை தப்புக்கணக்காக மாற்றப்போகின்றது.

☆☆☆☆☆☆☆☆☆☆

**ஜெயலலிதாவின் விடுதலையின் தீர்ப்பு எவ்வாறிருக்கப் போகிறது சிந்தியா?**

சி.பரமசிவம், கொக்குவில்.

நீதிமன்றத்திற்கு நீதிமன்றம் நீதியே மாறிப்போகின்றது. நீதி நிலையான தாக இல்லை. அவன் அவன் தலை விதியைப் பொறுத்தும், அந்த நேரத்தில் நீதிபதியின் மனோநிலையைப் பொறுத்துமே நீதி கிடைக்கும்.

ஜெயலலிதாவையும், சாமியார் நித்தியானந்தாவையும் குற்றவாளிகள் என்பது எனது நிலைப்பாடு அல்ல. ஆனால் குற்றவாளிகள் என்று கூறிய அதே நீதித்துறை பின்னர் குற்றவாளி இல்லை என்று தன்னளவிலேயே முரண்படுவதுதான் புரியவில்லை.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**மீண்டும் பிரிட்டனில் டேவிட் கெமரூன் பிரதமராகி உள்ளாரே ?**

சா.தர்சா, வவுனியா.

ஏன் நீங்கள் கெமரூன் மீது ஏதாவது குற்றம் சாட்டுகின்றீர்களா? அல்லது அவர் பிரிட்டனுக்கு எதிராக ஏதாவது தேசத் துரோகம் செய்தாரா? பிரிட்டன் மக்கள் வழங்கிய தீர்ப்பின்மீது உங் களுக்கு என்ன இவ்வளவு ஆச்சரியம்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**அண்மையில் நடைபெற்ற அரசியல் ஜோக் ஒன்று கூறுவீர்களா சிந்தியா?**

கே.ஆகாஸ், அச்சுவேலி.

அந்தக் காலத்தில் மாட்டு வண்டிகள் போகும்போது சிலவேளை அந்த வண்டியின் கீழாக ஒரு நாயும் போகும். அந்த நாய் நினைக்குமாம் அந்த வண்டியை தானே இழுத்துக் கொண்டு செல்வதாக. அதுபோல் தற்போதைய ஜனாதிபதியையும், அரசை தாமே ஏற்படுத்தியதாக சிலர் நினைத்துக் கொண்டு ஊருக்குள் திரிகின்றார்கள். அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் பலமில்லாத தரப்பின் பிச்சையைத்தான் அவர்களும் அதிகாரமென்றும், அமைச்சுப் பதவி என்றும் கூறிக்கொண்டு திரிகின்றார்கள் என்று அக்கரைப்பற்றிலுள்ள முன்னாள் அமைச்சர் கூறிய நகைச்சுவையான கதை நம்மில் எத்தனைபேருக்கு அப்படியே பொருந்திப்போகின்றது பார்த்தீர்களா? யாழ்ப்பாணத்திலும் அப்படி யாராவது திரிகின்றார்களா?

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**சிந்தியா! மெத்தியூஸ் விம்பிள் விருதுக்கு தெரிவாகியுள்ளாரே?**

ஜே.றமில்டன், மன்னார்.

வாழ்த்துக்கள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

**இரத்த தானம் வழங்குவதற்கு பலர் முன்வருவதில்லையே. ஏன் சிந்தியா?**

அ.சத்தேகூஷ், கொழும்பு -13.

போதிய விழிப்புணர்வு இல்லை. இரத்தம் வழங்கினால் உடல்பருமனாகி விடுமா? மீண்டும் இரத்தம் உடலில் ஊறுமா? இரத்தம் கொடுக்கும்போது வலிக்குமா? கொடுக்கும் இரத்தம் ஊறுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? இரத்தம் கொடுத்தால் அதனால் ஏதாவது நோய் வருமா? ஒரு பைந்த் இரத்தம் என்றால் அது எவ்வளவாக இருக்கும்? இப்படியான பல கேள்விகள் நன்கு படித்தவர்களிடமே இருக்கின்றது. இதற்கான விடைகளை முறையாக மக்களுக்கு வழங்கவேண்டும்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நேபாளத்தில் இந்திய...

இந்தியாவின் பெரியண்ணன் மனோ பாவத்தை சம்பந்தப்பட்ட நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் தெரிந்தே அனு மதிக்கின்றன. மன்னராட்சியை எதிர்த்துக் கிளர்ந்த நேபாள புரட்சியின்போது தனது அடிவருடியான மன்னரின் சார்பில் தலையிட்டபோதே நேபாளிகளின் ஆத்திரத்திற்கு இந்தியா ஆளானது.

புவியியல்ரீதியில் தனக்கிருக்கும் சாதகமான நிலையைப் பயன்படுத்தி நேபாளம் பொருளாதார ரீதியில் சுயேச்சையாக வளர்வதைத் இந்தியா தொடர்ந்து தடுத்து வந்துள்ளது. சீனத்தோடு நேபாளத்திற்கு இருக்கும் பொருளாதார உறவை மட்டுமின்றி, கிட்டத்தட்ட நேபாளத்தின் அயலுறவு மற்றும் இராணுவ செயற்பாடுகள் அனைத்தும் தில்லியில் வைத்தே தீர்மானிக்கப்படுகின்றன.

நீண்டகாலமாக பொருளாதார வளர்ச்சியின்றி, வேலையின்மையாலும் வறுமையாலும் சகல திசைகளிலிருந்து தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் நேபாள மக்கள் தங்களது துன்ப துயரங்களுக்கு நேபாள ஆளும் வர்க்கம் எந்தளவுக்குக் காரணமோ அதேயளவுக்கு இந்தியாவும் காரணம் என்பதைத் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு தேர்தலிலும் மக்களின் வாக்குகளைக் கவர நினைக்கும் நேபாளின் எதிர்க்கட்சிகளுக்கு இந்திய எதிர் நிலைப் பாடு ஒன்றே உத்தரவாதமான ஓட்டுப் பொறுக்கும் சாதனமாக இருந்துவந்துள்ளது. ஒவ்வொரு முறையும், தேர்தலில் வென்ற பின் சொல்லி வைத்தாற்போல இந்திய அடிவருடித்தனத்தில் மூழ்கி நேபாளிகளுக்கு துரோகமிழைப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளன அக்கட்சிகள்.

ஆக, #Gohomeindiamedia என்பது இப்போதைய 'ட்ரெண்டாக' இருந்தாலும், அது இந்தக் குறிப்பான சந்தர்ப்பத்தில் வெளிப்பட்டுள்ளதன் காரணம் இதுதான். இந்திய ஊடகங்களின் சமீபத்திய கதை வரிசையின் நாயகனான மோடியின் பிம்பத்தை நேபாளிகளின் முன் தூக்கிப் பிடித்த செயலானது அவர்கள் பல்லாண்டு களாக அனுபவித்துவரும் துன்பங்களின் குறியீடாக மாறியுள்ளது.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ! யாழ்ப்பாணத் தின்ர கதை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போகுது. பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்கு மணிக்கட்டோடை வெட்டி கொழும்பில சேர்த்திருக்குது. பாவம் அந்தப் பெடியனுக்கு ஒட்ட வச்ச கையில பெருவிரல் மட்டும் இயங்குதாம் மற்ற விரல்கள் இயங்குமோ இல்லையோ எண்டதை இப்போதைக்கு உறுதியாகச் சொல்ல ஏலாதாம்.**

யாழ்ப்பாணத்தில தெருவுக்குத் தெரு வாள்வெட்டு குறூப்புகள் இருக்குது எண்டு எல்லோரும் சொல்லினமே தவிர, இதுவரைக்கும் பொலிஸார் யாரையும் பிடிச்ச மாதிரி இல்லையே. இதைப்பற்றி ஒரு பொலிஸ் அதிகாரியிடம் கேட்டதற்கு,

முன்னாள் போராளிகளும், வேலை வாய்ப்பில்லாத வெட்டிகளும், பெற்றோருக்கு அடங்காத ஊதாரிகளும் யாழ்ப்பாணத்தில அதிகமாகவே இருக்கினம். அவையை பிடிக்க வேணுமெண்டால் யாழ்ப்பாணத்தில் முன்னம் செய்த மாதிரி வாரத்துக்கு ஒரு நாள் சுற்றிவளைப்புச் செய்து உறுதிப் படுத்தினால்தான் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவர முடியும்.

அதைச் செய்தால், இண்டைக்கு படையை வெளியேறு எண்டவையும், சிவில் செயற்பாடுகளில் படையினரின் தலையீடு எண்டு சொல்லிறவையும், என்ன சொல்லுவினம்? ஐயோ பொலிஸ் சுற்றிவளைப்புச் செய்யுது, பெடியளை ஐடிண்டிக்காட்டு கேட்டு தொல்லைப்படுத்துது எண்டு கத்துவினம்.

இப்பவெல்லாம் வாயை மூடிக்கொண்டு தாங்களும் சில ரவுடிகளை சம்பளம் கொடுத்து வளர்த்துக்கொண்டும் இருக்கின்ற அரசியல்வாதிகள், நாங்கள் அப்புடிச் செய்தால் அதுக்குள்ள வலுக்கட்டாயமாக தலையை நுழைத்து தங்கட பொலிரிக்ஸைச் செய்வினம்.

இப்படி ரெண்டுங்கெட்டானாக ஒவ்வொருவரும் இருந்துகொண்டால் பொலிஸார் என்ன செய்வது. தெருவுக்குத் தெரு இல்லை. வீட்டுக்கு வீடு ஒரு சண்டியன் உருவாகத்தான் செய்வான்.

பொலிஸாருக்கு பாதுகாப்புச் சார்ந்ததும், பொது அமைதி தொடர்புபட்டதுமான தகவல்களை யாரும் தரமாட்டினம். பொலிஸாருக்கு எந்தவகையிலையும் யாழ்ப்பாணத்தில மக்களின் ஒத்துழைப்பு கிடைப்பதே இல்லை. பொலிசாரோடு தொடர்பாக இருக்கிறது எதுக்கு எண்டு கேட்டால், தங்களுக்கு பிரச்சனை வந்தால் பொலிசாரிடம் பிரத்தியேகமான உதவியைக் கோருவதற்காகவும், வீதி ஒழுங்குகளை மீறுகின்ற சமயத்தில் பொலிஸாரின் உதவியைக் கோருவதற்காகவுமே.

இந்த நிலைமையானது பொலிஸாருக்கு சவால்விடுவதாகவே அமைகின்றது. எனவே பொலிஸார் தமக்குரிய கடமைக்கு உட்பட்டே விடயங்களைக் கையாள்வார்கள். சரியான சாட்சியங்களையும், முறைப்பாடுகளையுமே பொலிஸார் தேடுவார்கள். ஒரு இராணுவ நடவடிக்கையைப்போல் பொலிசாரின் நடவடிக்கை இருக்கமுடியாது.

ஆகவே மக்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் பொலிஸாருக்கு எந்தளவிற்கு கிடைக்கின்றதோ அந்தளவுக்கே குற்றங்களைக் குறைக்கவும், தடுக்கவும், சூழலை பாதுகாப்பாக வைத்திருக்கவும் முடியும் என்று சொன்னாருங்கோ.

அவர் சொல்லுறதைப் பார்த்தால் நியாயமாகத்தான் இருக்குதுங்கோ. குற்றவாளிகளை வீட்டுக்குள்ள வைத்துக் கொண்டும், வெளிப்படையாக குற்றவாளிக்கு எதிராக குரல்கொடுக்க முன்வராமலும் இருந்துகொண்டு பொலிஸார் நடவடிக்கை எடுக்கினமில்லை எண்டு சொல்லுறதில அர்த்தமில்லையுங்கோ.

இதைப்பற்றி வாத்தியார் என்ன சொல்லுறார் தெரியுமோ? யாழ்ப்பாணத்தில தங்களுக்கென்று ஒரு சண்டியன் இருக்க வேணுமெண்டும், அந்தச் சண்டியன் தன்னில கை வைக்காமல் இருக்கவேணும் எண்டும் திங் பண்ணுற ஒரு தட்டுச் சனம் இருக்கினமுங்கோ.

அவைக்கு சண்டியனாக இருக்கிறவன் இயக்கக்காரனோ, சிங்களவனோ, எந்தச் சாதிக்காரனோ எண்டதெல்லாம் பிரச்சனை இல்லையுங்கோ. ஆனால் அதே சண்டியன் ஒருநாள் தன்னை எதிர்த்திட்டாலோ, நியாயம் கேட்டிட்டாலோ... ஐயோ யாழ்ப்பாணத்தில இப்புடியெல்லாம் நடக்குதே? பொலிஸ் என்ன செய்யுது எண்டும், மர்மநபர்களை தமிழர்களை அழிக்க சிங்கள அரசாங்கம் களம் இறக்கிவிட்டிருக்குது எண்டு குய்யோ, முறையோ எண்டு கத்துவினமுங்கோ.

அவை கத்தினால் ஊடகங்கள் செய்தியாக்குவினம், அரசியல்வாதிகள் அறிக்கைவிடுவினம், அதுவரைக்கும் யாருமே உதுகளை ஆராயவோ, கண்டுகொள்ளவோ மாட்டினமுங்கோ. இல்லாட்டில் இலங்கையில எங்குமில்லாத அளவுக்கு யாழ்ப்பாணத்தில மட்டும் டிசைன் டிசைனாக பிரச்சனைகள் தலைதூக்கிக் கொண்டுவருகுதே ஏன்?


சமூகத்தில பல பிரச்சனைகள் வரத்தான் செய்யும். இல்லாட்டில் மற்ற மாவட்டங்களில இருந்து பொலிசாரை அகற்றவெல்லவோ வேணும். ஆனால் யாழ்ப்பாணத்தில மட்டும் பிரச்சனைகள் அளவுக்கு அதிகமாக உருவாகுவதும், அது அரசியல் மயப்படுகிறதும் வழமைக்கு மாறாக நடக்கின்றதே அதை அவதானிச்சீங்களோ.

உதுதான் யாழ்ப்பாணத்தில இருக்கிற சிக்கல். உந்தச் சிக்கலை முடிவுக்கு கொண்டுவராமல், முழு யாழ்ப்பாணத்தின்ர தலைவிதியையும் ஒரு குறிப்பிட்ட தரப்பு தீர்மானிக்கிறதும், அதுவே முழு யாழ்ப்பாண மக்களின்ர கருத்து என்று நம்பச் செய்வதுமான சூழலை முதலில வெளிப்படையான பேசுபொருளாக்கி மக்களுக்கு தெளிவுபடுத்த வேணுமுங்கோ. அப்புடிச்செய்தால் பாதிப் பிரச்சனை உடனடியாக முடிவுக்கு வருமுங்கோ என்று வாத்தியார் சொல்லுறாருங்கோ.

வாத்தி எதைச் சொல்லுறார் எண்டு எனக்கு ஒண்டும் விளங்குதில்லையுங்கோ. உங்களுக்கு ஏதும் விளங்கினால் எனக்கும் சொல்லுங்கோவன். ஓ.கே அடுத்தவாரம் ஏதாவது முன்னேற்றம் வருகுதோ எண்டு பார்ப்போமுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

## வரலாறு படைத்த வல்லுநர்கள்
# மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



கிளாஸ்கோ சதுக்கத்திலுள்ள தோட்டத்தில், மாரிக் காலத்து வெண் பனித்தூள் மூடிய தரையில், ஒரு வாலிபர் தன்னந்தனியாகக் குறுக்கும் நெடுக்கமாக உலாவிக் கொண்டிருந்தார். பூந்தோட்டப் பாத்திகளில் செடிகள் ஏதுமில்லை. தனக்குத்தானே ஏதோ பேசிக்கொண்டு நடை பழகியவரைக் கண்டவர்கள் பைத்தியம் என்று கேலியாகச் சிரித்துக் கொண்டுபோனார்கள். அவர் சிந்தையில் முட்டி மோதிக் கொண்டிருக்கும் எண்ண அலைகளைப் பற்றி யாரும் புரிந்துகொள்ளவில்லை.

ஜோசப் லிஸ்டர் என்னும் ஸ்கொட்லாந்து இளம் டாக்டரான அவருக்குத் தெரியும். தன் சிந்தனையைக் கசக்கிக்கொண்டிருக்கும் அது எத்தகைய முக்கியத்துவம் பெற்றதென்று. சிந்தனை வயப்படும் போதெல்லாம், தன் வீட்டின் அருகேயுள்ள அச்சதுக்கத்தில் இப்படி உலாத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது அவர் வழக்கம். இன்றும் அதே நிலைதான்.

ஆனால் ஒரு வித்தியாசம், வியப்பூட்டும் தீர்க்கமான முடிவோடு அவரது சிந்தனைகள் ஒன்றை ஒன்று மோதிக்கொண்டிருந்தன. ஜோசப் லிஸ்டர் முப்பது வயதைக் கடந்துகொண்டிருந்த தருணம் அது. கிளாஸ்கோ அரசாங்க மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைப் பேராசிரியராகப் பணியாற்றிவந்தார். கூச்ச சுபாவமுடையவர். இரும்பு நெஞ்சம் கொண்டவர். அந்த மன உறுதி அவரது பிற்கால வாழ்க்கைக்குக் கைகொடுத்தன. சோதனை நிறைந்த அப்போதைய வாழ்வில் அவர் மனைவி அக்னஸ் பேருதவியாக இருந்தாள். (முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

**(14.05.2015 தொடக்கம் 20.05.2015 வரை)**

### மேடம்

கூட்டுத் தொழிலில் பங்காளிகளுடன் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துதீரும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும், பாராட்டுதல்களை பெறுவார்கள். விபரீத எண்ணங்களை நினைத்து மனநிம்மதி இழக்காதிருங்கள். குழந்தைகளால் பொருட்செலவுகள் வந்தபோதிலும் அவர்களால் நன்மதிப்பைப் பெறுவீர்கள். சொத்து சம்பந்தமான விசயங்களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். கணவன் - மனைவி உறவுகளில் சிற்சில பிரச்சினைகள் வந்துபோகும். உடம்பில் வயிறு, முதுகு போன்ற உபாதைகள் வந்துபோகும்.

### இடபம்

சகோதர, சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் வெற்றி பெற்று அவர்களுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். உடல்நிலையில் மூலம் மற்றும் நீர் சம்பந்தம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த வெளிநாடு செல்லுதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்து சேரக்கூடிய காலமாகும். வடக்குத்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயங்கள் வந்துசேரும். பிரிந்துபோன கணவன் - மனைவி உறவுகள் மீண்டும் தொடருவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். உத்தியோகத் துறையினர்களுக்கு நினைத்த இடங்களுக்குப் பணி இடமாற்றம் ஏற்படும்.

### மிதுனம்

விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்றாகப் பலிதமாகும். மனைவி மற்றும் மனைவிவழிச் சொந்தபந்தங்கள்மூலம் சில ஆதாயங்களை அடைவீர்கள். புதிய வீடு, தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்யப்போட்ட திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளால் கண்டிப்பும், இடமாற்றமும் ஏற்படலாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளுக்காகப் பணம், பொருள், ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லதாகும். மற்றவர் களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம்

### கடகம்

உடம்பில் கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவது நல்லதாகும். பொருளாதார நெருக்கடிகள் மாறிப் பணப்புழக்கம் மிக நன்றாக இருக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கைமூலம் காரணமற்ற பிரச்சினைகள் வந்துசேரக்கூடிய காலம் என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லதாகும். குலதெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் சில தடைகள் வரக்கூடும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பழகிவருதல் நல்லது.

### சிங்கம்

செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வந்துபோக வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் சில பொருட்செலவுகளும், வீண் பிரச்சினைகளும் வந்துபோகும். குலதெய்வ வழிபாடு செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். சகோதரர்களால் திடீர் தனவரவுகள் உண்டாகும். சமுதாய நல்லிணக்கத்திற்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். வங்கிகள்மூலம் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் வந்துசேரச் சற்றுக் காலதாமதம் ஆகலாம். ஆடம்பர அலங்காரப் பொருள் வியாபாரிகள், சினிமா மற்றும் நாடகத்துறை சார்ந்தவர்கள், திருமணக் கூடங்களை நடத்துபவர்கள் ஆகியோர்கள் மிக இலாபம் அடைவார்கள்.

### கன்னி

புதிய சொத்துக்களை வாங்குவதற்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். புதுப்பித்துக் கட்டுவதற்காகப்போட்ட திட்ங்களில் வெற்றியடைய வாய்ப்பு உள்ளது. விபரீதமான எண்ணங்களையும், தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையையும் தவிர்த்தல் நல்லது. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படக்கூடிய காலமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறுபோன்ற தொல்லைகள் வந்துபோகும். தாயின் உடல்நிலையில் இருந்து நோய்கள் குறையக்கூடிய காலமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்ட திட்டங்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து புதிய தொழில்களை ஆரம்பம் செய்வீர்கள்.

### துலாம்

பொருளாதாரத்தில் இதுநாள்வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி நல்ல சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகுவதோடு மனநிம்மதி குறைவதோடு வீண் பொருட்செலவுகளும் வந்துசேரும். பிள்ளைகளால் மனமகிழ்ச்சியும், பொருள்வரத்தும் உண்டாகும். பூர்வீகச் சொத்து விசயங்களில் இருந்துவந்துள்ள நாட்பட்ட பிரச்சினைகள் நீங்கிச் சொத்துக்கள் கிடைக்கும். தீர்த்த யாத்திரைகளை மேற்கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றி அடையலாம். பொதுப்பணிகளைச் செய்வோர்கள் கவனமுடன் பணியாற்றுவதால் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இருக்கலாம்.

### விருச்சிகம்

ஆலயப் பணிகளில் பங்குகொண்டு மனநிம்மதி அடைவீர்கள். மஹான்களின் தரிசனத்திற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். பெண்களால் துலை தூரத்தில் இருந்து நற்செய்திகளும் பொருள்வரத்தும் உண்டாகும். பழைய கடன்கள் மீண்டும் தொல்லை கொடுக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித்தொகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. காதல் விசயங்களில் அனுகூலமான சில செய்திகள் வந்துசேரும். கண், காதுகளில் கவனம் தேவை.

### தனுசு

அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த ஆதரவுகள் கிடைக்கும். மற்றவர்களுக்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். தேவையான பொருளாதாரம் கை வந்து சேரக்கூடிய காலமாகும். தங்கம் வெள்ளி நகை வியாபாரிகள் எதிர்பாராத இலாபம் அடைவார்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயத்தில் சற்று கவனமான நடந்துகொள்ளவும். புதிய கடன் வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றி அடையலாம். விவசாயம் சுமாராகக் காணப்படும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. காதல் விசயங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து உறவுகள் வலுப்பெறும்.

### மகரம்

நீண்டகாலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அரசியல்வாதிகளிடம் இருந்து நீண்டநாட்களாக எதிர்பார்த்து வந்த உதவிகள் கிடைக்கும். குடும்ப சொத்துக்கள் சம்பந்தமாகிய விசயத்தில் சச்சரவுகள் வந்துபோகும். தீர்த்த யாத்திரைகள் சென்றுவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். செய்தொழிலில் புதிய கூட்டு முயற்சிகளைத் தள்ளிப்போடவும்.

### கும்பம்

ஒரு சிலருக்கு நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சனைகக்கு நல்ல முடிவுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவீர்கள். உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் மாறிப் பொருட்செலவுகள் குறைய வாய்ப்புகள் உள்ளது. நாட்பட்ட வராத கடன்கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். சகோதரர்களால் மனநிம்மதி குறைந்தாலும் அவர்களால் சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள்.

### மீனம்

நீண்டகாலமாக புதிய வீடு, நிலம் வாங்கப்போட்டிருந்த திட்டங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ளது. உடம்பில் மூளை, நரம்பு ஆகிய உபாதைகள் வந்துபோகும். மற்றவர்களுக்காக ஜாமீன் போட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்கவேண்டாம். செய்தொழிலில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. உற்றார், உறவினர் வருகையால் பணச் செலவுகள் உண்டாகும். கண்களில் கவனமுடன் இருக்கவும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி உண்டாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# பூமியின் அழகைப் பார்க்கணுமா?



உலகின் மிகப்பெரிய கட்டடமான புர்ஜ் கலிபா ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான துபாயில் கட்டப்பட்டுள்ளது. இது 124 மாடிகளைக் கொண்டது. இங்கு நட்சத்திர ஓட்டல்கள், அலுவலகங்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், குடியிருப்புகள் மற்றும் நீச்சல் குளங்கள் என அனைத்து அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. 2,717 அடி (828 மீற்றர்) உயரம்கொண்ட இந்த கட்டடம் முழுவதும் கறுப்புநிற சலவை கற்கள், எவர்சில்வர் மற்றும் கண்ணாடிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

124 மாடிகளுக்கும் செல்லும்வகையில் நகரும் படிக்கட்டுகள் மற்றும் லிப்ட் வசதிகள் இங்கு உள்ளன. இங்குள்ள இரண்டு லிப்டுகளும் நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 244.4 கிலோமீற்றர் தூரத்துக்கு முன்னும், பின்னுமாக சென்று வந்துள்ளன. அவ்வகையில், இந்த வளாகம் திறக்கப்பட்ட நாளில் இருந்து (சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்னர்) இதுவரை 3 இலட்சத்து 84 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தூரத்தை இவை கடந்துள்ளன. இந்த தூரமானது, பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்துக்கு ஒப்பானது, என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் மாதம் வரையிலான மூன்று மாத காலகட்டம் வரை, முதல் லிப்ட் 49 ஆயிரத்து 833 முறை இயங்கி 21 ஆயிரத்து 329 கிலோமீற்றர் வரையிலும், இரண்டாவது லிப்ட் 52 ஆயிரத்து 939 முறை இயங்கி 22 ஆயிரத்து 658 கிலோமீற்றர் வரையிலும் சென்றுவந்துள்ளன.

உலகிலேயே உலகிலேயே மிகவும் உயரமான கட்டடம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட மிக உயரமான கட்டடம் என ஏழு கின்னஸ் சாதனைகளை புர்ஜ் கலிபா கட்டடம் படைத்துள்ளது என்பது.

# படைப்பின் விநோதம்



உலகின் மிக உயரமான மனிதரும் உலகின் மிகக் குள்ளமான மனிதரும் இலண்டனில் சந்தித்துக் கை குலுக்கிக்கொண்டனர். துருக்கியைச் சேர்ந்த 31 வயதான சுல்தான் கோஸன் உலகின் மிக உயரமான மனிதராக விளங்குகின்றார். அவரின் உயரம் 08 அடி 3 அங்குலமாகும். (2.51 மீற்றர்) உலகின் மிகக் குள்ளமான மனிதராக நேபாளத்தைச் சேர்ந்த சந்திர பஹதூர் 75 வயதானவர். அவரின் உயரம் ஒரு அடி ஏழு அங்குலமாகும். (0.54 மீற்றர் மாத்திரமே) இருவருக்குமிடையில் சுமார் 7 அடி வித்தியாசம் காணப்பட்டபோதிலும் இருவரும் கை குலுக்கிக்கொண்டனர். அவர் குள்ளமாகவும் நான் உயரமாகவும் இருந்த போதிலும் எமது வாழ்க்கை முழுவதிலும் நாம் ஒரேவிதமான சாவல்களை எதிர்கொண்டோம். சந்திராவின் கண்களை நோக்கியபோது அவர் நல்லவர் என்பது தெரிகிறது எனக் கோஸன் கூறினார்.

உலகின் மிகவும் உயரமான மனிதரைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைந்தேன். எனக்கு முற்றிலும் மாறுபட்டவரை சந்திப்பதற்கு ஆர்வத்துடன் இருந்தேன் என டாங்கி குறிப்பிட்டார்.

சீனாவைச் சேர்ந்த நபர் ஒருவர் சொந்த நகரின் மாதிரியை முற்றிலும் நாணயக் குற்றிகளினால் உருவாக்கி அசத்தியுள்ளார்.

ஹீ பெய்க்ஸி எனும் 32 வயதான இந்நபர் சிங்கிங் எனும் நகரை இவ்வாறு நாணயக்

# அதிசயக் குழந்தை



முற்றிலும் நாணயக் குற்றிகளினால் உருவாக்கி அசத்தியுள்ளார்.

ஹீ பெய்க்ஸி எனும் 32 வயதான இந்நபர் சிங்கிங் எனும் நகரை இவ்வாறு நாணயக் குற்றிகள்மூலம் உருவாக்கியுள்ளனர். நகரிலுள்ள வர்த்தகக் கட்டடங்களை மாத்திரமல்லாமல் வீதிகள் பாலங்களையும் அவர் இவ்வாறு நிர்மாணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்காக மொத்தமாக 50,000 ஆயிரம் நாணயக் குற்றிகளை அவர் பயன்படுத்தியுள்ளார். இதன் நிர்மாணப் பணிக்காக தினமும் இரு மணித்தியாலயங்கள் வீதம் 30 நாட்களை அவர் செலவிட்டுள்ளார்.








# அதிசய குழந்தை



இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் பெருய்பூர் கிராமத்தில் நான்கு கைகள், நான்கு கால்களுடன் அதிசய குழந்தை பிறந்துள்ளது. இரட்டைக் குழந்தைகளின் உடைகள் ஒன்றாக ஒட்டியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் கடவுளின் அவதாரமாக குழந்தை பிறந்துள்ளதாகவும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டாம் எனவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிசயக் குழந்தையைப் பார்வையிட ஆயிரக்கணக்கானோர் வைத்தியசாலைகள் வருகை தந்தவண்ணமுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகில் பூமியில் வாழும் உயிரினங்களுக்கு ஈடான உயிரினங்கள் கடலில் வாழ்வதாக மீனவர்கள் நம்புகின்றனர்.

அவ்வாறான உயிரினங்கள் கடல் சிங்கம், கடல் பாம்பு எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. இந்த நிலையில், நீர்கொழும்பு கடற்கரையில் இப்படியான அபூர்வமான கடல்வாழ் உயிரினம் ஒன்று மீனவர்களுக்கு கிடைத்தது.




மீனை போன்று இருக்கும் இந்த உயிரினத்தின் மேல் பகுதியில் மானுக்கு இருப்பதை போன்ற புள்ளிகள் காணப்படுகின்றன.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மே 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 31 வியாழக்கிழமை (14.05.2015) பக்கங்கள் IV ஓசை – 226

## முதலமைச்சர் - ஆளுநர் அலுவலகங்கள் முன்பாக

# தொண்டராசிரியர்கள் போராட்டம்

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தின் முன்பாகவும், ஆளுநர் அலுவலகம் முன்பாகவும் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வந்த தமக்கு இதுவரையில் நிரந்தர நியமனங்கள் வழங்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். (IV) ஆம் பக்கம் பார்க்க




## போர் வீரர்கள் அணிவகுப்பு

(கொழும்பு)

போர் வெற்றி கொள்ளப்பட்டதை நினைவு கூரும் வகையில், போர்வீரர்கள் ஞாபகார்த்த அணிவகுப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி மாத்தறையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை கடற்கரை வீதியில் வரும் 19 ஆம் திகதி காலை 8.00 மணியளவில் இந்த அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

இந்த அணிவகுப்பில் முப்படைகளும் பங்கேற்கவுள்ளதுடன், ஆயுதப்படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் பங்கேற்கும், பொதுமக்கள் மற்றும் அழைப்பாளர்களுக்கான போக்குவரத்து விதிமுறைகளை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால், போர் வெற்றி நாளாக இதுவரை கொண்டா

(IV) ஆம் பக்கம் பார்க்க

## மங்கள சமரவீரவிடம் மகிந்த 100 கோடி நட்டஈட்டுக் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் கருத்து வெளியிட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு சட்டத்தரணி அதுல பிரியதர்சன டி சில்வா ஊடாக கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

100 கோடி ரூபா நட்டஈடு கோரி நிபந்தனைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மே மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்து அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் இந்த நிபந்தனைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் 18 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்துக்களை குவித்துள்ளதாகவும் இலங்கையின் முதலாவது ரில்லியன் பதி மகிந்த ராஜபக்ஷ எனவும் மங்கள சமரவீர ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது நற்பெயருக்கு களங்கம

(IV) ஆம் பக்கம் பார்க்க

## அனந்திக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




(முல்லைத்தீவு)

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கு எதிராக முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் வீதியில் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம், காணாமற்போனோரின் உறவினர்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

அனந்தி சசிதரனின் கணவர் எழிலன் மூலமே தங்களின் பிள்ளைகள் காணாமற்போயுள்ளனர் எனவும், அதற்கான பதிலை அனந்தி வழங்கவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி நின்றனர். முல்லைத்தீவு கேப்பா

(IV) ஆம் பக்கம் பார்க்க

## கோத்தாபயவை கைதுசெய்ய உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, தன்னைக் கைது செய்யும் பொலிஸாரின் முயற்சிக்குத் தடைவிதிக்குமாறு கோரி, கோத்தாபய ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை நேற்று மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

முன்னதாக இந்த மனுவை (IV) ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் மனங்களுக்கு ஜெயாவின் விடுதலை பெருமகிழ்ச்சி

### ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் கடிதம்





உங்கள் மீது சோடிக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் நீங்கள் விடுதலையாகி வந்திருப்பது குறித்து தமிழகமெங்கும் பெரு மகிழ்ச்சி பொங்கி வழிகிறது. இந்த மகிழ்ச்சி தனியே தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, உங்களது விடுதலையால் தமிழக மக்களை போல் ஈழத்தமிழ் மக்களின் மனங்களும் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கின்றன.

இவ்வாறு அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதாவுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தா அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

உண்மைகள் ஒரு போதும் உறங்குவதில்லை. இந்த உயிருள்ள தத்துவத்தை உங்களது விடுதலை உலகத்தின் செவி

(IV) ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபை ஊழியர் மின்சாரம் தாக்கி பலி

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மின்சார விநியோகப் பிரிவு ஊழியர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அண்ணாசிலையடி, கரணவாயைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான செல்லத்தம்பி (வயது - 42) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று நண்பகல் வேளையில் துன்னாலை பூதவிராயர் கோவிலடிப் பகுதியில் வீதி விளக்கு திருத்துவதற்காக மின்

(IV) ஆம் பக்கம் பார்க்க

# எழுவைதீவு கடற்கரை வீதி மக்கள் பாவனைக்காக கையளிப்பு



(எழுவைதீவு)

எழுவைதீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடற்கரை வீதியினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து மக்கள் பாவனைக்கு கையளித்தார்.

எழுவைதீவிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் குறித்த வீதியினை திறந்து வைத்தார்.

எழுவைதீவு இறங்கு துறையிலிருந்து மக்களின் குடிமனைக்குச் செல்லும் இக்கடற்கரை வீதியானது நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் இருந்து வந்தது.

இந்நிலையில், குறித்த வீதியினை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக செயலாளர் நாயகத்தின் வழிகாட்டலிற்கு அமைவாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 6.2 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தமது கோரிக்கைக்கு அமைவாக உரிய நடவடிக்கையினை முன்னெடுத்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மக்கள் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன், உபதவிசாளர் அல்பேட், பிரதேச சபை செயலாளர் சுதர்ஜன், யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# யாழ்: வணிகர் கழகத்தின் வேலை வங்கித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பு கோரும் பல தரப்பட்டவர்களிற்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக வேலை வங்கித் திட்டமொன்றை யாழ் வணிகர் கழகம் ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிற்றூழியர்கள், கணனி இயக்குநர்கள், கணக்காளர்கள், விற்பனை உதவியாளர்கள், சாரதிகள், உணவு விடுதிகளின் முகாமையாளர்கள் போன்ற பல்வேறு பதவிகளை நாடிய விண்ணப்பதாரிகள் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

எனவே, நிறுவனங்களிலும், அல்லது வர்த்தக ஸ்தாபனங்களிலும் வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு தேவைப்படும் ஆளணியை யாழ். வணிகர் கழகத்தினால் நடாத்தப்படும் வேலை வங்கியில் உள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

# எரிவாயு கசிவால் இருவர் காயம்

(மன்னார்)

மன்னார், பெரிய கடை, கடற்கரை வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று சமையல் எரிவாயு கசிவால் காயமடைந்த இரு ஆண்கள், மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சமையல் எரிவாயு அடுப்பு மூட்டிய போது அது எரியாததையடுத்து, எரிவாயுவை நிறுத்தாமல் சீர் செய்ய முற்பட்டவேளை அது தீப்பற்றிக் கொண்டதில் இருவரும் காயமடைந்தனர். அயலவர்களால் காப்பாற்றப்பட்ட இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அலங்கார உற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மத்தி முத்துக் கிருஷ்ணர் வீதி செல்வபூமி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி சிறப்புற இடம்பெற்று வருகின்றது.

பதினொரு தினங்கள் இடம்பெறும் இவ்வலங்கார உற்சவத்தில் 21ஆம் திகதி வரை தினமும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி பூசைகள் நடைபெற்று வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து அம்பாளின் வீதியுலாவும் இடம்பெறும்.

22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறுவதுடன் மாலை 5 மணிக்கு விசேட பூசையும் திருவூஞ்சலும் இடம்பெறும்.

உற்சவ குரு கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், ஸ்தானீக கு. பிரம்மஸ்ரீ அ. குமாரராஜசர்மா ஆகியோர் இவ் அலங்கார உற்சவத்தை திறம்பட நடாத்தி வருகின்றனர். (இ)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வியாழக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | மக்கள் முகம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# முல்லை. தூண்டாய் வடக்கு மக்கள் மின்சார வசதி கோரி ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உப்புமாவெளி தூண்டாய் வடக்கு மக்கள் நேற்று தமது பிரதேசத்துக்கான மின்சார வசதியினைக் கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் தாம் மீளக்குடியேற்றப்பட்டு 5 வருடங்கள் கடந்தும், இதுவரை தமக்கு மின்சார வசதி செய்து தரப்படவில்லை என்பதற்காகவே, இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு பிரதேச செயலர் காரியாலயம் முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள தூண்டாய் வடக்கு கிராம மக்கள் தமக்கு அடிப்படை வசதியான மின்சாரத்தைக் கோரியும், பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய வசதிகளுக்கும் அடிப்படை இந்த மின்சாரம் எனவும், இதுவரைக்கும் பல இடங்களில் பேசியும் எந்தத் தீர்வும் தமது கோரிக்கைக்கு பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் பல இடங்களில் பேசியும், மகஜர்கள் கையளித்தும் எந்த தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை. எம்மை யாரும் கவனத்தில் எடுப்பதாகவும் தோன்றவில்லை. எனவேதான் இந்த இறுதி முயற்சியை மேற்கொண்டுள்ளோம் என்று தெரிவித்த மக்கள், இதற்கான சரியான தீர்வைப் பெற்றுத் தரும்படி முல்லைத்தீவு பிரதேச செயலரிடம் கடிதம் மற்றும் கோரிக்கை ஒன்றையும் கையளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களின் தீர்வுக்கான பாதை" பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை யாழ். முகாமையாளர் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது. இக்கலந்துரையாடலானது நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலின் வளவாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர்



வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பாடசாலையில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பிரதேச கிராம மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்றுக் முற்பகல் 11 மணியளவில் வடமராட்சியில் அமைந்துள்ள வலயக்கல்வி அலுவலகத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.நந்தகுமாரிடம் தங்களின் பாடசாலை எதிர்நோக்கிவரும் வளப்பற்றாக்குறை தொடர்பாக எழுத்துமூல ஆவணத்தை சமர்ப்பித்து கலந்துரையாடினார்கள்.

இவர்களது கோரிக்கைளை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இப் பிரதேசங்களில் போக்குவரத்துப் பிரச்சினை காணப்படுவதால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள் இப்பிரதேசங்களுக்கு பணியாற்ற பின்னடிப்பதாகவும் மக்கள் பிரதிநிதிகளால் எடுத்துக்கூறப்பட்டது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வடமராட்சி கிழக்கின் வீதிகள் கழுக நிலை ஏற்பட்டும் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இச்சந்திப்பில் கட்டைக்காட்டு கிராம அபிவிருத்திச் சங்கம் கடற்தொழிலாளர் கூட்டுறவுசங்க பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (25)

# அமைதியான சூழலை பாதுகாக்கக்கூடிய அரசியல் நிலையை உருவாக்க வேண்டும்

**- டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து -**



அமைதியான கௌரவமான சூழலை பாதுகாக்கும் வகையில் மக்கள் அதற்கான அரசியல் சூழ்நிலையையும் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எழுவைதீவு உப அலுவலகம் மற்றும் பொதுநூலகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எழுவைதீவு மக்களுடைய வாழ்வில் இன்றைய நாள் பொன எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியமானதொரு நாளாக அமைந்துள்ளது.

இன்றைய தினம் கடற்கரை வீதி திறந்து வைக்கப்பட்ட அதே வேளை, உப அலுவலகம் மற்றும் பொதுநூலகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக எமது பிள்ளைகள் பரந்தளவிலான அறிவை பெற்றுக் கொள்ளக்கூடியதான சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதுடன், நூலகத்தின் வசதி வாய்ப்புக்களை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

மாணவ சமூகத்தினர் கணனி அறிவில் முன்னேற்றும் காணும் வகையில் அதற்கான தேவைப்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதற்கும் நாம் எண்ணியுள்ளோம்.

அந்தவகையில் முதற்கட்டமாக ஐந்து கணனித் தொகுதிகளை பெற்றுத் தரும் அதே வேளை, எழுவைதீவின் வரலாற்றை ஏனைய மக்களுக்கும் தெரியப்படுத்தும் வகையில் வரலாற்று நூலொன்றை எழுதுவதற்கு நிதி உள்ளிட்ட உதவி ஒத்தாசைகளையும் வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதுமட்டுமன்றி இங்கு முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவோம். 25 வருடங்களுக்கு முன்னர் நாம் இங்கு வருகைதந்த போது மக்களின் பல்வேறுபட்ட கஷ்ட துன்பங்களை நீக்கியிருந்தோம். குறிப்பாக உணவு, மருந்து போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு நிவாரணங்கள் ஊடாக தீர்வைக் கண்டிருந்தோம்.

இன்றும்கூட எமது மக்களின் நாளாந்த வாழ்வியலில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வுகளை கண்டு வருகின்றோம். தற்போது இங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் 24 மணிநேர மின்சாரத்தை பெற்றுக் கொள்கின்றார்களேயென்றால் அது நாம் எடுத்து முயற்சியின் பயனாகவே கிடைக்கப்பெற்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அந்த வகையில் எமது மக்களுக்கு வளமான வாழ்வை பெற்றுக் கொடுப்பதையே நோக்காகக் கொண்டு செயற்படும் அதே வேளை, அமைதியான கௌரவமான சூழலைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் சூழ்நிலையை மக்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டியது அவசியமானது. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்பதே எமது அணுகுமுறையும், நிலைப்பாடுமாகும்.

நீண்டகாலமாக நாம் எதை வலியுறுத்தி வந்தோமோ அதையே இன்றும் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை கூறி குழப்பி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

முன்னதாக புதிய உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து திறந்து வைக்கப்பட்ட நூலகத்தையும் செயலாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலனரின் (உதயன்), பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன், உபதவிசாளர் அல்பேட், பிரதேச சபை செயலாளர் சுதர்ஜன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மக்கள் விடுதலை முன்னணியினால் கிளி.யில் துண்டுப்பிரசுரம் விநியோகம்

மக்களை தெளிவூட்டும் துண்டுப்பிரசுர விநியோகத்தினை நேற்று மக்கள் விடுதலை முன்னணியினர் கிளிநொச்சியில் முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன்,

புதிதாக அரசாங்கம் அமைக்கப்பட்டு நூறு நாள் நிறைவுற்றும் மூன்று வாரமாகியும், 23 ஆம் திகதிக்குப் பின்னர் பொதுதேர்தல் நடாத்துவதாகக் கூறியும் அது நடைபெறவில்லை எனவும். நாட்டில் 100 நாள் அரசாங்கத்தின் பின்னர் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும் எனவும், அப்போது தேர்தல் மூலம் மக்கள் அரசாங்கம் அமையும் எனவும் மக்கள் எதிர்பார்த்ததாகவும் தெரிவித்தார்.

அதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி முயற்சி செய்ததாகவும், அதற்காகவே இத்துண்டுப்பிரசுர விநியோகத்தின் மூலம் மக்களிற்கு தெளிவூட்டி வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த 100 நாட்களிற்குப் பின்னர் பிரதமர் பதவி வகிப்பதற்கோ அல்லது, குறித்த அரசாங்கம் தொடர்ந்தும் இருப்பதற்கோ அருகதை இல்லை எனவும் தெரிவித்தார்.

அதனால் மக்கள் எதிர்பார்த்தவாறு மக்களிற்கு தேவையான அரசாங்கத்தினை அமைப்பதற்காக பொதுத் தேர்தல் ஒன்றை நடாதத வேண்டும் எனவும் குறிப்பிட்டார். 67 வருடங்களாக அரசாங்கங்களினால் மக்கள் ஏமாற்றப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (29)

# தொடர் மழையினால் பயிர்ச்செய்கை பாதிப்பு

யாழ். குடாநாட்டில் தொடரும் மழையினால் சிறுதானியச் செய்கை மற்றும் மரக்கறிச் செய்கை என்பன பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் குடாநாட்டில் வெள்ளநீர் வயல் வெளிகளிலும் தோட்ட நிலங்களிலும் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பயறு, கௌபி, உழுந்து, எள்ளு போன்ற சிறுதானியச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் தாழ்நிலப் பகுதியில் இவ்வாறு செய்கை பண்ணப்பட்ட சிறுதானியங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இது மட்டுமல்லாது பூசணி, வெங்காயம், பாகல், பயிற்றை, கத்தரி போன்ற மரக்கறிச் செய்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளநீர் தொடர்ச்சியாக தேங்கி நிற்பதால் இப்பயிர்கள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் பெரியளவில் வெள்ளப்பாதிப்பால் பயிர்ச்செய்கை பாதிப்படைந்துள்ளது. (இ)

# வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை அனுமதி கிடைத்ததும் இயங்கும்



வடமாகாணத்துக்கென ஒரு வீதி அபிவிருத்தி அதிகார சபையை உருவாக்குவதற்கான நியதிச் சட்டத்தை கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் கையளித்துள்ளேன். இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதும் வடமாகாணத்துக்கான வீதி அபிவிருத்தி அதிகார சபை இயங்கத் தொடங்கும் என வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபைக்குட்பட்ட வீதிகளை புனரமைப்பதற்காக இந்தாண்டு சுமார் 136 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்துக்கு 36 மில்லியன் ரூபாவும் ஏனைய 4 மாவட்டங்களுக்கு தலா 25 மில்லியன ரூபாவும் ஒதுக்கப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோமீற்றர் வீதியை காப்பெற் வீதியாக அமைப்பதற்கு 35 மில்லியன் ரூபா வேண்டும். வடமாகாணத்தில் மிகவும மோசமான முறையில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ள வீதிகளை ஒதுக்கிய நிதி மூலம் கிறேசர்கள் கொண்டு நிரப்பி முதற்கட்டமாக திருத்தும்படி அறிவித்துள்ளேன்.

அடுத்த கட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பவற்றின் உதவியுடன் இந்த வீதிகளை முழுமையாக திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். போரால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் அதிகம் செய்யவிருப்பதால், நிதி உதவி செய்யும் நிதி நிறுவனங்கள் அதிக அக்கறை காட்டவேண்டும் என்றார்.

# விபத்தில் ஒருவர் காயம்

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி திருக்கேதீஸ்வரம் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருட்களை ஏற்றி வந்த கூலர் ரக வாகனமே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

திருக்கேதீஸ்வரம் பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது. இதன்போது வாகனத்தின் சாரதி காயமடைந்த நிலையில் உடனடியாக மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ)

ஐ.பி.எல் - 2015

PEPSI IPL

இன்றைய ஆட்டம்

மும்பை எதிர் கொல்கத்தா

MUMBAI INDIANS VS Knight Riders

இடம்:- மும்பை

நேரம்:- இரவு 8.00 மணி

# நிரந்தர வீடுகள் வழங்கக் கோரி முல்லை செயலகத்தின் முன் ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

நிரந்தரவீடு கோரியும் பிரதேச செயலரை இடம் மாற்றம் செய்யக் கோரியும் பொது மக்கள் மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

ஒட்டுசுட்டான், மாங்குளம், முறிகண்டி, பனிச்சங்குளம், கற்சிலைமடு, முத்துவிநாயகபுரம் ஆகிய கிராம மக்கள் வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளில் கிராம சேவையாளர்களினாலும் பிரதேச செயலராலும் முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு உடமைகள் இழந்து, உயிர்கள் இழந்து பாதிக்கப்பட்ட எம்மை புறக்கணிக்கப்பட்டு வெளி மாவட்டத்திலுள்ளவர்களுக்கு முன்னுரிமைப்படுத்தி கிராமசேவையாளர்களினால் வழங்கப்பட்டதைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பி ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் கோரிக்கை மனுவினை மாவட்ட செயலக கணக்காய்வுப்பிரிவு அதிகாரியிடம் கையளிக்கப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்ட மக்களை மாவட்ட செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் நேரில் அழைத்து குறைபாடுகளைக் கேட்டறிந்ததோடு அதற்கான தீர்வினை விரைவாகப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# புதிய முறையிலேயே தேர்தலை நடத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் விடாப்பிடி

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலுவான கோரிக்கையின் அடிப்படையில் முன் வைக்கப்படுவதாக இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

தொகுதிவாரி மற்றும் கலப்பு முறைகள் அடங்கிய இந்த முறைமை ஜனாதிபதி வேட்பாளராக இருந்த போது மைத்திரிபால சிறிசேனவின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு அமைவாக தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தி, அதன் பிரகாரம் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு எனவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு விசேட ஆணையாளர்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்திருப்பது குறித்து ஊடகவியலாளர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அவர், உள்ளூராட்சி மன்றம் தொடர்பான புதிய தேர்தல் முறைக்கான வர்த்தமானி இதுவரை வெளியிடப்படவில்லை என்பதால் தாம் அதனை நீடிக்குமாறு கோருவதாகக் குறிப்பிட்டார்.

இடைநடுவே தேர்தலை நடத்துவதை விட அதனை நீடித்து, பொதுத தேர்தலுக்கு செல்வது சிறந்தது எனவும் சுட்டிக்காட்டினார்.

# ஜனாதிபதி - பிரதமருக்கு எதிராகவும் முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் எதிராக லஞ்ச ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால் பிரதமர் பதவியை வழங்குவதாக அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தமை ஓர் இலஞ்சம் வழங்குதலாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

1981ஆம் ஆண்டு 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் தனது வெற்றியை உறுதி செய்து கொள்வதற்காக பதவிக்ளை வழங்குவதாக உறுதியளித்தல், பதவிகளை வழங்குதல் மற்றும் பதவிகளை பொறுப்பேற்றலும் இலஞ்ச ஊழலாகவே கருதப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிக்காக பாடுபட்டால் பதவி வழங்குவதாக அறிவித்தமையும் வெற்றியின் பின்னர் பதவியை ஏற்றுக்கொண்டமை காரணமாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இலஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் முடிந்து விட்டது, இனி எங்களது 100 நாள் ஆரம்பமாகியுள்ளது என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்த முடியாது

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதிகளுக்காக அஞ்சலி செலுத்த முடியாது என பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எனினும் போரில் உயிரிழந்த தங்களின் சொந்தங்களுக்காக அஞ்சலி செலுத்த வடக்கு மக்களுக்கு உரிமையுண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இந்த விடயங்கள் குறித்து விரைவில் அறிக்கையொன்று வெளியிடப்படும் என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு அகதி முகாம்களிலிருந்து 65 பேர் நாடு திரும்பினர்

கடந்த காலங்களில் இலங்கையில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை அடுத்து இந்தியாவிற்கு சென்று அங்கு அகதிகளாக வாழ்ந்து வந்த சிலர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

தமிழ்நாட்டு அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த சுமார் 32 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் இவ்வாறு நேற்று விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களை மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் வரவேற்றார்.

இவ்வாறு வருகை தந்த மக்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தாபனம் உதவிகளை அளித்துள்ளது.

மேலும் மக்கள் வங்கி இவர்களுக்கு சிறு தொகை உதவி பணங்களை வழங்கியுள்ளதோடு அவர்களுக்கு வங்கிக் கணக்கொன்று ஆரம்பித்துக் கொடுத்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்கள் சுய விருப்பின் பேரில் நாடு திரும்பியுள்ளதாகவும் அவர்களுக்கான சொந்தக் காணிகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### போர்...

டப்பட்டு வந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் இதனை போர்வீரர்கள் ஞாபகார்த்த நாள் என்று அறிவித்துள்ளது

# பாக். இராணுவத் தளபதியின் பயணம் இறுதி நேரத்தில் இரத்து

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஹீல் ஷரீப் நேற்று இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த ஐந்து நாள் பயணம், கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று பேருந்து ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 47 பேர் பலியான சம்பவத்தை அடுத்தே, பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் இந்தப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தின் சார்பில் மேஜர் ஜெனரல் ஆசீம் சலீம் பஸ்வா, தனது ருவிட்டர் பக்கத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதியின் அழைப்பின் பேரில், பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஹீல் ஷரீப் நேற்று பிற்பகல் கொழும்பு வரத் திட்டமிட்டிருந்தார்.

கராச்சித் தாக்குதலை அடுத்து அவரது பயணம் கடைசி நேரத்தில் கைகூடாமல் போயுள்ளது.

ஏற்கனவே, பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் பயணம் வரிசிஸ்தான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் ஒத்திவைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

### அனந்திக்கு...

பிலவு பகுதியைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்துகொண்டனர்

அனந்தி மற்றும் காணாமற்போனோரின் உறவினர்கள் சிலர் இண்ணந்து முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

### மங்கள...

ஏற்படுத்தியமைக்காக 100 கோடி ரூபா நட்டஈட்டை 21 நாட்களுக்குள் வழங்க வேண்டுமெனவும் அவ்வாறு வழங்கத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் 2000 மில்லியன நட்டஈடு கோரி வழக்கு தொடுக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

### கோத்தாபயவை...

விசாரிக்கும் குழுவில் இருந்து நீதியரசர் புவனேக அலுவிகார தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுவதாக அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், நேற்று கோத்தாபய ராஜபக்ஷவின் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதியரசர்கள் குழு, இந்த வழக்கின் தீர்ப்பு அளிக்கப்படும் வரையில் அவரைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதிப்பதாக அறிவித்தனர்.

### பிரதேச...

கம்பத்தில் ஏணியின் உதவியுடன் ஏறி திருத்தப் பணி மேற்கொண்ட வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. உடனடியாக பிரதேச சபையின் வாகனத்தின் மூலம் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த ஊழியர் மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் முன்னர் கடமையாற்றி 3 மாதங்களுக்கு முன்னரே பிரதேச சபையில் நிரந்தரமாக வேலையில் இணைந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை பருத்தித்துறை நீதவான் ந.கணேசராசா பார்வையிட்டதுடன், இச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிட்டதை யடுத்து நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை நேற்று மேற்கொண்டிருந்தனர். (18,25)

### தொண்டராசிரியர்கள்...

சுமார் 200 ஆசிரியர்கள் கடமையாற்றி வரும் நிலையில் 43 ஆசிரியர்கள் கடந்த 10 வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றதாகவும் சுட்டிக் காட்டினார்கள்.

வடமாகாண கல்வி அமைச்சிடம் தாம் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தமக்கு இதுவரையில் நிரந்தர நியமனம் வழங்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தின் முன்பாக ஒன்று கூடிய இவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் பெற்றுத்தருவதற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவன செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்து மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

அதன்பின்னர் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு சென்று அங்கும் தமது கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்ததுடன், மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

தமது நிலைமையினை உணர்ந்து நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதுடன், நியமனம் வழங்க மறுத்தால் தமது போராட்டத்தினை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தனர். (25)

### தமிழ்...

களுக்கு மறுபடி ஒரு முறை உரக்கச் சொல்லியிருக்கிறது.

ஆட்சி அதிகாரத்தில் உங்களது நேரடி பிரசன்னம் சில காலங்கள் இல்லையென்றாலும், தமிழக மக்களின் மனங்களை நீங்களே தொடர்ந்தும் ஆட்சி புரிந்து வந்திருக்கிறீர்கள். அது போல் ஈழத்தமிழ் மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கிறீர்கள். மீண்டும் தமிழகத்தின் ஆட்சி அதிகாரத்தில் நீங்களே நேரில் உட்கார்ந்து, உங்களது நல்லாட்சியை தொடர மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

ஈழத்தமிழ் மக்களுக்காக நீங்கள் எழுப்பி வந்த உரிமைக் குரல் தொடர வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

... இல. 879 ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.